
Not for sale

நவம்பர் - டிசம்பர் 2014

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom




## வேதாகம வீரரகள்

குறிப்பாக, தனிப்பட்ட, முறையில் நியமிக்கப்பட்ட பணிகள்

ஒரு தூய்மையான கிறிஸ்தவ வாழ்க்கை • ராகாப், தெபோராள் மற்றும் ரூத்

சரியான இடம் மற்றும் சரியான நேரம் • தீர்மானிக்கப்பட்ட ஒரு பிறப்பு

விசுவாசத்தின் இரண்டு பக்கங்கள்

வேதாகம மாவீரர்கள்

# ஆதியிலே



எபிரெயரின் புஸ்தகத்தில், ஜீவனுக்குரிய பாடங்களுக்குப் பாத்திரமாக இருக்கும் எடுத்துக் காட்டுகளாகிய பழைய ஏற்பாட்டின் விசுவாசமுள்ள புருஷர்களையும், ஸ்திரீகளையும் நோக்கும்படி, அப்போஸ்தலனாகிய பவுல் நம்மை ஊக்குவிக்கிறார். அவர்களின் வாழ்க்கையில் விசுவாசமே முக்கிய பகுதியாக இருந்தது. ஆயினும், அவர்கள் தங்களுடைய விசுவாசத்தை எவ்வாறு செயலாற்றினார்கள்? மற்றும் தங்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கோணங்களிலும் அதை எவ்வாறு நடைமுறைப்படுத்தினார்கள்? தேவனுக்காக வாழ்ந்தவர்களுடைய வாழ்க்கையின் மாதிரிகளே வசனங்களில் காணப்படும் சில முக்கியமான மதிப்புள்ள பொக்கிஷங்களாக இருக்கிறது.

"குறிப்பாக தனிப்பட்ட முறையில் நியமிக்கப்பட்ட பணிகள்" என்ற தலைப்பு, நோவா மற்றும் மோசேயின் வாழ்க்கைகளை நோக்குகிறது. நோவா தன்னுடைய வாழ்க்கையில் நூறு வருடங்களைச் செலவழித்து, மற்றவர்கள் நம்பாத ஒரு காரியத்தை ஆயத்தப்படுத்தியதினிமித்தம் அவருடைய உறுதியான நம்பிக்கைக் காணப்பட்டது. மோசே தன்னில் நம்பிக்கையில்லாதவராக இருந்தபோதிலும், தேவன்மேல் அவர் வைத்திருந்த நம்பிக்கையானது அவருடைய தாழ்மையை வெளிப்படுத்தியது.

"ஒரு தூய்மையான கிறிஸ்துவ வாழ்க்கை" என்ற கட்டுரை, தாவீதின் இருதயத்தைக் காண்கிறது. மற்றும் நமக்குத் தேவையான ஒரு மாதிரியும் அது கண்டுபிடித்திருக்கிறது. தாவீது ஒரு மேய்ப்பனாக இருந்தபோது, அவர் ஒரு இராஜாவைப்போல நடித்தார். அவர் இராஜாவானபோது ஒரு மேய்ப்பனாக இருந்தார். சரியான காரியம் என்னவென்று அறிந்துகொண்டதற்கும், மாம்சத்தின் விருப்பத்திற்கும் இடையில் தாவீது அனுபவித்த போராட்டமானது, ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ விரும்புவோருக்கு எச்சரிப்புள்ள ஒரு கதையாக இருக்கிறது.

"ராகாப், தெபோராள் மற்றும் ரூத்" என்ற கட்டுரை, மூன்று வேறுப்பட்ட விசுவாசமுள்ள ஸ்திரீகளைப்பற்றியும், அவர்களின் நம்பிக்கைகள், கனவுகள் மற்றும் அவர்களின் வாழ்க்கையின் உண்மைகளை ஆராய்கிறது. அவர்களின் கரடுமுரடான தனித்துவத்தை தேவன் எவ்வாறு பயன்படுத்தினார்? மிகுந்த உபத்திரவத்திலும் தேவனைப் பிரியப்படுத்தி அவரைச் சேவிக்க வேண்டும் என்ற அவர்களின் விருப்பத்திற்கு உண்மையோடு எவ்வாறு தங்களை அவர்கள் காத்துக்கொண்டார்கள்?

"சரியான இடம் மற்றும் சரியான நேரம்" என்ற கட்டுரை, மரியாள், மார்த்தாள், மகதலேனா மரியாள், லீதியாள் மற்றும் பிரிஸ்கில்லாளின் வாழ்க்கையின் சூழ்நிலைகளை நோக்குகிறது. அவர்களை உருவாக்கக்கூடிய அல்லது அவர்களை உடைக்கக்கூடிய தனித்துவமான காரியங்களை இது ஆராய்கிறது. ஒவ்வொருவரும், இயேசுவோடும், சுவிசேஷத்தோடும் எவ்வாறாக தொடர்பு கொண்டார்கள்? சுவிசேஷம் செழித்தோங்குவதற்கு இவர்கள் ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக எவைகளை விட்டுக்கொடுப்பதற்கு முன்வந்தார்கள்?

"தீர்மானிக்கப்பட்ட ஒரு பிறப்பு" என்ற கட்டுரை, யூத யுகத்தின் முடிவில் மேசியாவை அறிவித்த யோவான் ஸ்நானனுடைய வாழ்கையையும், அவருடைய வேலைகளையும் நோக்குகிறது. சுவிசேஷ யுகத்தில் மேசியாவைக்குறித்து அறிவிக்கக்கூடிய வேலையை, நம்முடைய வாழ்க்கையில் ஒரு மாதிரியாக இதில் காண்பிக்கப்படுகிறது. தேவன் அவருடைய ஊழியக்காரர்களின் எந்த குணங்களை அதிகமாகப் பாராட்டுவார்? யோவான் ஸ்நானனின் வாழ்கையிலுள்ள உண்மையான கஷ்டங்களுக்குள், நமக்குண்டான பொக்கிஷங்கள் புதைக்கப்பட்டிருப்பதை இந்தக் கட்டுரை தோண்டி எடுத்துள்ளது.

"விசுவாசத்தின் இரண்டு பக்கங்கள்" என்ற கட்டுரை, அப்போஸ்தலனாகிய பேதுரு மற்றும் அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கை மற்றும் அழைப்பிலுள்ள ஒப்புமைகளையும், வேறுபாடுகளையும் காண்கிறது. சுவிசேஷ யுக சபையின் ஒரு பகுதியாக இருப்பதற்கு தேவன் அழைத்த ஜனங்களுக்கு தேவைப்படும் குணங்கள் - இரண்டு முக்கியமான மாதிரிகளை பேதுரு மற்றும் பவுலிடம் காணலாம். பேதுருவைப்போல தேவன் நம்மை தெய்வீக உணர்த்துதல் மூலம் அழைத்தால், அவர் நம்முடைய விசுவாசத்தை அறிவில் விருத்தியடையச் செய்வார். பவுலைப்போல நாம் அறிவினால் தேவனிடத்தில் வந்திருந்தால், விசுவாசத்திலும் அதற்குச் சமமான அன்பிலும், அறிவிலும் முழுமைப் பெறுவதற்குத் தேவையான தெய்வீக தூண்டுதலை தேவன் கொடுப்பார்.

**நவ-டிச 2014**


**குறிப்பாக, தனிப்பட்ட முறையில் நியமிக்கப்பட்ட பணிகள்** 2
நோவா மற்றும் மோசே
**ஒரு தூய்மையான கிறிஸ்தவ வாழ்க்கை** 8
தேவனுடைய இருதயத்திற்குப் பிரியமான ஒரு மனுஷன்
**ராகாப், தெபோராள் மற்றும் ரூத்** 13
தேவனுக்கென்று ஒரு வாழ்க்கை
**சரியான இடம் மற்றும் சரியான நேரம்** 19
மரியாள், மார்த்தாள், மகதலேனா மரியாள், லீதியாள் மற்றும் பிரிஸ்கில்லாள்
**தீர்மானிக்கப்பட்ட ஒரு பிறப்பு** 25
யோவான் ஸ்நானன்
**விசுவாசத்தின் இரண்டு பக்கங்கள்** 31
பேதுரு மற்றும் பவுல்
**தீர்க்கதரிசனத்தில் இன்று** 36



நோவா மற்றும் மோசே

# குறிப்பாக, தனிப்பட்ட முறையில் நியமிக்கப்பட்ட பணிகள்

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (எபிரெயர் 11 :1).

Benjamin Stein

**தே**வனுடைய திட்டத்தில், நோவா மற்றும் மோசே பெரும்பாலான வரலாற்றுக்குரிய கதாபாத்திரங்களாக நடித்துள்ளார்கள். தேவனுடைய பணிக்காக அவர்களின் அர்ப்பணிப்பும், உறுதியான நம்பிக்கையும் இந்நாள்வரைக்கும் நமக்கு வல்லமையுள்ள எடுத்துகாட்டுகளாக உள்ளது. நோவா மற்றும் மோசே இருவருமே, தேவனுடைய பணிக்காக தங்களுடைய சித்தத்தையும், ஜீவனையும் சகலத்தையும் கொடுத்தார்கள். இவர்களின் அனுபவங்கள் ஒரேவிதமாக உள்ளது. இருவரும் எல்லை மிஞ்சிய அழுத்தத்தின் மத்தியிலும், கடுமையான சோதனைகளின் மத்தியிலும், தலைமையை ஏற்றுநடத்தி, அற்புதமான இரட்சிப்பில் மகிழ்ந்தார்கள். இவர்கள் பெற்ற அனுபவங்கள், இவர்களின் விசுவாசத்திற்கு அரணான கோட்டையாக நின்று, ஒரு புதிய துவக்கத்தில் முன் செல்ல, தைரியத்தை ஆழமாக மனதில் பதிய வைத்தது. இவர்களின் தனித்துவமான குணங்களும், சிறப்பியல்புகளும் நம்முடைய சொந்த ஆவிக்குரிய வாழ்க்கைக்குத் தேவைப்படும் அற்புதமான கண்ணோட்டங்களைக் கொடுக்கிறது. இவர்களின் வழியாக கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய நம்பிக்கையின் உறுதியைப் பெற்றுக்கொண்டு, காணாதிருந்தும் நம்பக்கூடிய காரியங்களின்மேல் அசையா நம்பிக்கையில் வளர்ச்சியடைவோம்.

### நோவா-உறுதியான நம்பிக்கையுள்ள ஒரு மனுஷன்

நோவா பேழையைக்கட்டின காரியத்தை நாம் அதிகமாக நினைவுகூருகிறோம். திறமைவாய்ந்த ஒரு சாதனை - இதிலிருந்து நாம் பன்மடங்கான பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். தேவனுடைய வாக்குத்தத்தத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் இந்த வேலைக்கு அவருடைய நீண்டகால அர்ப்பணிப்பு, மிகக் கடினமானதாக இருந்திருக்க வேண்டும் - எல்லா நேரங்களிலும் - தொழில்துறை சார்ந்த பெஹமோத்தைப் போன்ற ஒரு கட்டுமானத்தைக் கட்டும்போது மட்டுமல்ல, தவிர்க்க இயலாத சமுதாய தாக்குதல்களையும், அச்சுறுத்தல்களையும், அந்தக் கூட்டத்தின் மத்தியல் அவரும் அவருடைய குடும்பத்தாரும் எதிர்நோக்கயிருக்க வேண்டும். அந்தப் பேழையைக் கட்டுவதினால் அவரைக் கேலி செய்திருந்தால், நோவா அவைகளை புறக்கணித்திருக்கக்கூடுமா? வரலாறு காணாத பெரும்புரட்சியை எதிர்பார்த்துவரக்கூடிய வெள்ளத்தைக்குறித்து அறிவிப்பைக் கொடுத்ததினால் அவர் ஒரு வேடிக்கைப் பொருளானாரா?

இந்தச் செய்திகளைக்குறித்து வசனங்கள் எவ்விதமான விவரங்களையும் கொடுக்கவில்லை. உண்மையில், தேவனுடைய கட்டளைகளுக்கு நோவா கீழ்ப்படிந்ததைக் குறிக்கும்படியாக, ஜலப்பிரளயத்தைப்பற்றிய இந்தக் கதை மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. எவ்விதமான பரியாசங்களோ, சமுதாய அவமதிப்புகளோ வசனங்களில் பதிவு செய்யப்படாவிட்டாலும், யூதா 7-ஆம் வசனத்தில், விழுந்துபோன தூதர்களுக்கு, "அப்பொழுது இருந்த உலகத்தில்" (2 பேதுரு 3:6) அதிகபட்சமான செல்வாக்கு அனுமதிக்கப் பட்டிருந்ததை நாம் அறிந்திருக்கிறோம். நிச்சயமாக இவர்கள் இந்தப் பூமியில் மீதியிருக்கும் நீதிமானாகிய நோவாவின் குடும்பத்தை விசுவாசத்திலிருந்து வீழ்த்துவதற்கு அவரையும் அவருடைய குடும்பத்தினரையும் அதிகமாகப் பரியாசஞ்செய்து, உபத்திரவப் படுத்தியிருப்பார்கள்.

நோவாவின் பதில் என்னவாக இருந்தது? நிச்சயமாக, விசுவாசத்தின் மனுஷன் என்று குறிப்பிடப்படுவதற்கு இசைவாக இருந்தது (எபிரெயர் 11:7). கூடுதலாக, "நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா" (2 பேதுரு 2:5) என்று அப்போஸ்தலனாகிய பேதுரு சாட்சி கொடுக்கிறார். ஆகவே, அவருடைய கிரியைகள் மற்றும் வார்த்தைகளினாலோ, வெளிப்படுத்தப்பட்ட விசுவாசத்தினாலோ அல்லது சொல்லப்பட்ட அனைத்து காரியங்களினாலோ, தன்னைச் சுற்றியிருந்த தீமையான உலகத்திற்கு, தேவனுடைய அன்பையும், வல்லமையையும், பிரதிபலிக்கக்கூடிய மாண்புமிக்க ஒரு சாட்சியாக இருந்தார்.

"நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்;" "நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்" (ஆதியாகமம் 6:9) என்று மோசே நோவாவைப்பற்றி பதிவு செய்திருக்கிறார். ஆகவே, நோவா கேலி செய்யப்பட்டார் என்று குழந்தைகளின் புஸ்தகம் நம்மை அதிகமான நம்பிக்கைக்குள் நடத்துகிறது. ஆயினும், அவர் தேவனுடைய கட்டளைகளைக்

காத்து நடந்தார். தேவனுக்குக் கீழ்ப்படிவதில் அவர் எவ்விதமான தயக்கமும் காட்டவில்லை. ஏனெனில், 100 வருடங்கள் அவர் விசுவாசத்தைக் காத்துகொண்டிருந்த காரியம், அவருடைய நீடியபொறுமைக்கும், விசுவாசத்திற்கும் உண்மை யான ஒரு சோதனையாக இருந்தது.

**நம்பிக்கைக்குறித்து என்ன சொல்லுவோம்?**

நம்முடைய விசுவாசம் எப்படிப்பட்டது? இப்படிப் பட்ட ஒரு வித்தியாசமானதும் பிரமாண்டமானதுமான பேழையை, நம்முடைய பொருளாதாரத் தைக்குறித்தும் கவலைப்படாமல் கட்டுவதற்கு நம்முடைய ஜீவியத்தை அர்ப்பணிப்போமா? ஆயினும், இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்கு நாம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறோமா? மீதியுள்ள நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணிப்பதற்கு நாம் கேட்டுக்கோள்ளப்பட்டிருக்கிறோம் அல்லவா? (நூறு வருஷங்களுக்குக் குறைவான வருடங்கள் தானே). நம்முடைய சொந்த மாம்சத்தோடும், பிசாசோடும், இந்த உலகத்தோடும் போராடக்கூடிய இந்தப் பணியில் நம்முடைய அன்றாட கவனமும், இடைவிடாத முயற்சிகளும் ஏறெடுக்கப்பட வேண்டுமல்லவா? இந்த உலகத்திற்கெதிரான நம்முடைய போராட்டத்தில், மற்றவர்களைக்காட்டிலும் ஒரு விநோதமான ஜனங்களாக நாம் தனித்து நின்று, பரியாசஞ் செய்வதற்கு ஏதுவாகவும், ஆவியில் ஜெநிப்பிக்கப்படாதவர்களின் பார்வையில் நம்முடைய உழைப்புகள் மதியீனமாகவும் தோன்றுமல்லவா?

உண்மையில், நம்முடைய அர்ப்பணிப்பு மற்றும் நம்முடைய பரலோக அழைப்பை, பேழையைக் கட்டுவதற்கு பரலோகத்திலிருந்து நோவாவிற்குக் கொடுக்கப்பட்ட மாபெரும் வேலைக்கு ஒப்பிடலாம். நாம் நம்முடைய சகலத்தையும் அர்ப்பணிப்பதுபோல, நோவாவும் தன்னுடைய நேரம், சக்தி மற்றும் அனைத்தையும், பரலோகத்திலிருந்து கொடுக்கப்பட்ட வேலைகளுக்குத் தத்தம் செய்தார். சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட நோவா, தம்முடைய தீர்வு காணும் திறனை நீடிய சகிப்புத் தன்மையோடு உறுதிப்படுத்தினார். நம்முடைய போராட்டங்களையும் இந்த கண்ணோட்டத்தில் காணமுடியுமா? நாம் தோல்வியடையமாட்டோம் என்று உண்மையில் நம்பினால் நாம் எவைகளை நிறைவேற்ற முடியும்? இதே சூழ்நிலையில், நம்முடைய போராட்டங்களை நாம் காணலாமா? நம்முடைய உயர்குடி மக்களால் நாம் புறக்கணிக்கப்பட்டாலும், அவர்களில் நட்பை இழப்பதற்காக நாம் துக்கிக்கக்கூடாது. அதற்குப்பதிலாக, நம்மிடமிருந்து அவர்களின் நட்பைப்பிரித்த தேவனுடைய அறிவில் நாம் பாதுகாப்பாக இளைப்பாறி மகிழ வேண்டும். நம்முடைய நம்பிக்கையின் அதேநிலைக்கு நம்முடைய உறுதியான நிலையை உயர்த்த முடியுமா?

நோவாவின் வேலைக்கு வல்லமையுள்ள அறிவாற்றலும், கூர்மதியும் மற்றும் தொழில் நுட்பமும் தேவைப்பட்டது. அந்தப் பேழையைக் கட்டுவதற்கு நோவா நேரடியாக தேவனிடமிருந்து திட்டங்களைப் பெற்றிருந்தாலும், அந்தப் பேழை கட்டுவதற்கு மிகக் கடினமாக இருந்திருக்க வேண்டும். இந்த நீண்ட செயல்முறை திட்டத்திற்கு உறுதியான அறிவாற்றல் தேவைப்பட்டிருக்கும். கைகளினால் பயன்படுத் தப்படும் கருவிகளை வைத்துக்கொண்டும், நான்கு மனுஷருடைய பிரயாசத்தில் இப்படிப்பட்ட பிரமாண்டமானப் பேழையை இந்நாளில் கட்டுவது நிச்சயமாக சந்தேகத்திற்குரியதே. தேவன் நோவாவிடம் அதன் அளவுகளையும், திசைகளையும் மட்டுமே தந்திருந்தார்... அதற்குமேல் ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆகவே, நோவாவின் புத்திக்கூர்மை தெளிவாகத் தெரிகிறது.

இப்படிப்பட்ட பேழையைக் கட்டுவதற்கு நோவா தன்னுடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட பயிற்சி எடுத்திருக்க வேண்டும்? இந்தப் பேழையை திறமையாகக் கட்டுமளவுக்கு ஒருவேளை இவர் ஒரு கட்டிட கலைநிபுணராகவோ, தொழிலாசிரியராகவோ இருந்திருக்கலாம். இப்படிப்பட்ட அனுபவங்களை நோவா தன்னுடைய வாழ்க்கையின் முதல் 500 வருடங்களில் பெற்றிருக்க வேண்டும். அல்லது நேரடியான முறையில் அவர் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். இந்தப் பேழையைக் கட்டுவதற்குத் தேவையான திறமைகளையும், தொழில் நுட்பங்களையும் நோவாவுக்கு தேவன் நிச்சயமாகத் தந்திருந்தார். அதுபோல, தேவன் தம்முடைய பிள்ளைகள், தம்மை சேவிப்பதற்குத் தேவையான சகல காரியங்களையும் தருகிறார்.

அநேகர், "ஞானிகளாக இராதபோதிலும்" அழைக்கப்பட்டிருக்கிறோம் (1கொரிந்தியர் 1:26). ஞானத்தையும், புரிந்துகொள்ளுதலையும் தேவனுடைய பரிசுத்த ஆவியினிடமிருந்து பெற்றுக்கொள்ளுகிறோம். ஆகவே, நோவா பேழையைக் கட்டுவதற்கு திறமையைப் பெற்றதுபோல, பரலோகத்திலிருந்து நாம் பெற்ற அனைத்து வேலைகளையும் நிறைவேற்றி முடிப்பதற்கு தேவனிடமிருந்து அறிவாற்றலைப் பெற்றிருக்கிறோம். அதைக்காட்டிலும் பொறிசார்ந்த அருஞ்செயலை செய்தார் என்று கூறப்படுகிறது. தேவனுடைய பணியைச் செய்துமுடிக்க தேவைப்படும் செய்திகளையும், புரிந்துகொள்ளுதல் களையும் இந்த மனிதர்களுக்குத் தேவன் கொடுத்தார்.

இவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் அனுபவங்களினாலும், தேவனிடத்திலிருந்து வந்த

தூண்டுதலினாலும் தங்களுடைய திறமைகளை சாணைப்பிடித்தார்கள். பயிற்சியினாலோ, அல்லது பரிசுத்த ஆவியின் தலையிடுதலினாலோ நமக்கு முன்னிருக்கும் கடுமையான வேலைகளைப் புரிந்துகொள்வதற்கும், அவைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான ஆயத்தங்களை, தேவனிடத்தில் அர்ப்பணித்தவர்களாகிய நாமும் நிச்சயமாகப் பெற்றுக்கொள்வோம் (பிலிப்பியர் 1:6). நோவா வருங்காலத்தில் காணாதவைகளை விசுவாசித்ததினால் நீதிமானாக்கப்பட்டார். அவருடைய இருதயத்தில் வல்லமையுள்ள அசையா நம்பிக்கையைப் பெற்றிருந்தார். அவருடைய மாதிரியில், நாம் இதே பாதையில் செல்ல ஊக்குவிக்கப்படுகிறோம்.

**மோசே-சாந்தத்தின்(தாழ்மை)ஒரு மாதிரி**

நோவாவைப்போல, எகிப்தை விட்டு இஸ்ரயேலர்களை வெளியே அழைத்து வந்து, நியாயப்பிரமாணத்தை ஸ்தாபிக்கக்கூடிய ஒரு முக்கியமான பணியை மோசே தேவனிடமிருந்து பெற்றார். நோவாவைப்போல மோசேயும், தேவனிடத்திலிருந்து பெற்ற அழைப்பில், ஜனங்களுடைய அழுத்தத்தின் மத்தியில் தலைமை வகித்து, அற்புதமாக மீட்டு இரட்சித்து, ஒரு புதிய வாழ்க்கைக்கும், ஒரு புதிய துவக்கத்துக்கும் அவர்களை ஏற்படுத்தினார். நாம் மோசேயின் வாழ்க்கையை நெருங்கி கண்ணோக்குகையில், நம்முடைய சொந்த ஆவிக்குரிய வாழ்க்கை முன்னேறி செல்வதற்குப் பல பயனுள்ள தகவல்களையும், ஆழமான காரியங்களையும் கண்டடையலாம்.

மோசேயின் கடந்த கால நிகழ்வுகளின் கால அட்டவணை, நம்முடைய சொந்த ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்கு நம்முடைய முயற்சிகளின் ஒரு பிரதிபலிப்பாக இருக்கிறது. பிறக்கக்கூடிய சகல ஆண் குழந்தைகளையும் நைல் நதியில் எறிந்து மூழ்கடிக்க வேண்டும் என்ற உத்தரவை பார்வோன் பிறப்பித்தபோது, மோசே, மூன்றாவது குமாரனாகப் பிறந்திருந்தார். மோசேயின் குணம் வெளிப்படுவதற்கு முன், குழந்தையாக இருந்த மோசேயை ஒரு நாணற்பெட்டியில் வைத்து, நதியில் மிதக்கச் செய்த அவருடைய பெற்றோராகிய யோகெபேத் மற்றும் அம்ராம் எடுத்த முடிவில் அவர்களின் விசுவாசம் வெளிப்படுத்தப்பட்டது. அவர்கள் தேவன்மேல் வைத்திருந்த முழு விசுவாசமானது, அந்தக் குழந்தையின் விதியை தேவனுடைய கரங்களில் விட்டுவிடுவதற்கு மிகுந்த உறுதியாக இருந்திருக்க வேண்டும். தேவன் அவர்களுடைய குழந்தையைக் காப்பாற்றுவார் என்று முழுமையாக நம்பினார்கள். இதற்குக் கூடுமானளவுக்கு உத்திரவாதமளிக்கும்படியாக தங்களுடைய வல்லமையினால் செய்ய முடிந்த எல்லாக் காரியங்களையும் செய்தார்கள். ஆயினும், ஒருமுறை அந்த நாணற்பெட்டி தண்ணீரில் மிதக்க விடப்பட்டபின் மோசேயின் வாழ்க்கை முழுமையாக தேவனுடைய கரங்களில் மட்டுமே இருந்தது.

இவர்களின் விசுவாசத்திற்கு, தேவனுடைய அற்புதமான இரட்சிப்பு பரிசாக அளிக்கப்பட்டது. ஒரு மகத்துவமான நோக்கத்திற்காக இப்படிப்பட்ட மரணத்திலிருந்து மோசே காப்பாற்றப்பட்டார். பெற்றோர்களாகிய நாம், நம்முடைய சொந்த பிள்ளைகளின் இரட்சிப்பின் மேல் எவ்வளவு வல்லமையுள்ள ஆற்றலைப் பெற்றிருக்கிறோம்! தேவன் வல்லமையான வழியில் நம்முடைய குழந்தைகளைப் பயன்படுத்துவதற்கு, நாம் அவர்களை ஒப்புகொடுக்கக்கூடிய முழு விசுவாசத்தை தேவனிடத்தில் பெற்றிருக்கிறோமா? நோவா மற்றும் அவருடைய பெற்றோரைப்போல, தேவன் அவருடைய மாபெரும் திட்டத்தில் நம்மை பெரியதான காரியத்திற்கோ, அல்லது சிறியதான காரியத்திற்கோ தெரிந்துகொண்டால், அவர் நம்மை சமமான பராமரிப்போடும் கவனத்தோடும் இவ்வழியில் நடத்துவார் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். தேவனுடைய திட்டத்தில் நம்முடைய நோக்கங்களும் கடந்துவிடும்.

**தெய்வீக பராமரிப்பு**

இப்படியாக, பார்வோனுடைய குமாரத்தியின் பாதுகாப்பில் மோசேயின் வாழ்க்கை துவங்கியது. உண்மையில் கடவுளின் அருளால், மோசே தன்னுடைய சொந்த தாயால் சுமார் ஏழு வருடங்கள் வளர்க்கப்பட்டார். நிச்சயமாக அந்நேரத்தில், மோசேயின் பாரம்பரியத்தைக் குறித்தும், யூத ஜனங்களோடு தேவன் செய்த உடன்படிக்கையின்மேல் அவள் கொண்டிருந்த அசையாத விசுவாசத்தைக் குறித்தும் மோசேயின் தாய் அவரிடம் கூறினாள். மோசேயின் வளர்ப்பிலோ, மீட்பிலோ (அவரின் பெற்றோர் அவரை மறைத்து, ஒரு பெட்டியில் வைத்து நதியில் விட்டார்கள்) அவருக்கு எவ்விதமான பங்கோ, பொறுப்புகளோ இல்லை. அதற்குப்பதிலாக சகலமும் தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள் இருந்தது. தேவன் அந்த நாணற்பெட்டியை பார்வோன் குமாரத்தி ஸ்நானம் செய்யும் இடத்திற்குப் பாதுகாப்பாக எடுத்துச் சென்றார். அந்தக் குழந்தையை தன்னுடைய சொந்த குழந்தையாக ஏற்றுக்கொள்வதற்கு அவளுடைய மனதை ஆயத்தப்படுத்தினார். நாம் பலமுறை இந்தக் கதையைக் கேட்டு படித்திருந்தாலும், அது ஒரு **அற்புதம்** என்பதை எப்போதும் நாம் நினைவில்கொள்ள வேண்டியது மிக முக்கியம். தேவனுடைய அற்புதமான குறுக்கீடின்றி இவைகள் நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை.

தேவனால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை! நம்முடைய வாழ்க்கையும் தேவனுடைய கட்டுப்பாட்டிலுள்ளது. மேலும், மோசேயைப்போல நம்முடைய வாழ்க்கையிலும் அவருடைய நோக்கமுள்ள திட்டம் மிக முக்கியம் என்பது நிரூபிக்கப்படும். நம்முடைய அற்புதங்களின் தேவன், நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில், நாம் அவருடைய பணியைச் செய்வது நன்மைகளைப் பெறுவதற்கு, சூழ்நிலைகளை மேற்கொள்ளும்படியாக இப்பொழுது, கிரியை செய்து கொண்டிருக்கிறது (மத்தேயு 6:25-33; 1 தெசலோனிக்கேயர் 5:24). நாம் ஓர் அநீதியில் உபத்திரவப்படும்போதோ அல்லது தேவனுடைய நோக்கங்களைப் புரிந்துகொள்ளாத பட்சத்திலோ அல்லது நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வழிநடத்தக்கூடிய கரங்களை நாம் உணராதபோதும் நாம் இதை நினைவுகூர வேண்டும். நாமும் கட்டுப்பாடின்றி தனியே மிதப்பதுபோல தோன்றினாலும் தேவன் நம்மோடும் இருக்கிறார்!.

மோசே பெரியவனாக வளர்ந்துபோது, யூதர்களின் பாரம்பரியத்தை நம்பி, அதனால் உள்ளுணர்வுப் பெற்றார். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் துவக்கத்தில், உறுதியான அஸ்திபாரத்தைத் தொடர்ந்து போட வேண்டும் என்பதை நாம் நினைவில்கொள்வது மிக அவசியம். கிறிஸ்துவுக்குள் நாம் ஆரோக்கியமாக வளர்ச்சியடையவதற்கு தேவன் நமக்கு வாய்ப்பளிப்பார் என்ற உறுதி, மோசேயின் மாதிரியின் வழியாக நாம் பெற்றிருந்தாலும், நாம் அவரைத் தேடினால், கிறிஸ்துவின் வழியாக நாம் அவரைக் கண்டடையலாம் (எபிரெயர் 11:6).

**கடவுளின் அருள்**

எகிப்தின் இராஜரீகமான கலை கழகத்தில் மோசே, விஞ்ஞானம், தொழில் நுட்பம், மற்ற கலைகள் மற்றும் பொறியியல் கோட்பாடுகளையும் கற்றுக்கொண்டார். இந்தத் தனித்துவமான வாழ்க்கையின் அனுபவத்தில் தேவன் மோசேக்குக் கொடுத்திட்ட அந்தக் கல்வி திரளான ஜனங்களை வெளியேற்றி வழிநடத்த உதவியது. இனிவரும் தேவனுடைய நோக்கத்திற்காக மோசேயின் வாழ்க்கையின் துவக்கத்திலிருந்தே தேவன் அவருக்கு ஒரு சிக்கலான திட்டத்தை வைத்திருந்தார். அந்தத் திட்டத்தில் நாம் தேவனுடைய மாட்சிமையையும் மற்றும் மேன்மையையும் காணலாம்.

ஜனங்களை வெளியேற்றுவதற்கு முன் வனாந்தரத்தில் ஒரு மேய்ப்பனாகப் பணிபுரிந்து அனுபவத்தினால் மற்றொரு பெரிதான பயிற்சியை மோசே பெற்றார். ஒருவேளை எந்த நோக்கமுமில்லாமல் வனாந்தரத்தில் அலைந்து கொண்டிருப்பதாக மோசேக்கு தோன்றியிருக்கலாம். ஆயினும், தேவன் அவரை ஒரு மிகப்பெரிய வேலைக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்ததை நாம் அறிவோம். மோசே தன்னுடைய மந்தையை ஆபத்திலிருந்து காத்துக்கொண்டு, ஆடுகளின் பல்வேறு செயல்முறைகளை ஆராய்ந்துக் கொண்டிருந்தார். மேலும், அவைகளை நடத்தக்கூடியவிதங்களை அவர் கற்றுக்கொண்டிருந்தார். மற்தையைக் காத்து அவைகளை வழிநடத்துவதில் மோசே முழு கவனம் கொண்டிருந்தார். இப்படிப்பட்ட ஒரு பயிற்சியானது, தேவனுடைய ஜனங்களை வழிநடத்தி பாதுகாப்பதற்கு, மோசேயை திறமையுள்ளவராக்கியது. வணங்கா கழுத்துள்ளவர்களும், புரட்சிக்குரிய இஸ்ரயேல் ஜனங்களை வழிநடத்துவதற்குத் தேவையான அதிகப்பட்சமான பொறுமையில் மோசே வளர்ச்சியடைய வேண்டியதாக இருந்தது (உபாகமம் 9:6).

எகிப்தில், மோசே உயர்வான சமுதாய நிலையில் மகிழ்ச்சியாக இருந்தார். இதுவும் வல்லமை என்கிற போர்வையில் இருந்தது. ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. மோசே தன்னுடைய யூத சகோதரனுக்கு எதிராக ஒரு அநீதியான செயலைக் கண்டபோது துல்லியமான நீதியை நிறைவேற்றும்படியாக, தான் பெற்றிருந்த அதிகாரத்தையும் வல்லமையையும் பயன்படுத்தி அந்த எகிப்தியனைக் கொன்று போட்டார். அதற்குப் பின், அவருக்கு எதிராக சமுதாயத்தில் பல்வேறு எதிர்ப்புகள் வந்தபோது வனாந்தரத்தில் ஒரு மேய்ப்பனாக பணியாற்றும்போது எவ்விதமான வல்லமைகளையும் பெறாதவராகவும், சமுதாய உயர்நிலையில் இராதவருமாகச் செயல்பட்டார். ஆயினும், இப்படிப்பட்ட சூழ்நிலையில் மோசே மேலும் அதிகமான விவேகமுள்ள புத்திமதிகளைக் கற்றுக்கொண்டு, ஆடுகளை பாதுகாப்பதற்குத் தேவைப்படும் முறைகளைக்குறித்து முடிவெடுத்தார். மந்தையில் நம்பத்தக்க உறவையும் அவருக்குள் சாந்தத்தையும், தாழ்மையையும் வளர்த்துக் கொள்ளவும், பிதாவாகிய தேவன் அவரை ஒரு மேய்ப்பனாக ஏற்படுத்தினார். நினைவுபடுத்திப் பார்க்கும்பொழுது மோசேயின் வாழ்க்கையில் காணப்படும் இந்த இரண்டு பகுதிகளில், தேவனுடைய அருளை நாம் காண்பதற்கு எளிதாக உள்ளது. இப்படிப்பட்ட ஆழமான அறிவுடன் நம்முடைய சொந்த வாழ்க்கையிலும், இப்படிப்பட்ட வளர்ச்சியின் நிலைகளில், தேவனுடைய கரத்தை மிக நெருக்கமாக நாம் கண்ணோக்கலாம்.

ஆடுகளின் மேய்ப்பனாக மோசே பெற்ற அனுபவத்தினால் முக்கியமாக இஸ்ரயேலர்களின் தலைவராக இருப்பதற்கு நிரூபிக்கப்பட்டார்.

அவர்கள் மோசேயை தங்களுடைய இரட்சகராகப் பார்த்தார்கள். மேலும், அவர்களின் பிரச்சனைகளையும் சண்டைகளையும் தீர்ப்பதற்கு அவருடைய ஞானத்தையும் நேர்மையையும் பயன்படுத்திக்கொண்டார்கள். வனாந்தரத்தில் மோசே பெற்ற விலையுயர்ந்த அனுபவமில்லாமல் அவர் தேவனுடைய அருளைக்கண்டிருக்க இயலாது. அனுகூலமான நம்முடைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது விசேஷமான நோக்கத்திற்காகவும், அவருடைய பின்வரும் வாழ்க்கையில் அவர் நடப்பிக்கக்கூடிய மிகப்பெரிய வேலைகளுக்குத் தேவைப்படும் எல்லா அனுபவங்களிலும் தேவனுடைய விரல் செயல்பட்டுக் கொண்டிருந்ததை நாம் பார்க்கலாம்.

முதிர்ந்த வயதாகிய எண்பதாம் வயதில், மோசே எரிகிற முட்புதரில் தேவனோடு தனிப்பட்ட உறவைத் துவங்கினார். நாம் எண்பது வயதை அடையும்போது, எப்படிப்பட்ட புதிய துவக்கத்தை துவங்குவதற்குத் தகுதியாக இருக்க முடியும்? மோசே தன்னுடைய ஜனங்களை விட்டுப்பிரிக்கப்பட்டிருப்பதை எண்ணி வருத்தப்பட்டாலும், ஒரு பயனுள்ள காரியத்திற்கு பரலோக பிதா அவரை ஆயத்தப்படுத்தினார் என்பதை நாம் மோசேயின் அனுபவத்தில் பார்க்கும்போது, நம்முடைய பரம பிதாவின் அற்புதமான ஊக்குவிக்கும் திறனைக் காணலாம்.

**அவருடைய எடுத்துக்காட்டைப் பயனப்படுத்தி**

மோசேயின் வலிமையை எடுத்துக்காட்டாக முன்வைத்து, தேவன் நமக்குத் தரும் ஒவ்வொரு மகிழ்ச்சி மற்றும் கடினமான சூழ்நிலைகளை நம்முடைய அனுபவத்தில் பொருத்தி, விசுவாசத்தில் உறுதிப்படுவோம். மோசேயைப்போல, நம்முடைய அனுபவங்களில் இன்னும் அதிகமான திறமைகளை வளர்ச்சியடைய செய்வதற்கான முயற்சிகளின் நம்பிக்கையானது, நம்மைத் தேறின ஊழியக்காரர்களாக மாறுவதற்கு உதவி செய்யும். தேவன் மோசேயிடம் கொடுத்திருந்த பணி மிகப் பெரியதாக இருந்தது. அதாவது, மோசே தன்னுடைய வாழ்க்கையில் மூன்றில் இரண்டு பகுதிகள் தேவன் தந்திட்ட வேலைகளைச் செய்வதற்கு ஆயத்தப்பட்டார். ஆனால், எரிகிற முட்செடியின் அனுபவத்தை அவர் பெறும்வரையில், இந்த உண்மையை மோசே அறியாதிருந்தார். அதுபோல, நம்முடைய வருங்கால அனுபவத்திற்கும், ஊழியஞ்செய்யும் வாய்ப்புக்கும் மட்டுமல்ல, திரைக்கு அப்பால் நாம் செய்ய வேண்டிய வேலைகளுக்காகவும் தேவன் இப்போது நம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார். ஆனால், இக்காலத்தில் அந்த வேலைகளைக்குறித்து தெளிவாக நமக்கு அறிவிக்கப்படவில்லை. தேவனுடைய இப்படிப்பட்ட வழிநடத்துல்களுக்கு நாம் குருடராக இருந்துவிடக்கூடாது. நம்முடைய வாழ்க்கையில் வரும் போராட்டங்கள், கண்ணீர், சந்தேகங்கள் மற்றும் அனைத்துவிதமான பயங்களும், நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய சிறப்பான திட்டம் என்பதை நாம் அறிந்துகொள்ளும்போது எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது. தேவனுடைய மாட்சிமையுள்ள நோக்கங்களுக்காக தேவன் நம்மை ஆயத்தப்படுத்துகிறார்.

ஒருவேளை, மோசேயின் தாழ்மையே அவரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய சிறப்பான பாடமாக இருக்கலாம். அவர் எதிர்பாராதபோது மோசேயின் வாழ்க்கையில் தாழ்மையும், சாந்தமும் நிதானமாக உறுவேற்றப்பட்டது. எந்த மனுஷனைக்காட்டிலும் மோசே மிகுந்த சாந்தமுள்ளவர் என்று அழைக்கப்பட்டார் (எண்ணாகமம் 12:3). எரிகிற முட்செடியின் மத்தியிலிருந்து தேவன் மோசேயை சந்தித்தபோது, இந்த வேலையைச் செய்வதற்கு இன்னும் சிறந்த மனுஷர்கள் இருக்கிறார்கள் என்று மோசே தேவனிடம் வலியுறுத்தினார். ஆயினும், தேவனுடைய வல்லமையினால் மகத்தான காரியங்களைச் செய்ய முடியும் என்று தேவன் மோசேயை ஊக்குவித்தார். அதுபோல, அப்போஸ்தலனாகிய பவுலால் எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்குள் செய்ய முடிந்தது (பிலிப்பியர் 4:13). தயக்கத்திற்கு இடங்கொடாமல், தேவனால் பயன்படுவதற்கும் அவருக்குக் கீழ்ப்படிவதற்கும் தன்னை நிரூபிக்க மோசே ஆயத்தமானார். நம்முடைய நிச்சயமில்லா நிலையிலும், போராட்டங்களிலும், கண்ணீரிலும், வாழ்க்கையின் இந்த சாட்சி ஒரு விலையேறப்பெற்ற பாடமாக உள்ளது.

எந்தக் காரியத்தைச் செய்தாலும், தேவனிடத்தில் அதற்கான உதவியைக் கேட்டு முரணற்ற ஒரு தெளிவானப் பாதையை மோசே நமக்காக வகுத்திருக்கிறார். மோசே எகிப்துக்கு திரும்பியதிலிருந்து தன்னுடைய வாழ்க்கையின் முடிவுபரியந்தம்வரைக்கும், ஒவ்வொரு காரியத்திற்கும் தேவனிடத்தில் வழிநடத்துதலைக் கேட்டு, விசுவாசத்தோடு அதைப் பின்பற்றினார். மோசே தேவனிடம் மன்றாடியபோதும், தேவ சித்தம் செய்வதில் எவ்விதத்திலும் அவர் பின்வாங்கவில்லை, நாமும் இப்படியாக இருக்க வேண்டும். கூடுதலாக பூமிக்குரிய சந்தோஷங்களைப் பொறுத்தவரையில் அவருடைய செயல்பாடுகள் உணர்ச்சியற்றதாக இருந்தது. பரலோக பிதா கேட்ட காரியத்தை விசுவாசத்தோடு நடப்பித்தார். மற்றும் எகிப்தின் சந்தோஷத்தை அவர் விட்டுக்கொடுத்தார். மேற்கூறப்பட்டுள்ள இந்த இரண்டு காரியங்களுக்காக அவரை எப்போதும் சமமாக நினைவுக்கூர வேண்டும்

(எபிரெயர் 11:25-26). மோசேயின் மாதிரியானது நம்முடைய ஆவியை உறுதிப்படுத்துகிறது.

**முழுமையான ஈடுபாடு**

மோசே தேவனோடு, முழுமையான ஈடுபாட்டைக் கொண்டிருந்தார். இதற்கு ஆதாரமாக மோசே இரண்டு கற்பலகைகளோடு சீனாய் மலையிருந்து இறங்கும்போது இஸ்ரயேல் ஜனங்கள் அவருடைய முகம் பிரசாசிப்பதைக் கண்டார்கள் (யாத்திராகமம் 34:29). இஸ்ரயேல் ஜனங்கள் எவ்வாறு செயல்பட்டார்கள்? மோசேயைக் கண்டு அனைவரும் பயந்தார்கள், அவருடைய சகோதரனாகிய ஆரோனும் பயந்தார். இஸ்ரயேல் ஜனங்கள் மோசேயின் பிரகாசமுள்ள முகத்தைக் கண்டார்கள், மோசேயிடம் காணப்பட்ட இந்த மாற்றம், மோசேயிடம் தேவன் காட்டின கிருபைகளுக்கு ஏற்ற சாட்சியின் அடையாளமாக இருந்தது.

நாம் தேவனோடு முழுமையான ஈடுபாட்டைக் கொண்டிருக்கிறோமா? இந்த ஈடுபாட்டின் பிரதிபலிப்பை மற்றவர்கள் நம்முடைய முகத்தில் காணமுடிகிறதா? தன்னுடைய முகப்பிரகாசத்தைக் குறித்து மோசே அறியாதிருந்தும், தேவனுடைய ஒளியையும், இஸ்ரயேலர்கள் மேல் அன்பையும் அவர் உண்மையில் பிரதிபலித்தத்தினால் அவர்கள் அந்தப் பிரமாணத்தைப் பெற்றார்கள். மோசேயைப்போல, நாமும் முழுமையாக தேவனுடைய சித்தத்தை நோக்கி கவனம் செலுத்த வேண்டும். இந்த ஒரு நிலையானது, பூமிக்குரிய ஆறுதல்களையும், நம்பிக்கைகளையும், கனவுகளையும், நம்மைவிட்டு அகற்றி பரலோக பிதாவுக்குப் பணியை உடனடியாகச் செய்ய உதவி செய்யும்.


சரியான தலைமைக்கு ஜெபம் ஒரு அஸ்திபாரம் என்று மோசே காட்டினார். மோசேயின் வாழ்க்கையின் முதல் எண்பது வருடங்கள் ஒரு தலைவராக தேவன் ஆயத்தப்படுத்தியபோது, அந்தப் பயிற்சிக்கான சோதனை வனாந்தரத்தில் வைக்கப்பட்டது. இஸ்ரயேல் ஜனங்கள் வியக்கத்தக்க மாற்றத்தை அடைந்தார்கள். அவர்கள் அடிமைதனத்திலிருந்து விடுதலைப் பெற்ற தேவனுடைய பிள்ளைகளாக மாறினார்கள். ஆச்சரியவிதமாக, சிலர் மோசேயின் தலைமைக்கு எதிராக, வெளிப்படையாக அதிருப்தியில் வளர்ச்சியடைந்தார்கள். ஆகவே, தன்னை வழிநடத்தும்படிக்கு மோசே தேவனிடம் வேண்டினார். (எடுத்துக்காட்டாக, எண்ணாகமம் 11:2-ஆம் வசனத்தில் ஜனங்கள் மோசேயிடம் முறையிட்டபோது, அதற்குப்பதிலாக அவர் ஜெபித்தார்). அதுபோல, நாமும் தலைமை வகிக்க அழைக்கப்பட்டால், ஜெபமே நம்முடைய முடிவுகளில் முக்கிய இடத்தைப் பெற வேண்டும். மோசே சோதிக்கப்பட்டதுபோல, நம்முடைய பரலோக தந்தை, அவருடைய விலையேறப் பெற்ற கனிகளை வளர்ச்சியடையச் செய்வதற்கு நம்மை சோதிக்கிறார்.

ஐசுவரியமுள்ள ஜெப ஜீவியத்திற்கு எடுத்துகாட்டாக மோசேயை நாம் பார்க்கலாம். தான் அழியாமல், ஆதரவு அளிக்கக்கூடிய முக்கியக்கூறாக அவருடைய ஜெப ஜீவியம் இருந்தது. இதற்குச் சமமான மதிப்பை நம்முடைய வாழ்க்கையிலும் பெறலாம். இந்த அண்டசராசரத்தை சிருஷ்டித்தவரோடு தொடர்புகொள்ளும் வாய்ப்பை இந்த ஜெபம் நமக்குத் தருகிறது. சில நேரங்களில் நம்முடைய அனுபவங்கள் மிகவும் வருத்தமாயிருக்கிறது. ஆனால், மோசேயின் வாழ்க்கையைப்போல நம்முடைய வாழ்க்கையிலும் நம்முடைய அனுபவங்கள் நம்முடைய குணங்களையும், விசுவாசத்தையும், தேவனைப்பற்றிய புரிந்துகொள்ளுதலிலும் வளர்ச்சியடையவதற்கு தேவனால் வடிவமைக்கப்பட்டுள்ளது. நம்முடைய ஒவ்வொரு அனுபவங்களோடு, தேவனிடத்தில் ஜெபத்தில் தரித்திருப்போம். மோசேயைப்போல நாமும் தேவனுக்கு முன்பாக நேர்மையாக நடப்போம். நம்முடைய வாழ்க்கையில், தேவனுடைய குறுக்கீட்டை புரிந்துகொள்வதில் உணர்வுள்ளவர்களாக இருப்போம்.

பழைய ஏற்பாட்டில், சுவிசேஷ அழைப்பு கொடுக்கப்படுவதற்கு முன், இந்த இரண்டு மேன்மையான மனிதர்களின் வாழ்க்கையின் வழியாக ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை தேவன் ஊக்குவிக்கிறார். தேவன் அவர்கள் இருவருக்கும் தனித்தனியாக குறிப்பான வேலைகளை நியமித்தார். நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்விலும், தேவன் அதே காரியத்தைச் செய்து கொண்டிருக்கலாம் (2 கொரிந்தியர் 6:1-2). மோசே மற்றும் நோவாவைப்போல புராண காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கவில்லையே என்று தோன்றலாம். ஆனால், உண்மையில் நாம் அப்படிப்பட்ட காலத்தில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்! மனுக்குலத்தின் வரலாற்றிலுள்ள யுகங்களில், நாம் மிகுதியாக மாற்றங்கள் ஏற்படும் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நோவா மற்றும் மோசேயைப்போல, நாம் குறிப்பான நம்முடைய வேலைக்காக வளர்ச்சியடைந்துக் கொண்டிருக்கிறோம். தேவனோடு தனிப்பட்ட முறையில் நெருங்கிய தொடர்புகொள்வது நம்முடைய கடமையும் சிறப்புரிமையாகவும் இருக்கிறது.

தேவனுடைய இருதயத்திற்கு மிகவும் நெருக்கமானவர்

# ஒரு தூய்மையான கிறிஸ்தவ வாழ்க்கை



"தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்" (சங்கீதம் 51:1).

சபை வகுப்பாருக்கு தாவீதின் வாழ்க்கை ஒரு வியக்கத்தக்க உருவகமாக உள்ளது. விவரிக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் பெரிதான சித்திரங்கள், ஐசுவரியமுள்ள அடையாளங்களையும், அர்த்தங்களையும் சுமந்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய ஆண்டவர் தாமே சிலுவையில் தொங்கியபோது, சங்கீதம் 22-ஆம் அதிகாரத்தைக் குறிப்பிட்ட காரியம், தீர்க்கதரிசனத்தை உரைக்கும்படி தேவன் தாவீதைப் பயன்படுத்திய தனித்துவமான வழியைக் காட்டுகிறது. தாவீதின் வாழ்க்கை மற்றும் சபை வகுப்பாரின் வரலாற்றைக்குறித்த ஒப்புமைகள் (இணை) நீண்டகாலமாக வேத மாணவர்களுக்கு ஆராய்ச்சியின் ஊற்றும் அகத்தூண்டுதலாகவும் இருக்கிறது.

இருந்தாலும்கூட, ஒருகிறிஸ்தவன் தனக்கேற்ற ஒரு தனிப்பட்ட மாதிரியாக தாவீதைக் காண்பது ஒரு சவாலாக இருக்கலாம். தாவீது அதிகாரத்தோடு ஆட்சி செய்த ஒரு வீரமுள்ள அரசனாக மாறினார். தானியேல், யோபு மற்றும் யோசுவாவைப்போல இவர் இராமல், அவரிடத்தில் பல தோல்விகள் காணப்பட்டது. ஒரு கொலை குற்றவாளி, விபசாரக்காரன், மோசமான தகப்பன் மற்றும் ஒரு யுத்த வீரன். தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனாக இருந்திருக்க மடியுமா? என்ற கேள்விக்கு ஒரு நேர்மையுள்ள கிறிஸ்தவன் பதிலளிப்பது மிகவும் கடினம் (1 சாமுயேல் 13:14). மனித நிலையில் தாவீது உயர்ந்தவர் என்று எவ்வாறு இயேசுவால் கூறமுடிந்தது? (மாற்கு 12:35-37). இந்தக் கேள்விக்கான பதில்கள் நம்மை தீமையிலிருந்து விடுவித்து தாழ்மையடையச் செய்யும்.

தாவீது ஒரு தைரியமுள்ள மனுஷனும் தீவிரமான போர் வீரனும், மிகப் பெரிய தளபதியும், ஒரு வல்லமையுள்ள தலைவருமாக இருந்தார். அவருடைய இளம்பிரயாத்திலிருந்தே அவர் பெற்ற வெற்றிகள் அவருக்குப் புகழ்ச்சியைத் தந்தது. சவுலின் படைவீரர்களிலிருந்து ஒருவரும் தங்களுடைய உயிரைப் பணையம் வைக்காதபோது, தாவீது கோலியாத்தைக் கொன்றுபோட்டார். எதிரிகளின் எல்லைகளுக்குள் எண்ணிக்கையில் அடங்காதவர்களை அனுப்பினார். அவர்தாமே இராணுவ மகிமையினால் தன்னை உடுத்திக் கொண்டார். ஜெயம் பெறுவது அவருக்கு வழக்கமாக இருந்தபோதிலும், அதன் வெற்றிகள் தேவனுடையது என்று தொடர்ந்து பறைசாற்றினார். ஆனால், தாவீது ஒரு யுத்த புருஷராக இருந்ததினால் தேவன் அவரைக் கடிந்துகொண்டதுபோல நாம் வாசிக்கும் வசனங்கள் நமக்கு ஆச்சரியத்தையூட்டுகிறது. "ராஜாவாகிய தாவீது ... நான் சொல்வதைக் கேளுங்கள்; கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும் நமது தேவனுடைய பாதபடியும் தங்குவதற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட நான் என் மனதிலே நினைத்து, கட்டுகிறதற்கு ஆயத்தமும் பண்ணினேன். ஆனாலும் தேவன்: நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்; நீ யுத்த மனுஷனாயிருந்து, ரத்தத்தைச் சிந்தினாய் என்றார்" (1 நாளாகமம் 28:2-3).

இதற்கான பதில் எளிதாக இருந்தாலும் மிகுந்த வல்லமையுள்ளது. தாவீது ஒரு யுத்தவீரனாக இருந்ததினால் தேவன் அவரைக் **கடிந்துகொள்ளாமல்** அவர் நேரடியாகக் காரியங்களை எடுத்துரைத்தார். ஆலயம் கட்டும் பணி அடையாளமானது. மற்றும் இது சமாதானத்தோடும், புதிய துவக்கத்தோடு சம்மந்தப்பட்டதாக இருக்க வேண்டும். தாவீது இரத்தம் சிந்தினார். அக்காலத்தில் யுத்தங்கள் அவசியமாக இருந்தாலும் அதில் அவர் பங்கெடுத்ததினிமித்தம் அவர் தேவனுடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு தடை செய்யப்பட்டார். தேவன் சமாதானத்தின் தேவன் என்ற தீர்மானம் இந்தச் செய்தியின் வழியாகக் கொடுக்கப்பட்டது. உண்மையில், அவருடைய குமாரனாகிய இயேசு, "சமாதானத்தின் பிரபு" என்று அழைக்கப்படுகிறார் (ஏசாயா 9:6). தாவீது அந்த ஆலயத்திற்கு வேண்டிய திட்டங்களை முறைப்படுத்தி, அதற்கு வேண்டிய பொருட்களைச் சேகரித்தார். ஆனாலும், அவருடைய நாமம் ஆலயத்தின் உண்மையான கட்டுமானத்தோடு இணைக்கப்படவில்லை.

**பாவத்தின் உணர்வு**

தாவீதைப்போல, நாமும்கூட பாவங்களினிமித்தம் குற்றம் உள்ளவர்களாய் இருக்கிறோம். நாமும் துர்க்குணத்தில் உருவானோம் (சங்கீதம் 51:5). தேவன் தம்முடைய பரிசுத்த ஆலயத்தைக் கட்டுகிறார் என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். இது நம்முடைய சொந்த திறமையினால் நாம்

இதைக் கட்டிமுடிக்க இயலாது. அவருடைய கிருபையினால், தேவனுடைய திட்டத்தின் ஆழங்களையும் அறுவடையின் வேலையில் பங்கைப் பெறுவதற்கான சிறப்புரிமைகளோடு நாம் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம். ஆலயம் கட்டுவதற்காக, தாவீது சேகரித்த பொருட்கள் இக்காரியத்தை அடையாளப்படுத்துகிறது.

தாவீதின் வாழ்க்கையில் பல சம்பவங்கள் மனித பலவீனத்தை வெளிப்படுத்தியது. எடுத்துக்காட்டாக, ஜனங்களைக் கணக்கெடுப்பது தேவனால் தடைசெய்யப்பட்ட ஒரு காரியம் என்று யோவாப் தாவீதை எச்சரித்தப்போதிலும் அவர் ஜனங்களைத் தொகையிட்டார். தேவனுடைய தண்டனையை மனப்பூர்வமாக தாவீது ஏற்றுக்கொண்டது சரியானது. ஆயினும், அதன் கிரயம் மிக அதிகமாக இருந்தது. அதன் விளைவாக எழுபதினாயிரம் பேர் மரித்தார்கள் (2 சாமுயேல் 24:1-7). தாவீது ஒரு மோசமான தகப்பனுமாகவும் இருந்தார். அவர் தன்னுடைய பிள்ளைகளை நேசித்தாலும், அனைவரையும் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களாக வளர்க்க முடியவில்லை. அவருடைய குமாரர்களில் ஒருவன் தன்னுடை மகளை (ஒன்று விட்ட சகோதிரி) சீரழித்தபோது தாவீது சரியாகக் கண்டிக்கவில்லை. இந்தச் சம்பவமானது மெதுவாகக் கொலை செய்யுமளவுக்கு வளர்ந்து, மற்றொரு குமாரனாகிய அப்சலோமினால் ஒரு உள்நாட்டு போர் நடத்தப்பட்டது. தாவீது அவருடைய குடும்பத்தார் மற்றும் இஸ்ரயேலர்கள் அனைவருமே தாவீதின் பாவங்களுக்கு அதிகபட்சமான கிரயத்தைச் செலுத்தினார்கள்.

அவருடைய மரணப்படுக்கையிலும்கூட, சாலொமோனுக்குக் கொலை செய்ய வேண்டியவர்களின் ஒரு பட்டியலை தாவீது கொடுத்தார். இதில் தன்னுடைய வாழ்நாள் நண்பனாகிய யோவாபும், சீமேயுவும் அடங்குவார்கள். இவர்களின் பாவங்களினிமித்தம் இவர்களைக் கொல்லுவதில்லை என்று தாவீது ஆணையிட்டிருந்தார் (2 சாமுயேல் 19:23; 1 இராஜாக்கள் 2:5-9). இந்தச் சம்பவங்கள் அடையாளமானதாக இருந்தாலும், இத்தகையான நடத்தையுள்ள தாவீது, "தேவனுடைய இருதயத்திற்கேற்ற தாசன்" என்று ஒரு கிறிஸ்தவர் பிரசங்கிப்பது ஒரு சவாலான காரியமாகவே இருக்கிறது.

தாவீதின் தோல்விகளை நாம் ஆராய்ந்துப்பார்த்து நம்முடைய இருதயங்களுக்கும், சிந்தனைகளுக்கும் தேவையான சாந்தத்தையும் விழித்திருப்பதையும் பெற்றுகொள்ள வேண்டும். தாவீது பெற்ற அபிஷேகம் அவரை பிரித்தெடுத்தாலும், தேவனிடத்திலிருந்து திரும்பிச் செல்வதற்கான சோதனை நிறைந்த பயணத்தையும் துவங்கியது. சவுலும் இளைஞனாக இருந்தபோது, தேவனால் அபிஷேகிக்கப்பட்டார். ஆயினும், அவர் மீதியுள்ள தன்னுடைய வாழ்க்கையில், தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவராக இருக்கவில்லை. பரிதாபம், அவிசுவாசமுள்ள இராஜாவாக நினைவுகூரப்படுகிறார்.

இக்காலத்தில் எந்த ஒரு கிறிஸ்தவனுக்கும் தாவீதின் பாவங்கள் அபாயகரமாக இருக்கிறது. நம்முடைய மாம்சம் மிகுந்த பலவீனத்தில் தோல்வியடைவதற்கு எப்போதும் ஆயத்தமாக இருப்பதினால், சில நேரங்களில் தாவீதின் வாழ்க்கையில் நடந்ததுபோல நம்முடைய வாழ்க்கையும் பாவங்களினால் நெருக்கப்படுகிறது. "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (கலாத்தியர் 5:19-21).

"விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று (மத்தேயு 5:27-28). "விபசாரரே, விபசாரிகளே, உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்" (யாக்கோபு 4:4).

தாவீதின் நினைவுகளை அறிந்தவர்களாக, அவர் ஒரு விபச்சாரக்காரன் என்றும் கொலைக்காரன் என்றும் ஒரு பாவி என்றும் அவரை அடையாளங்காட்டி, அவர்மேல் கல்லெறிவதற்கு நம்மில் யாரொருவர் பாவமில்லாதவர்களாக இருக்கிறோம்? (யோவான் 8:7; 1 யோவான் 1:10). நாம் காணக்கூடிய தோல்விகளினிமித்தம் ஒருவரைக் கொடூரமாக நியாயந்தீர்த்து தவறு செய்வதுபோல, தாவீதின் கிரியைகளினிமித்தம் அவரை நியாயந்தீர்ப்பது மிகவும் தவறாகும். சீமேயுவைப்போல நாமும் இரக்கமற்றுப் பேசலாம். "தாவீது ராஜா பகூரிம்மட்டும் வந்தபோது, இதோ, சவுல் வீட்டு வம்சத்தானாயிருக்கிற கேராவின் குமாரனாகிய சீமேயி என்னும் பேருள்ள ஒரு மனுஷன்

அங்கேயிருந்து புறப்பட்டு, தூஷித்துக் கொண்டே நடந்துவந்து, ...தாவீதின்மேலும் தாவீது ராஜாவுடைய சகல ஊழியக்காரரின் மேலும் கற்களை எறிந்தான். சீமேயி அவனைத் தூஷித்து: இரத்தப்பிரியனே, பேலியாளின் மனுஷனே, தொலைந்துபோ, தொலைந்துபோ. சவுலின் ஸ்தலத்தில் ராஜாவான உன்மேல் கர்த்தர் சவுல்வீட்டாரின் இரத்தப் பழியைத் திரும்பப்பண்ணினார்; கர்த்தர் ராஜ்யபாரத்தை உன் குமாரனாகிய அப்சலோமின் கையில் ஒப்புக்கொடுத்தார்; இப்போதும் இதோ, உன் அக்கிரமத்தில் அகப்பட்டாய்; நீ இரத்தப்பிரியனான மனுஷன் என்றான்" (2 சாமுயேல் 16:5-8),

**தாவீதின் இருதயம்**

தாவீதின் இருதயத்திற்குள் இருக்கும் ஆழமான அர்த்தத்தை மேற்கூறப்பட்டுள்ள பகுதியில் காணலாம். அவருடைய வாலிப நாட்களில், நாபாலைக் கொல்ல நினைத்ததுபோல சீமேயுவையும் கொன்று போட்டிருக்கலாம் (1 சாமுயேல் 25:22). ஆயினும், அவருடைய வாழ்க்கையின் இந்த கட்டத்தில் தாவீது மனத்தாழ்மையோடு பரத்திலிருந்து பாடம் கொடுக்கப்படுவதாக எண்ணி சூழ்நிலைகளை ஏற்றுக்கொண்டு பொறிபறக்கும் சோதனையின் மத்தியில் தேவனுடைய இரட்சிப்புக்காகக் காத்திருந்தார். தேவனுடைய இறுதி நியாயத்தீர்ப்பை அறிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பின சீமேயுவின் குணத்திற்கு இது முறன்பாடானது. கிறிஸ்தவர்களுக்கும் இது ஒரு முக்கியமான பாடமாக உள்ளது. "இதோ, என் கர்ப்பப்பிறப்பான என் குமாரனே என் பிராணனை வாங்கத்தேடும்போது, இந்தப் பென்யமீனன் எத்தனை அதிகமாய்ச் செய்வான்; அவன் தூஷிக்கட்டும் அவன் அப்படிச் செய்யக் கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைகளுக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார் என்றான்" (2 சாமுயேல் 16:11-12).

பல யுத்தங்களினால், அனுபவம் பெற்ற ஒரு யுத்தவீரனாக தாவீது இருந்தபோதிலும், அவர் தன்னுடைய உணர்ச்சிகளை முழுமையாக அடக்கினார். அவர் தேவனுடைய கிருபையான குணத்தைப் பிரதிபலித்ததினால், தன்னுடைய எபிரெய சகோதரர்களுக்கு விரோதமாகச் செயல்படாத அநேக எடுத்துகாட்டுகளை தாவீதின் வாழ்க்கையில் நாம் காணலாம். தாவீது யுத்தம் பண்ணும்போது அவர் மிகவும் வலிமை மிக்கவராக இருந்தாலுங்கூட, அதை அவர் செயல்படுத்துவதற்கு அனுமதி கிடைத்தபோது அந்த வல்லமைகளை அவர் தவறாகவோ, தனக்குச் சாதகமாகவோ பயன்படுத்தவில்லை. சவுலையும், சீமேயுவையும் கொலை செய்ய வாய்ப்பு கிடைந்திருந்தபோதிலும், அவர்களைக் கொல்லவில்லை. அந்த தாவீதுக்கு எதிராக செயல்பட்ட அப்சலோமும், அப்நேரும் கொல்லப்பட்டபோது அவர் மிகவும் அழுதார் (2 சாமுயேல் 3:31-39; 18:33). உண்மையில் அவருடைய எண்ணங்கள் அதாவது, நாமும் பின்பற்ற முயற்சிக்கக்கூடிய ஆண்டவரின் வார்த்தைகளை நமக்கு நினைவுபடுத்துகிறது. "உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்" (மத்தேயு 5:43-44).

தான் யார் என்ற உண்மையை தாவீது மிகத் தெளிவாக அறிந்திருந்தார். அடுத்து, அவர் எப்போதும் தேவனையே சார்ந்திருந்தார். தாவீதின் வாழ்க்கை முழுவதிலும் நாம் காணக்கூடிய இந்த இரண்டு குணங்களும் மிகவும் வியக்கத்தக்க குணங்களாக இருக்கிறது. தேவானல் அவர் மாற்றப்படுவதற்கு தன்னை ஒப்புகொடுத்தார் என்று அவருடைய வாழ்க்கை முழுவதிலும் தெளிவாகக் காணப்படுகிறது. ஒரு வாலிப மேய்ப்பனாக இருந்தபோது அவர் தேவன் மேல் நம்பிக்கைக் கொண்டவராக, அவருடைய நாமத்தைப் பாதுகாப்பதற்கு கோலியாத்துக்கு எதிராக யுத்தம் செய்தார். தேவைப்பட்ட ஒரு மனுஷனைப்போல அவர் தேவனுடைய கால அட்டவணையை மதித்தவராக தேவனால் அபிஷேகிக்கப்பட்ட இராஜாவாகிய சவுலைக் கொல்ல மறுத்தார். பரிசுத்த அப்பங்களை தாவீது புசித்தப்போது, நியாயப்பிரமாணத்தின் எழுத்துக்கும், ஆவிக்குமுள்ள வித்தியாசத்தை அவர் தெளிவாகப் புரிந்திருந்தார் (1 சாமுயேல் 21:6). ஒரு இராஜாவாக, தேவனுக்கும் இஸ்ரயேலர்களுக்கும் முன்பாக சணல் நூல் ஏபோத்தைத் தரித்தவராக உடன்படிக்கைப் பெட்டியின் முன் நடனமாடி அவர் தன்னைத் தாழ்த்தினார். தன்னுடைய பூமிக்குரிய கனத்தையும் மகிமைகளையும் மனப்பூர்வமாக இழந்தவராக, இஸ்ரயேலின் உண்மையான இரட்சகராகிய தேவனைத் துதிப்பதற்கு தாவீது வெட்கப்படவில்லை.

தன்னையே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்த நம்முடைய ஆண்டவராம் இயேசு, சபைக்கு மாதிரியாக இருப்பதைப்போல் தாவீதுக்கு இருக்கவில்லை (பிலிப்பியர் 2:5-7). ஆயினும், நமக்கு அவருடைய மாதிரியே முன் வைக்கப்பட்டுள்ளது. "தாவீது மீகாளைப் பார்த்து: உன் தகப்பனைப் பார்க்கிலும் அவருடைய எல்லா வீட்டாரைப் பார்க்கிலும், என்னை இஸ்ரவேலாகிய கர்த்தருடைய ஜனத்தின்மேல் தலைவனாகக் கட்டளையிடும்படிக்குத் தெரிந்து கொண்ட கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஆடிப்பாடினேன்" (2 சாமுயேல் 6:21).

**தாவீதின் குணங்கள்**

தாவீது தன்னுடைய ஜனங்களால், அதிகமாக நேசிக்கப்பட்டார், விசேஷமாக அவரோடு யுத்தம் செய்தவர்கள் அவரை அதிகமாக நேசித்தார்கள். தாவீது தன்னுடைய சிநேகிதர்களை தேவனுடைய பரிசாக எண்ணினார். "அப்பொழுது அந்த மூன்றுபேர் பெலிஸ்தரின் பாளையத்திற்குள் துணிந்து புகுந்துபோய், பெத்லகேமின் ஒலிமுக வாசலிலிருக்கிற கிணற்றிலே தண்ணீர்மொண்டு, தாவீதினிடத்தில் கொண்டுவந்தார்கள்; ஆனாலும் அவன் அதைக் குடிக்க மனதில்லாமல் அதைக் கர்த்தருக்கென்று ஊற்றிப்போட்டு: நான் இதைச் செய்யாதபடிக்கு, என் தேவன் என்னைக் காத்துக்கொள்ளக்கடவர்; தங்கள் பிராணனை எண்ணாமல் போய் அதைக் கொண்டுவந்த இந்த மனுஷரின் ரத்தத்தைக் குடிப்பேனோ என்று சொல்லி அதைக் குடிக்கமாட்டேன் என்றான்" (1 நாளாகமம் 11:18-19).

தாவீது ஒரு மேய்ப்பனாக இருந்துபோது ஒரு இராஜாவைப்போல நடந்து கொண்டார். ஒரு இராஜாவாக முடிசூட்டப்பட்டபோது ஒரு மேய்ப்பனுக்குரிய மனநிலையைப் பிரதிபலித்தார். "தாவீது ஏத்தியனாகிய உரியாவின் சங்கதி ஒன்றுதவிர கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டதிலே தான் உயிரோடிருந்த நாளெல்லாம் ஒன்றையும் விட்டு விலகாமல், அவர் பார்வைக்கு செம்மையானதைச் செய்துவந்தான்" (1 இராஜாக்கள் 15:5).

முன்னிருந்த சவுலைப்போல, தாவீது இராமல், பலியைக்காட்டிலும் கீழ்ப்படிதலே மேலானது என்றும், நொருங்குண்டதும், நறுங்குண்டதுமான ஆவியே தேவனுக்குத் தேவைப்படும் உண்மையான பலி என்றும் அவர் புரிந்துகொண்டார். தேவனால் சுத்திகரிக்கப்பட்ட இருதயத்தை, பரிசுத்தமாக தக்கவைத்துகொள்ள வேண்டிய முக்கியத்துவத்தை அவர் அறிந்திருந்தார். மேலும், நாம் செய்யக்கூடிய நன்மைகளினாலல்ல, அவருடைய கிருபையினால் நாம் அவரோடுகூட இருக்கிறோம் என்பதையும் அறிந்திருந்தார். அவருடைய பாவத்திலிருந்து தன்னுடைய முகத்தை மறைத்துக்கொள்ளும்படிக்கும், அவருடைய சகல அக்கிரமங்களை அகற்றும்படிக்கும் கேட்டுக்கொண்டார். தேவனே ஞானத்தின் ஊற்று என்றும், அவரே இரட்சிப்பின் மகிழ்ச்சியைக் கொடுப்பவர் என்றும் அவர் அறிந்திருந்தார். தாவீது உண்மையில் எஜமானுடைய கரங்களில் களிமண் என்பதை அவர் அறிந்தவராக, தன்னை முழுமையாக தேவனிடம் அர்ப்பணித்தார் (சங்கீதம் 51). நாமும் இப்படியாகவே நம்மை அர்ப்பணிக்க வேண்டும். "மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும், ஒரு பாத்திரத்தைக் கனவீனமான காரியத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின்மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ?" (ரோமர் 9:21).

தேவனுக்காகவும், அவர் பெற்ற அபிஷேகத்திற்கும் உண்மையாக இருப்பதற்கு தாவீது அதிகமான வேலைகளைச் செய்ய வேண்டியதாக இருந்தது - தாவீதின் இருளான நேரங்களில் நடந்த ஒரு சம்பவங்கள் இதற்கு எடுத்துகாட்டாகக் காணப்படுகிறது. உரியாவைக் கொலை செய்வதற்காக அவர் நடப்பித்த காரியங்கள், துரதிர்ஷ்டவசமாக, தாவீதின் பாவங்கள் ஒரு நொடியின் பலவீனமாக இருக்கவில்லை. மனப்பூர்வமாக திட்டமிடப்பட்ட காரியங்களாகவே இருந்தது (2 சாமுயேல் 11).

**இரக்கத்தைத் தேடுதல்**

இப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையில் தேவன் தாவீதை நடத்தும்விதமானது, அவர் தேவனுடைய பார்வையில் எவ்வளவு விலையேறபெற்றவர் என்றும், தாவீது தன்னுடைய பாவங்களிலிருந்து வெளியேறுவதற்கு மனப்பூர்வமாக தேவையான உதவிகளை தேவன் செய்ததைக் காட்டுகிறது. தேவன் தீர்க்கதரிசியாகிய நாத்தானை தாவீதிடம் அனுப்பி, ஒரு மேய்ப்பனைக்குறித்தும், ஐசுவரியமுள்ள ஒரு மனுஷனைக்குறித்தும் ஒரு கதையை கூறச் சொன்னார். தாவீது தன்னுடைய பாவங்களை முற்றிலும் காணாதபடிக்கு பார்வையற்றவராக இருந்தார். ஆகவே, தாவீது தேவனால் அழைக்கப்பட்டபோது எவ்வாறு இருந்தார் என்பதை தேவன் தாவீதுக்கு நினைப்பூட்ட வேண்டியதாக இருந்தது. தன்னுடைய ஆடுகளுக்காக மிகவும் கவலைப்பட்ட ஒரு மேய்ப்பன் இந்தச் சூழ்நிலையை மனதில் வைத்தவராக 51-ஆம் சங்கீதத்தை தாவீது

எழுதினார். அவர் தன்னுடைய குற்றங்களை ஒப்புக்கொண்டு, மனம்வருந்தி, தன்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய தலையீடுதலுக்காக வேண்டினார். "தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்" (சங்கீதம் 51:1-3, 7). தாவீதின் இருதயத்தைப் புரிந்துகொள்வதற்குரிய சரியான திறவுக்கோலும், கிறிஸ்தவர்களுக்கு ஒரு சாலை வரைபடமுமாக 51-ஆம் சங்கீதம் காணப்படுகிறது.

பலவீனமான, வயது சென்ற தாவீதை மீட்பதற்காகக் காண்பிக்கப்பட்ட தேவனுடைய அபாரமான இரக்கத்தை விவரிப்பதற்கு வார்த்தைகளே இல்லை. அதற்குப்பின் பத்சேபாளிடம் பிறந்த தாவீதின் இரண்டாவது குமாரனாகிய சாலொமோனை தேவன் இராஜாவாகத் தெரிந்துகொண்டார். இவர் ஆலயத்தை பிரதிஷ்டை செய்து, தேவனுடைய இராஜ்யத்தின் அடையாளமாக அவருடைய ஆட்சி அமைந்தது.

### தொடர்ச்சியான போராட்டங்கள்

தாவீது கிறிஸ்தவர்களின் ஒரு மாதிரியாக இருப்பதற்கும் மேலானவர். மாம்சத்திற்கும் ஆவிக்குமிடையில் நடக்கும் தொடர்ச்சியான போராட்டங்களில் தாவீதின் வாழ்க்கை பொருள் பொருந்தியதாகவும், உணர்ச்சி நிறைந்ததாயும் இருக்கிறது. அவருடைய குறைபாடுகள் நாளாகமம் மற்றும் இராஜாக்கள் புஸ்தகங்களில் விவரிக்கப்பட்டாலும், அவருடைய ஆழமான அர்ப்பணிப்பும், இருதயத்தின் தூய்மையும், சங்கீத புஸ்தகத்தின் எழுத்துகளின் வழியாக நம்மை ஊக்குவிக்கிறது. அவர் வாழ்க்கையின் கோட்பாடுகளைக்குறித்து தெளிவாக எழுதியிருக்கிறார் (சங்கீதம் 15), துதி பாடல்கள் (சங்கீதம் 33), உதவிக்கான விண்ணப்பங்கள் (சங்கீதம் 28), இரட்சிப்புக்கான நம்பிக்கை (சங்கீதம் 16) மற்றும் பக்தியுள்ள வாழ்க்கைக்கான தூண்களைப்பற்றியும் அவர் எழுதியிருக்கிறார். நாம் இவைகளை மீண்டும் மீண்டும் வாசிக்கும்போது, தாவீதுக்கும் தேவனுக்குமுள்ள ஆழமான உறவைக் கண்டடையலாம். மேலும், போராட்டமான ஒரு வாழ்க்கையில், நீதியான கோட்பாடுகளை பிரயோகித்ததினால், இந்த ஞானத்தைப் பெற்றுக்கொண்டார் என்பதையும் நாம் அறிந்துகொள்ளலாம்.

தாவீதின் வாழ்க்கையில் அவருடைய பாவங்கள் ஒரு பகுதி என்பதை ஏற்றுக்கொண்டு, புரிந்துகொள்வதினிமித்தம் நம்முடைய வாழ்க்கையின் அனுபவங்களைப் (அதாவது வெற்றியானாலும் சரி, தோல்வியானாலும் சரி) பயன்படுத்தி, தேவன் தம்முடைய வேலைகளை மனப்பூர்வமாகவும், அதை நம்முடைய வழியாகவும் நிறைவேற்ற வல்லமையுள்ளவர் என்பதை நாம் நம்புவதற்குக் கற்றுக்கொள்ளலாம். அதற்குப் பின் தாவீதைப்போல், "என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூருவேன்" (சங்கீதம் 18:1) என்ற நம்முடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து மகிழ்ச்சியோடு ஆரவாரிப்பதற்கு நம்பிக்கைப் பெறலாம்.

**நீர் பாயிச்சப்பட்ட லீலி புஷ்பங்கள்**

நந்தவனத்தில் ஓர்நாள் எஜமான் லீலிபுஷ்பங்கள் நடுவினில் உலாவினாரே,
லீலிச்செடிகள் அனைத்தையுமே, அவர்தம் கரத்தினால் நட்டுப்பயிரிட்டாரே, அதன்மீது
அலாதி கவனம் வைத்து அதனைப்பேணியே வளர்த்துக்காத்துவந்தாரே,
அதன் வெண்ணிற மலர்களின் மீதே மிகவும் ஆவல் கொண்டிருந்தாரே,
கண்ணும் கருத்தும் தோட்டத்தின் மீதே,செடிகளுக்கிடையில் இருந்ததுவே,
மலர்களை ஆர்வமாய் தொட்டுத்தொட்டே வருடிக்கொடுத்தே வளர்த்தாரே,
நீரின்றிஅ ச்செடிகள் யாவும் வாடி வதங்கி, காய்ந்தே சாய்ந்திட்டபோதினிலே, எஜமான்
அந்தச் செடிகள் யாவையும் தூக்கி நிறுத்தி,உனக்கு நீர் பாய்ச்சுதலே, இன்றெனக்கு ஓர்
முக்கிய வேலை என்றாரே, இன்று என் லீலிபுஷ்பங்களுக்கே நீர் பாய்ச்சிட வேண்டுமே, எப்படி
நான் நீரினைக் கொணர்வேன்? என்றே எண்ணிச் சுற்றிலும் பார்க்கையில், காலியாகவே,
மெல்லிய சிறியதோர் மட்பாண்டம் பாதை அருகினில் கிடந்ததுவே.அதனால் ஏதும்
பயனில்லை என்றெண்ணியே அதனைத் தூக்கி வீசினரே.அது மிகவும் சிறியதாகவே
வெற்றுக் குடமாய் இருந்ததுவே. அப்படித்தான் வெறுமையாகவே அக்குடமும் இருக்கவே
விரும்பியதே.

# ராகாப், தெபோராள் மற்றும் ரூத்



George Tabac

"ஒருவன்: உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு; கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே" (யாக்கோபு 2:18).

சுவிசேஷ யுகத்திற்கு முன் பரலோக பிதாவுக்கு விசுவாசத்திற்குப் பாத்திரமாக வாழ்ந்த அநேக தனி நபர்களை வேதாகமம் சித்தரிக்கிறது. பழைய ஏற்பாட்டின் மூன்று ஸ்திரீகளாகிய ராகாப், தெபோராள் மற்றும் ரூத் யேகோவா தேவனை விசுவாசத்தோடு சேவித்தார்கள். இந்த யுகத்தின் முடிவில் வாழக்கூடிய அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு இவர்களின் வாழ்க்கை ஊக்குவிக்கும் பாடங்களைக் கொடுக்கிறது.

### ராகாப்-வேசி-வீராங்கனை

இந்தக் குடும்பம் இஸ்ரயேலரின் ஜீவனுக்குப் பாதுகாப்பைத் தந்தது. ஆகவே, பரிசுத்த வேதாகமத்தில், கிட்டத்தட்ட அனைத்து ஆங்கில மொழிபெயர்ப்புகளிலும் ராகாபை ஒரு வேசியாக விவரிக்கப்பட்டிருப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை. விசுவாசத்தைக் கிரியைகளினால் வெளிப்படுத்திய இரண்டு ஸ்திரீகளில் ராகாபும் அடங்குவாள். (விசுவாசத்திற்கு எடுத்துக்காட்டாக ஆபிரகாமின் மனைவியாகிய சாராள் மற்றொரு ஸ்திரீயாக இருக்கிறாள் - எபிரெயர் 11:11). "விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகாதிருந்தாள் (எபிரெயர் 11:31).

அழிவுக்கென்று வைக்கப்பட்டிருந்த எரிகோ பட்டணத்தில், கானானிய பாரம்பரியத்தைக்கொண்டிருந்த ராகாப் ஒரு வேசியாக இருந்தாள். "அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும்" (ஆதியாகமம் 15:18) என்று தேவன் ஆபிரகாமிடம் வாக்களித்தார். அதற்குப் பின் பத்து பேர் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டார்கள் என்று வசன பகுதிகள் விவரிக்கிறது (ஆதியாகமம் 15:19-21).

இஸ்ரயேல் ஜனங்களை வனாந்தரத்தில் வழிநடத்தின பின் நேபோ மலையின்மேல் மோசே மரித்தார் (உபாகமம் 34:1-5). அதற்குப் பின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு இஸ்ரயேலர்களை வழிநடத்துவதற்கு யோசுவா (யோசுவா என்பதற்கு இரட்சகர் அல்லது "யேகோவாவே இரட்சிப்பு" என்று பொருள்) தேர்வு செய்யப்பட்டார். மற்றும், "நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" (யோசுவா 1:5) என்று தேவனால் உறுதிபெற்றார்.

எரிகோ பட்டணத்தின் மதிலைக் கைப்பற்றுவதற்கு திட்டமிடப்பட்டது. "நூனின் குமாரனாகிய யோசுவா சித்தீமிலிருந்து வேவுகாரராகிய இரண்டு மனுஷரை இரகசியமாய்வேவுபார்க்கும்படி அனுப்பி: நீங்கள் போய் தேசத்தையும் எரிகோவையும் பார்த்துவாருங்கள் என்றான். அவர்கள் போய், ராகாப் என்னும் பெயர்கொண்ட வேசியின் வீட்டுக்குள் பிரவேசித்து, அங்கே தங்கினார்கள்" (யோசுவா 2:1).

சில இஸ்ரயேல் வேவுகாரர்கள் ராகாபின் வீட்டில் தங்கியிருக்கிறார்கள் என்று எரிகோவின் இராஜாவுக்கு அறிவிக்கப்பட்டபோது, அவர்களை அழைத்து வரும்படி இராஜா ஆள் அனுப்பினான். அப்போது ராகாப், இராஜாவின் மந்திரிகளோடு பேசி, அந்த வேவுகாரர் அவள் வீட்டிற்கு வந்ததாகவும், பொழுது சாய்ந்து பட்டணத்தின் வாசல்கள் அடைப்படுவதற்கு முன் அவர்கள் சென்று விட்டார்கள் என்றும் அவர்களுக்கு விளக்கமளித்து ராகாப் அந்த மனுஷரை அனுப்பிவிட்டாள். உண்மையில், ராகாப் அந்த இரண்டு இஸ்ரயேலர்களை தன் வீட்டின் மேல் பரப்பப்பட்ட சணல் தட்டைகளுக்குள்ளே மறைத்து வைத்திருந்தாள். ஒருவேளை இராஜாவின் ஆட்கள் அவளுடைய வீட்டை சோதனையிட்டிருந்தால் அந்த வேவுகாரர்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பார்கள் (யோசுவா 2:3-6). "அந்த மனுஷர் யோர்தானுக்குப் போகிற வழியில் துறைகள்மட்டும் அவர்களைத் தேடப்போனார்கள்; அவர்களைத் தேடுகிறவர்கள் புறப்பட்டவுடனே வாசல் அடைக்கப்பட்டது" (யோசுவா 2:7).

"கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக்கொடுத்தாரென்றும், உங்களைப்பற்றி எங்களுக்குத்திகில் பிடித்திருக்கிறதென்றும், உங்களைக்குறித்து தேசத்துக் குடிகள் எல்லாரும்

சோர்ந்து போனார்களென்றும் அறிவேன். நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது, கர்த்தர் உங்களுக்கு முன்பாகச் சிவந்தசமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப்போகப்பண்ணினதையும், நீங்கள் யோர்தானுக்குஅப்புறத்தில் சங்காரம்பண்ணின எமோரியரின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும் ஓகுக்கும்செய்ததையும் கேள்விப்பட்டோம். கேள்விப்பட்டபோது எங்கள் இருதயம் கரைந்துபோயிற்று, உங்களாலே எல்லாருடையதைரியமும் அற்றுப்போயிற்று. உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழேபூமியிலும் தேவனானவர். இப்போதும், நான் உங்களுக்குத் தயவுசெய்தபடியினால், நீங்களும் என் தகப்பன் குடும்பத்துக்குத் தயவுசெய்வோம் என்று கர்த்தர்பேரில் எனக்கு ஆணையிட்டு, நீங்கள் என் தகப்பனையும் என் தாயையும் என் சகோதரரையும் என் சகோதரிகளையும்அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும் உயிரோடே வைத்து, எங்கள் ஜீவனைச் சாவுக்குத்தப்புவிக்கும்படி, எனக்கு நிச்சயமான அடையாளத்தைக் கொடுக்கவேண்டும்" (யோசுவா 2:9-13) என்று ராகாப் அந்த வேவுக்காரர்களிடம் கூறினாள்.

ராகாப் அவர்களை ஏமாற்றாத பட்சத்தில் தேவன் அவர்களுக்கு அந்த தேசத்தைக் கொடுக்கும்போது ராகாபையும் அவள் குடும்பத்தினரையும் காப்பாற்றுவதாக அவளுக்கு அந்த வேவுகாரர்கள் உறுதியளித்தார்கள். ராகாபின் வீடு எரிகோவின் மதில்மேல் கட்டப்பட்டிருந்ததினால் ஒரு சிவப்பு நூல் கயிற்றினால் ஜன்னலிலிருந்து அவர்களைக் கீழே இறக்கிவிட்டு, மலை பகுதிக்கு ஓடிபோய் அங்கே மூன்று நாட்கள் தங்கியிருக்கும்படி கூறினாள் (யோசுவா 2:14-16).

அந்த வேவுக்காரர்கள் ராகாபை விட்டுச்செல்லும்போது, சில கட்டளைகளைக் கொடுத்தார்கள். அதன்படி நடந்தால் மட்டுமே அவர்களைக் காப்பாற்றமுடியும் என்றும் கூறினார்கள். "இல்லாவிட்டால் நீ எங்கள் கையில் வாங்கின ஆணைக்கு நீங்கலாயிருப்போம். எவனாகிலும் உன் வீட்டு வாசல்களிலிருந்து வெளியே புறப்பட்டால், அவனுடைய இரத்தப்பழிஅவன் தலையின்மேல் இருக்கும். எங்கள்மேல் குற்றம் இல்லை; உன்னோடே வீட்டில் இருக்கிறஎவன்மேலாகிலும் கைபோடப்பட்டதேயாகில், அவனுடைய இரத்தப்பழி எங்கள் தலையின்மேல்இருக்கும். நீ எங்கள் காரியத்தை வெளிப்படுத்தினாயேயானால், நீ எங்கள் கையில் வாங்கினஆணைக்கு நீங்கலாயிருப்போம் என்றார்கள்" (யோசுவா 2:18-20).

அவர்கள் சொன்ன வார்த்தைகளை ராகாப் ஏற்றுக்கொண்டு அந்த சிவப்பு நூல் கயிற்றை ஜன்னலிலிருந்து தொங்கவிட்டாள். அந்த வேவுகாரர்கள் மூன்று நாட்கள் மலை தேசத்தில் தங்கினார்கள். இராஜாவின் ஆட்கள் அவர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் திரும்பிப் போனார்கள். வேவுகாரர்கள் தங்களுடைய பாளையத்திற்கு வந்தபோது நடந்தவைகளை யோசுவாவுக்கு அறிவித்தார்கள். "கர்த்தர் தேசத்தையெல்லாம் நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார்; தேசத்தின் குடிகளெல்லாம் நமக்கு முன்பாகச் சோர்ந்து போனார்கள் என்று அவனோடே சொன்னார்கள் (யோசுவா 2:24).

எரிகோவை இஸ்ரயேலர்கள் அற்புதமாகக் கைபற்றினவரையில் ராகாப், அவர்களைக்குறித்த காரியங்களைப் பேசாமல் அமைதியாக இருந்தாள். ராகாபும் அவள் குடும்பத்தாரும் தங்கியிருந்த வீட்டில் அவர்கள் அனைவரும் காக்கப்பட்டார்கள். சிவப்பு நூல் கயிறு ஜன்னலிலிருந்து தொங்கியது. அவள் குடும்பம் இஸ்ரயேலரோடு கலந்தது. யூதாவின் பிரபுவாகிய சல்மோனை அவள் விவாகம் செய்தாள். இவள் அவனுக்கு போவாஸ் என்னும் குமாரனைப் பெற்றாள். அந்த போவாஸ் ரூத்தை திருமணம் செய்தார்.

இப்படியாக, இயேசுவின் முன்னோர்களாக ராகாபின் வம்சம் இருந்தது. மத்தேயுவில் கூறப்பட்டுள்ள இயேசுவின் வம்ச வரலாறு பிதாவாகிய ஆபிரகாமிலிருந்து இயேசுவின் தந்தையாக எண்ணப்பட்ட யோசேப்புவரைக்கும் காணலாம். லூக்கா சுவிசேஷத்தில் இயேசுவின் வம்சாவளி அவருடைய தாய் மரியாளிலிருந்து, "தேவனுடைய குமாரனாகிய" ஆதாம் வரைக்கும் வரிசைப்படுத்துகிறது. இந்த இரண்டு பதிவுகளிலும், ராகாப் மற்றும் சல்மோனின் குமாரன் போவாஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (மத்தேயு 1:5; லூக்கா 3:32).

**ராகாபிடமிருந்து பாடங்கள்**

ராகாபின் அனுபவங்களிலிருந்து பிரதிபலிக்கும் பாடங்கள் என்னென்ன? இராஜாவின் மனுஷரிடத்தில் அவள் சொன்ன பொய் ஓர் ஏற்ற மாதிரியாக இருக்க முடியாது. ஆனால், அவள் பெற்றிருந்த விசுவாசத்தைக் கிரியைகளினால் நிரூபித்ததை நாம் நினைவுகூரலாம். "ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்?" (யாக்கோபு 2:25).

ஒரே தேவன் உண்டு என்ற அவளுடைய விசுவாசமும், புரிந்துகொள்ளுதலும் குறிப்படத்தக்கது என்பதற்காக விசேஷமாக அவளை நாம்

நினைவுகூரலாம். "கேள்விப்பட்டபோது எங்கள் இருதயம் கரைந்துபோயிற்று, உங்களாலே எல்லாருடையதைரியமும் அற்றுப்போயிற்று. உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழேபூமியிலும் தேவனானவர்" (யோசுவா 2:11).

அவள் தைரியமுள்ளவளும், நம்பிக்கைக்குரியவளுமாக இருந்தாள். மற்றவர்களுக்காக கவலைப்படக்கூடியவளாக இருந்தாள் - வேவுகாரர் மற்றும் அவளுடைய குடும்பமும் கடந்த கால பாவ வாழ்க்கையிலிருந்து திரும்பி, விசுவாசத்தில் ஒரு உண்மையான வீராங்கனையாகத் திகழ்ந்தாள். பாவத்திலிருந்து திரும்புவதற்கு ஒரு புதிய துவக்கம் நம்முடைய இருதயத்தின் கதவை தட்டும்போது நாமும் நம்முடைய குடும்பமும் இரட்சிக்கப்படுவதற்கு உடனடியாக ராகாபின் விசுவாசமுள்ள மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

"நாம் சொல்லுவதை செய்பவர்களாகவும், செய்வதை சொல்லுபவர்களாகவும்" விசுவாசத்தோடு இருப்பதற்கு முயற்சிக்க வேண்டும். "அன்றியும், பொய்யாணையிடாமல், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" (மத்தேயு 5:33).

## தெபோராள்-ஒரு நியாயாதிபதி மற்றும் தீர்க்கதரிசி

இஸ்ரயேல் அடிப்படையாக ஒரு தேசப்பற்றுள்ள சமுதாயமாக இருந்தது. இஸ்ரயேலை இராஜாக்கள் ஆளும் காலம்வரைக்கும் உள்ள கால பகுதியில் தெபோராள் என்ற ஸ்திரீ மட்டுமே நியாயாதிபதியாக இருந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்போது, "அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை; அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்துவந்தான்" (நியாயாதிபதிகள் 21:25). அவள் ஒரு ஞானமுள்ள தலைவியாக அனைவராலும் மதிக்கப்பட்டாள். "அவள் எப்பிராயீம் மலைத்தேசமான ராமாவுக்கும் பெத்தேலுக்கும் நடுவிலிருக்கிற தெபொராளின் பேரீச்சமரத்தின்கீழே குடியிருந்தாள்; அங்கே இஸ்ரவேல் புத்திரர் அவளிடத்திற்கு நியாயவிசாரணைக்குப் போவார்கள்" (நியாயாதிபதிகள் 4:5).

சாப்பாத் (shaphat) (Strong's H8199) என்ற எபிரெய வார்த்தை நியாயாதிபதி என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு இரட்சிக்கக்கூடிய அல்லது ஆளுகை என்று வசனங்களில் பொருள்படுகிறது. இஸ்ரயேலிலுள்ள ஒரு நியாயாதிபதி ஆட்சிக்கு முன்பாக, ஜெபத்தின் வழியாகவும் தியானத்தின் வழியாகவும் தேவனிடத்திலிருந்து வழிநடத்துதலைப் பெறுவார்கள். சில நியாயாதிபதிகள் தேவனுடைய வார்த்தைகளைப் பெறக்கூடிய தீர்க்கதரிசிகளாகவும் இருந்தார்கள். இவர்கள் பிரச்சனைகளைத் தீர்த்து, நியாயங்களை அறிவிப்பதோடு மட்டும் இவர்களின் பொறுப்பு முடிவடைகிறதில்லை. இஸ்ரயேலர்களை ஒடுக்குகிற எதிராளிகளுக்கு எதிராகச் செல்லக்கூடிய இராணுவத்திற்கும் தலைமையாக செயல்படுவதற்கு யேகோவா தேவனுடைய கட்டளைகளைப் பின்பற்றுவார்கள்.

நியாயாதிபதிகளின் புஸ்தகம், தொடர்ச்சியாக இஸ்ரயேலர்களின் மோசமான நடத்தையை பதிவு செய்திருக்கிறது. தேவனுடைய சகலவிதமான வல்லமையையும், வழிநடத்துதலையும் மறந்தவர்களாக, விக்கிரகாரதனைக்கும், துன்மார்க்கமான செயல்களுக்கும் திரும்பினார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் அவர்களை அடிமைத்தனத்திற்குள் வழிநடத்தியது. அப்போது அவர்களின் அவநிலையிலிருந்து அவர்களை விடுவிக்கும்படி தொடர்ந்து தேவனை அழைத்தார்கள். இரக்கத்தின் தேவன், அவர்களுக்கான விடுதலையை அளித்தார்.

கானானின் இராஜாவாகிய யாபீன் மற்றும் அவனுடைய இராணுவ அதிகாரியாக சிசெராவினால் இஸ்ரயேல் அடிமைப்பட்டிருந்ததை தெபோராளின் கதை சித்தரிக்கிறது. 20 வருஷங்கள் உபத்திரவத்திற்குப்பின் இஸ்ரயேலர்கள் தேவனிடம் விடுதலைக்காக மன்றாடினார்கள். தேவன் வெற்றியை நமக்கு வாக்களித்திருக்கிறார் என்று சொல்லி, தெபோராள் பாராக்குக்கு ஆள் அனுப்பினாள். "நீ நப்தலி புத்திரரிலும், செபுலோன் புத்திரரிலும் பதினாயிரம் பேரைக் கூட்டிக்கொண்டு, தாபோர் மலைக்குப் போகக்கடவாய் என்றும், நான் யாபீனின் சேனாதிபதியாகிய சிசெராவையும், அவன் ரதங்களையும், அவன் சேனையையும், கீசோன் பள்ளத்தாக்கிலே உன்னிடத்திற்கு வர இழுத்து, அவனை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிடவில்லையா என்றாள்" (நியாயாதிபதிகள் 4:6-7).

பாராக்கோடு, தெபோராள் யுத்தத்திற்கு வராவிட்டால் சிசெராவுக்கு எதிராகப் போரிட அவன் மறுத்தார். சிசெராவுக்கு 900 இருப்பு இரதங்கள் இருந்ததின் காரணத்தினால் பாராக் தன்னுடைய வெற்றியின்மேல் உறுதியற்றவராக இருந்திருக்க வேண்டும். இது பாராக்கின் நம்பிக்கைக் குறைச்சலைக் காட்டுகிறது. எனவே வெற்றி நிச்சம் என்றாலும், அந்த மகிமை ஒரு ஸ்திரீக்கு சேரும் என்று

தெபோராள் தீர்க்கதரிசனம் உரைத்தாள். "அதற்கு அவள்: நான் உன்னோடேகூட நிச்சயமாய் வருவேன். ஆனாலும் நீ போகிற பிரயாணத்தில் உண்டாகிற மேன்மை உனக்குக் கிடையாது. கர்த்தர் சிசெராவை ஒரு ஸ்திரீயின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்று சொல்லி, தெபொராள் எழும்பி, பாராக்கோடேகூடக் கேதேசுக்குப் போனாள்" (நியாயாதிபதிகள் 4:9). முதலில் தெபோராள் தன்னைக்குறித்து பேசினாள் என்று எண்ணலாம். ஆனால், சொல்லப்பட்ட மகிமையை வேறொரு ஸ்திரீ பெற்றாள்.

ஒப்புக்கொண்டபடி தெபோராள் பாராக்கோடு சென்றாள். அவளுடைய போர்வீரர்கள் தாபோர் மலையின்மேல் ஏறினார்கள். சிசெரா தன்னுடைய இராணுவப் படைகளோடும் இருப்பு இரதங்களோடும் கீசோன் ஆற்றண்டைக்கு வந்தான். அந்த இடம் சிசெராவுக்கும் அவனுடைய இருப்பு இரதங்களுக்கும் சாதகமான இடமாக இருந்தபோதிலும், தேவன் அதிகமான மழையைப் பெய்யச் செய்து அவனையும் அவன் இரதங்களையும், "பாராக் ரதங்களையும் சேனையையும் புறஜாதிகளுடைய அரோசேத்மட்டும் துரத்தினான்; சிசெராவின் சேனையெல்லாம் பட்டயக்கருக்கினால் விழுந்தது; ஒருவனும் மீதியாயிருக்கவில்லை" (நியாயாதிபதிகள் 4:16). தெபோராள் தீர்க்கதரிசனம் உரைத்ததுப்போலவே, தேவன் பாராக்குக்கும், இஸ்ரயேலர்களுக்கும் ஒரு அற்புதமான வெற்றியைத் தந்தார். மேலும், தெபோராளின் ஆரவாரம் வெற்றியை உறுதிப்படுத்தியது. "கீசோன் நதி, பூர்வ நதியாகிய கீசோன் நதியே, அவர்களை அடித்துக் கொண்டுபோயிற்று; என் ஆத்துமாவே, நீ பலவான்களை மிதித்தாய்" (நியாயாதிபதிகள் 5:21).

சிசெரா தன்னுடைய இரதத்தை விட்டிறங்கி, யுத்தத்திலிருந்து தப்பி ஓடினான். அவன் யாகேலின் கூடாரத்திற்குள் தஞ்சம் புகுந்தான் (இந்த கேனியர்கள் இராஜாவாகிய யாபீனோடு சிநேகிதர்களாக இருந்தனர்). யாகேல் சிசெராவை இரகசியமாய்ப் பாதுகாப்பதாக ஒப்புக்கொண்டு அவனுக்குப் பாலை குடிக்கக்கொடுத்தாள்.

அவன் ஆயாசமாய்த் தூங்கினப் பின்பு, ஒரு கூடரர ஆணியை எடுத்து அவனுடைய நெற்றியில் அடித்து அவனைக் கொலை செய்தாள். பாராக் சிசெராவை தேடி வந்தபோது, தெபோராளின் தீர்க்கதரிசனம் நிறைவேறினதைக் கண்டார். இந்தக் காரியத்தில், சிசெராவை ஜெயித்த வெற்றி யாகேலைச் சென்றடைந்தது (நியாயாதிபதிகள் 4:17-22).

**தெபோராளிடமிருந்து பாடங்கள்**

தெய்வீக தலைமை வகித்த தெபோராளின் எடுத்து காட்டிலிருந்து நாம் எதைக் கற்றுக்கொள்ளலாம். அவள் எடுத்த ஞானமான முடிவுகள் மெச்சிக்கொள்ளப்படுகிறது. அவள், "இஸ்ரயேலின் தாய்" (நியாயாதிபதிகள் 5:7) என்று அழைக்கப்பட்டாள். அவள் தைரியமாக தேவனுடைய கற்பனைகளைப் பேசினாள். வெற்றியின் ஒரு பாடலில் அவள் தேவனைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினாள் (நியாயாதிபதிகள் 5). அவளுடைய பெயரின் அர்த்தத்திற்கு ஏற்றவாறு ஒரு வாழ்க்கை வாழ்ந்தாள். தேனீ, சுறுசுறுப்பு, பொறுமை, கடுமையான உழைப்பு மற்றும் பயனுள்ள தெபோராளின் வாழ்க்கையில் எவ்விதமான அவதூறுக்கும் இடமிருக்கவில்லை. தெபாராள் பெற்றிருந்த தெய்வீக தலைமை, இஸ்ரயேலுக்கு 40 வருடங்கள் சமாதானத்தைத் தந்தது.

நாம் தெபோராளின் மாதிரியைப்பின்பற்றி, நல்ல முடிவுகளையும், ஞானமுள்ள தேர்வுகளையும் எடுத்து, தைரியத்தோடு தேவனுடைய மேற்கொள்ளும் நன்மைகளை விசுவாசித்து கடைபிடித்து, மற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வாஞ்சையை உடையவர்களாக இருக்க வேண்டும். "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (2 தீமோத்தேயு 1:7) என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

**ரூத்-விசுவாசமுள்ள ஒரு மறுமகள்**

நியாயாதிபதியின் காலத்தில், பெத்லெகேமில் ஏற்பட்ட ஒரு பஞ்சத்தில் எலிமெலேக்கு தன் மனைவி நகோமி மற்றும் இரண்டு குமாரர்களாகிய மக்லோன் மற்றும் கிலியோனோடும் கிழக்கு திசையிலுள்ள மோவாப் தேசத்திற்குச் சென்றான். எலிமெலேக்கு மரித்துப்போனான். அவனுடைய இரண்டு குமாரர்களுக்கு மோவாபிய ஸ்திரீகளைத் திருமணம் செய்தார்கள். - மக்லோன் ரூத்தை விவாகம் செய்தான். கிலியோன் ஓர்பாளை விவாகம் செய்தான். பத்து வருடங்களுக்குள் அந்த இரண்டு குமாரர்களும் மரித்து விட்டார்கள். மோவாப் தேசத்தில் மூன்று விதவைகள் மீதியிருந்தார்கள் (ரூத் 1:1-5).

பெத்லெகேமில் சூழ்நிலைகள் சாதகமாக இருப்பதை நகோமி கேள்விப்பட்டபோது, அத்தேசத்திற்குத் திரும்பிப்போவதற்கு முடிவெடுத்தாள். தன்னுடைய மறுமக்களை அவர்களின் தாய் வீட்டிற்குச் சென்று, அங்கு மறுமணம் செய்து கொள்ளும்படி அவர்களை ஊக்குவித்தாள். ஓர்பாள் தயக்கத்துடன் சென்றுவிட்டாள். ஆனால்,

"ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்" (ரூத் 1:16) என்று கூறினாள்.

நகோமி மற்றும் ரூத் பெத்லெகேமுக்கு வந்தபோது வாற்கோதுமையின் அறுவடை துவங்கும் காலமாக இருந்தது. அப்பொழுது அருகாமையிலிருந்த வயலில் வாற்கோதுமை பொறுக்கும்படி போனாள். அந்த வயல் ஐசுவரியவானாகிய போவாசுடையதாக இருந்தது. ரூத் தன் மாமியிடம் மிகுந்த விசுவாசம் கொண்டிருந்தபடியால், போவாஸ் அவளிடம் பட்சமாக நடந்து கொண்டான். போவாசின் தயாள குணத்தைக்குறித்து ரூத் நகோமியிடம் கூறினாள். அறுவடையின் முடிவுவரையில் ரூத் தொடர்ந்து போவாசின் வயலுக்குச்சென்று தானியங்களைப் பொறுக்கினாள் (ரூத் 1:22; 2:23).

போவாஸ் எலிமெலேக்கின் குடும்பத்திற்கு மிக நெருங்கிய உறவுக்காரர் என்பதையும் நியாயப்பிரமாணத்தின் முறைமையின்படி, விதவையாகிய ரூத்தை விவாகம் செய்வதற்கான உரிமையையும் போவாஸ் பெற்றிருந்தார் என்பதை நகோமி நன்கு அறிந்திருந்தாள். ஆகவே, நகோமி ரூத்தை போவாசிடம் அனுப்பினாள். மேலும், "அவன் படுத்துக்கொண்டபோது, அவன் படுத்திருக்கும் இடத்தை நீ பார்த்திருந்து போய், அவன் கால்களின்மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கி நீ படுத்துக்கொள்; அப்பொழுது நீ செய்யவேண்டியது இன்னதென்று அவன் உனக்குச் சொல்லுவான்" (ரூத் 3:4) என்றும் கூறினாள். ரூத், நகோமி சொல்லியிருந்தபடியே செய்தாள்.

ஒரு ஸ்திரீ பாதத்தண்டையில் படுத்திருப்பதைக்கண்டு போவாஸ் அதிர்ச்சியடைந்தார். அவள் யார் என்று விசாரித்தபோது, "அவள், நான் உம்முடைய அடியாளாகிய ரூத்; நீர் உம்முடைய அடியாள்மேல் உம்முடைய போர்வையை விரியும்; நீர் சுதந்தரவாளி" (ரூத் 3:9) என்று பதில் அளித்தாள்.

போவாஸ் அவளை ஆசீர்வதித்து, அவளுக்கு தேவையான காரியங்களைச் செய்வதற்கு ஒப்புக்கொண்டான். "இப்போதும் மகளே, நீ பயப்படாதே; உனக்கு வேண்டியபடியெல்லாம் செய்வேன்; நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாம் அறிவார்கள்" (ரூத் 3:11). அவர் நெருங்கிய உறவுக்காரராக இருந்ததாலும், அவரைக் காட்டிலும் மிக நெருக்கமான உறவுக்காரன் ஒருவன் இருப்பதாகக் கூறினார். ஆகவே, முதலில் அவனிடம் பேச வேண்டும் என்று போவாஸ் கூறினார். அதிகாலைவரை ரூத் அவருடைய பாதத்தருகே தங்கியிருந்தாள்.

அந்த நாள் காலையில், இந்தக் காரியத்தைக்குறித்து போவாஸ், பத்து பேரோடு, பட்டணத்து வாசலில் சம்பாஷித்தார். அந்த மனுஷனோ நகோமியின் நிலத்தை எடுத்துக்கொள்வதற்கு முன் வந்தான். ஆனால், தன்னுடைய வம்சத்திற்குப்பதிலாக நகோமியின் வம்சம் வளருவதற்கு ரூத்தை திருமணம் செய்துகொள்ள மறுத்தான். ஆகவே, அவள் கொண்டிருந்த மீட்பின் உரிமையைத் திரும்பக்கொடுத்துவிட்டு, ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தினான். "மீட்கிறதிலும் மாற்றுகிறதிலும் சகல காரியத்தையும் உறுதிப்படுத்தும்படிக்கு, இஸ்ரவேலிலே பூர்வகால வழக்கம் என்னவென்றால், ஒருவன் தன் பாதரட்சையைக் கழற்றி, மற்றவனுக்குக் கொடுப்பான்; இது இஸ்ரவேலிலே வழங்கின உறுதிப்பாடு. அப்படியே அந்தச் சுதந்தரவாளி போவாசை நோக்கி: நீர் அதை வாங்கிக்கொள்ளும் என்று சொல்லி, தன் பாதரட்சையைக் கழற்றிப் போட்டான்" (ரூத் 4:7-8). அப்போது, போவாஸ் விதவையான ரூத்தை திருமணம் செய்துகொள்ள தகுதி பெற்றார்.

போவாஸ் ரூத்தை திருமணம் செய்து கொண்டபின் ஒரு குமாரனைப் பெற்றெடுத்தார்கள். "அயல்வீட்டுக்காரிகள் நகோமிக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்தது என்று வாழ்த்தி, அதற்கு ஓபேத் என்று பேரிட்டார்கள்; அவன் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன்" (ரூத் 4:17). ரூத், ராகாபின் மறுமகளும், தாவீது இராஜாவுக்குப் பெரிய பாட்டியுமாக இருந்தாள். அவளுடைய பெயரைக்கொண்ட இந்தப் புஸ்தகத்திலுள்ள அவளுடைய கதை அவளுடைய தைரியத்தையும், கடுமையான விடாமுயற்சி, உறுதி மற்றும் அவளுடைய இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறது. தேவன் மேல் வைக்கும் விசுவாசமானது ஒரு நம்பிக்கையுள்ள இயல்பான வாழ்க்கையை வாழக்கூடியவருக்கு வியக்கத்தக்க அசாதாரணமான வருங்காலத்தைப் பெறுவார்கள் என்று இந்தச் சரித்திரத்தில் எடுத்துகாட்டப்படுகிறது.

**சுருக்கம்**

பழங்காலத்து இஸ்ரயேலில் வாழ்ந்த இந்த ஸ்திரீகள் தங்களுடைய கிரியைகளினால் தங்களுடைய விசுவாசத்தை எவ்வாறு வெளிப்படுத்தினார்கள் என்று அவர்களுடைய வாழ்க்கையை நாம் மீண்டும் பார்வையிடும்போது புரிந்துகொள்ளலாம்.

ராகாப் மற்றும் ரூத் புறஜாதிகளாக இருந்தபோதிலும், இஸ்ரயேலின் தேவனே ஒன்றான மெய்தேவன் என்பதை அடையாளம் கண்டு கொண்டார்கள். அந்த இரண்டு வேவுகாரர்களைப் பாதுகாப்பதற்காக ராகாப் தன்னுடைய ஜீவனைப் பணையம் வைத்தாள். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களோடு வாழ்வதற்கு ரூத் தன்னுடைய குடும்பத்தையும், தாய் தேசத்தையும் விட்டுவந்தாள். இவர்கள் இஸ்ரயேலுக்குள் பிரவேசித்தபோது, இவர்களின் விசுவாசத்திற்கு மிகுதியாய்ப் பரிசளிக்கப்பட்டது. ராகாபின் குமாரனாகிய போவாஸ் ரூத்தை திருமணம் செய்த இயேசுவுக்கு முன்னோர்களானார்கள்.

தேவனுடைய ஜனங்கள் தன்னுடைய ஜீவனையும், தன் குடும்பத்தாரின் ஜீவனையும் நிச்சயமாகக் காப்பாற்றுவார்கள் என்ற நிலையான நம்பிக்கையினிமித்தம் ராகாபினுடைய பெயர் எபிரெயர் 11:31-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தெபோராள் என்ற பெயர் தனியாக குறிப்பிடப்படாவிட்டாலும், கிதியோன், பாராக், சிம்சோன் மற்றும் யெப்தா என்று நான்கு நியாயாதிபதிகளைக்குறித்து அடுத்த வசனம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது (எபிரெயர் 11:32). தெபோராள் தேவன் பேரில் வைத்திருந்த அசைக்க முடியாத விசுவாசத்தினிமித்தமாகவும், அவள் தன்னோடுகூட வந்ததினாலும், பாராக் தன்னை பயமுறுத்தக்கூடிய எதிராளிக்கு விரோதமாகப் போர் தொடுத்தான்.

"மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும்" (லூக்கா 18:27) என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளை நினைவுகூர்ந்தபடி நாம் ஒவ்வொருவரும் வெற்றி சிறக்க ஒருவரையொருவர் ஊக்குவிக்கக்கடவோம்.

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்" (எபிரெயர் 11:6).

எந்தச் சூழ்நிலைகளிலும், எப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலும், நாம் ஒன்றான மெய் தேவனைப் பின்பற்றி, அவருடைய சித்தத்தைச் செய்வதற்குக் கடுமையாக முயற்சிப்போம். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" (மத்தேயு 6:33).


"ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (1கொரிந்தியர் 15:58).

**மனம் தளர்ந்த பயணியரே**

மனம் தளர்ந்த பயணியரே, சிரம் சிலிர்த்து எழுந்திடுவீர்,
வீணான பயமனைத்தும் காற்றுக்கிரையாக்கிடுவீர்,
கல்வாரி மலைதனிலே மரித்தவரே வந்துவிட்டார்,
ஆயிரமாண்டாட்சியினை ஆனந்தமாய் நடத்திடவே.
தேவ செய்தி கொண்டுவந்த மாந்தர்களால் முன்னுரைத்த,
ஆயிரமாண்டாட்சியிலே ஆசீர்கள் புவியினுக்கே,
சீயோனின் மகிமைப்பிரகாச காலை வேளையிதுவே,
இதைத்தானே தீர்க்கரெல்லாம் முன்னுரைத்தார் ஆதியிலே.
உலகமெலாம் ஆசீர்வாதம் செல்லும் செய்தி உரைத்திடுவீர்,
நெருங்கிவரும் ஓய்வுகால நினைவதனை பேசவைப்பீர்,
பூமியிலே ஆயிரமாண்டு நிலை நிற்கும் என்றேதான்,
ஒடுக்கப்பட்ட தேசங்கள் ஒவ்வொன்றாய் கூறிடுவீர்.
ஒருபொழுதில் மேகங்கள் என்னசெய்தால் நமக்கென்ன?
நீலவானில் பரிதி உதிக்கும் காலையிலே மேகங்கள் நின்றிடுமோ? (பரிதி- சூரியன்)
வாக்களித்த சூரியனோ மகிழ்வுடனே விரைவாகத் தோன்றியதே,
ஆயிரமாண்டாட்சியிலே உதித்தெழுந்தே நடுவானில் பிரகாசிக்கும். --போனர்.

மரியாள், மார்த்தாள், லீதியா மற்றும் பிரிஸ்கில்லாள்

# சரியான இடம் மற்றும் சரியான நேரம்



George Kuzmin

"இவைகளை அப்போஸ்தலருக்குச் சொன்னவர்கள் மகதலேனா மரியாளும், யோவன்னாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், இவர்களுடனேகூட இருந்த மற்ற ஸ்திரீகளுமே" (லூக்கா 24:10).

அமைதியற்ற நிலையிலுள்ள ஒரு ஸ்திரீ, தொழில் செய்யும் ஒரு ஸ்திரீ, வீட்டில் இருக்கும் ஒரு ஸ்திரீ - இந்த ஸ்திரீகள் பொதுவாக எதைப் பெற்றிருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக தேவனால் தேர்வு செய்யப்பட்டார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் சரியான நேரத்தில், சரியான இடத்தில், இருதயத்தில் சரியான நோக்கத்தைப் பெற்றிருந்தார்கள். ஒரு காலத்தில் புருஷர்கள் அதிகமாக மதிக்கப்பட்ட ஓரிடத்தில், இந்த மூன்று ஸ்திரீகளும் கிறிஸ்துவுக்காக ஊழியஞ்செய்வதற்கான விசேஷித்த பொறுப்புகளைப் பெற்றிருந்தார்கள்.

### மரியாள் மற்றும் மார்த்தாள்

துக்கத்தின் தொனி காற்றில் கலந்ததினால் சுற்றியுள்ள நண்பர்களும், அயலகத்தார்களும் கூடி வந்தனர். இயேசு வந்திருந்தால் லாசரு மரித்திருக்கமாட்டார். அவர் அங்கு வராத காரணத்தை அவருடைய சகோதரிகளினால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் இயேசுவுக்கு செய்தி அனுப்பிவிட்டு அவருக்காகக் காத்திருந்தார்கள். ஆனாலும் அவர் வரவில்லை. லாசரு மரித்து அடக்கம் பண்ணப்பட்டார். இது ஒரு பெரிய ஏமாற்றமாக இருந்தது. இயேசு ஏன் வரவில்லை என்ற கேள்வியைக் கேட்ட நண்பர்களுக்கு இவர்களால் விடையளிக்க முடியவில்லை. அதற்குப் பின் இயேசு வருவதாகச் செய்தி வந்தது. மார்த்தாள் உடனடியாக அவரைச் சந்திக்கும்படி ஓடினாள். அவளுடைய விசுவாசத்தையும் ஏமாற்றத்தையும் மிகத்தெளிவாக அவளுடைய வார்த்தைகள் வெளிப்படுத்துகிறது. "மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து: ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான். இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள்" (யோவான் 11:21-22).

இதினிமித்தம் இயேசு மார்த்தாளிடம் தன்னைக்குறித்த ஒரு மிக முக்கியமான சத்தியத்தை அறிவித்தார். "இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவான் 11:25). உயிர்த்தெழுதலின் உண்மைகளை இயேசு மார்த்தாளிடம் வெளிப்படுத்தினார். அதற்குப் பின் இயேசு கல்லறைக்கு வந்தபோது முதல் பாவத்தினால் இந்த உலகத்தில் மரணத்தினால் வந்த துன்பத்தையும் துக்கத்தையும் கண்டு அழுதார். நன்றியறிதலுள்ள ஒரு ஜெபத்தை ஏறெடுத்தப் பின், "லாசருவே வெளியே வா" என்று உரத்த சத்தத்தோடு அவரை அழைத்தார். அப்பொழுது உயிர்த்தெழுதலைப்பற்றிய நிஜம் வெளிப்படுத்தப்பட்டது (யோவான் 11:43).

மார்த்தாள் சமைக்கக்கூடிய வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும், மரியாள் இயேசுவின் பாதத்தருகே அமர்ந்து அவரிடமிருந்து கற்றுக்கொண்டிருந்தாள் (லூக்கா 10:38-42). ஆயினும், அவர்கள் விசுவாசம் உறுதிப்பட வேண்டியதாக இருந்தபோது, மார்த்தாள் இயேசுவை சந்திக்க ஓடினாலும், மரியாள் வீட்டில் அமர்ந்திருந்தாள். மார்த்தாள் சரியான நேரத்தில், சரியான இடத்தில், சரியான மனநிலையோடும், நோக்கத்தோடும் இருந்ததினால், அவளுடைய சகோதரனை உயிரோடு எழுப்பக்கூடிய விஷயத்தை இயேசு மார்த்தாளுக்கு முதலில் வெளிப்படுத்தினார்.

### மகதலேனா மரியாள்

வாரங்கள் கடந்தது, அதிகாலையில் குளிர்ந்த காற்று காலியான தெருக்களில் வீசிக்கொண்டிருந்தபோது ஒரு ஸ்திரீ துரிதமாக ஓடி வந்தாள். நிலா வெளிச்சம் வீசி கொண்டிருந்த அந்த நேரத்தில் வேகமாகச் சென்றுக்கொண்டிருந்த அவள் முகத்தில் கண்ணீர் தாரையாக ஓடியது. அவளுக்கு நம்பிக்கை ஊட்டியவரின் கல்லறைக்குச் செல்ல வேண்டும் என்று தன்னுடைய இருதயத்தின் ஆழத்தில் எண்ணங்கொண்டிருந்தாள். மற்ற ஸ்திரீகளும் அவளோடு வந்தார்கள். இயேசுவின் சரீரத்தை அபிஷேகிப்பதற்கு அவர்களிடம் விலையேறப் பெற்ற சுகந்தவர்க்கங்களும், தைலமும் இருந்தது. ஆனால், அவர்களின் இருதயம் உடைந்தது. அவர்களின் நம்பிக்கை சிதைக்கப்பட்டது. மரித்துப்போன இயேசுவின் சரீரத்தில் சுகந்தவர்க்கமிட்டு அவருக்காக தாங்கள் கொண்டிருந்த அன்பையும் வேதனைகளையும் ஊற்ற வேண்டிய காரியம் மட்டுமே மீதியிருந்தது.

அவர்கள் கல்லறைக்கு வந்தபோது, ஒரு தூதன் அந்த கல்லின் மேல் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். பயப்பட வேண்டாம், இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து விட்டார் என்று அந்தத் தூதன் அவர்களிடம் கூறினார். இதை மற்ற சீஷர்களிடம் சொல்லும்படி அவர்கள் ஓடினார்கள். பேதுருவும், யோவானும் கல்லறைக்கு வேகமாக ஓடினார்கள். ஆனால், "மரியாளே!" என்ற குரலை அவள் கேட்கும்வரையில் அவள் வெளியே நின்று அழுது கொண்டிருந்தாள்.

அப்போஸ்தலர்களுக்கு முன், முதன்முதலில் இயேசு மரியாளுக்குத் தன்னைக் காண்பித்தக் காரணம் என்ன? (அப்போஸ்தலர் 20:11-18). இயேசு எழுப்பப்பட்டபோது பேதுரு எங்கிருந்தார்? யோவான் எங்கிருந்தார்? **இவர்கள் அங்கு இருக்கவில்லை**. அவர்கள் காலியான கல்லறையைக் கண்டார்கள். ஆனால், அவர்கள் திரும்பிப் போய்விட்டார்கள் (யோவான் 20:10). அங்கு இயேசுவை வரவேற்க ஒருவரும் நிற்கவில்லை. ஆனால், துக்கமும் வேதனையும் நிறைந்த மரியாள், சரியான நேரத்தில் இருதயத்தில் சரியான நோக்கத்துடன் சிரியான இடத்தில் நின்று கொண்டிருந்தாள்.

**லீதியாள்**

வருடங்கள் கடந்தது, மற்றொரு ஸ்திரீ அமைதியாக ஒரு நதி கரைக்குச் சென்றாள். அவள் ஒரு சுதேசியாக, அந்நிய தேசத்தில் குடியிருந்தாள். தியத்தீராவிலிருந்து வந்து, வெற்றிகரமாக வாணிகம் செய்யக்கூடிய ஒரு ஸ்திரீயாக இருந்தாள். அவள் பிலிப்பு பட்டணத்தில் ஒரு கடையை ஸ்தாபித்திருந்தாள். ஓய்வு நாளில் அவள் நதிகரைக்குச் சென்று, அங்குக் கூடி வந்த யூத ஸ்திரீகளோடு ஜெபித்து தேவனை ஆராதித்தாள். ஒரு அந்நியன் வந்து இயேசுவைக்குறித்து அறிவித்தான். லீதியாள் மகிழ்ச்சியோடு அதை ஏற்றுக்கொண்டு மேலும் விவரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆர்வமுள்ளவளாக இருந்தாள். அக்காரியங்கள் விருத்தியடைந்தபோது அந்த மனுஷனை தன் வீட்டிற்கு அழைத்தாள். ஸ்திரீகள் அங்கு பிலிப்பு பட்டணத்தில் சபையை ஏற்படுத்தினார்கள் (அப்போஸ்தலர் 16:12-15).

சுவிசேஷத்தின் செய்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு லீதியாள் ஏன் தேர்வு செய்யப்பட்டாள்? மக்கெதோனியாவிலிருந்து ஒரு **மனுஷன்** உதவி கேட்பதுபோல ஒரு தரிசனத்தை அப்போஸ்தலனாகிய பவுல் கண்டார். இயேசுவைக்குறித்து போதிப்பதற்கு அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு **ஸ்திரீயைத்** தெரிந்துகொண்ட காரணம் என்ன? பரிசுத்தமுள்ள யூத மனுஷர் பிலிப்பு பட்டணத்தில் இல்லை. கடின உழைப்பாளிகளாகிய ஸ்திரீகள் அந்த நதிக்கரையில் ஜெபிப்பதற்குக் கூடி வந்தார்கள். அவர்களனைவரும் சரியான நேரத்தில், சரியான இடத்திற்குச், சரியான மனநிலையோடு வந்திருந்தார்கள்.

சரியான இடத்திற்கு, சரியான நேரத்தில் நாம் எவ்வாறு செல்வது? பல நூற்றாண்டுகளுக்கு முன், வெவ்வேறு பழக்கவழக்கத்தில்கொண்டிருந்த இந்த ஸ்திரீகளிடமிருந்து நாம் என்ன பாடத்தைக் கற்றுக்கொள்வது?

சரியான நேரத்தையும், சரியான இடத்தையும்குறித்து தேவனே அறிந்திருக்கிறார். நாம் நம்முடைய தேவனோடும், இரட்சகராம் இயேசு கிறிஸ்துவோடும் நெருங்குவதற்கு வழிகளைத் தேடக்கூடிய மனநிலையை நாம் நமக்குள் வளர்த்துக்கொள்ள வேண்டும். நம்முடைய சித்தங்களை மனப்பூர்வமாகவும் முழுமையாகவும் ஒப்புக்கொடுத்து, அவருடன் நெருங்கி ஜீவிப்பதற்கு முயற்சிக்கும்போது நாம் சரியான நேரத்தில், சரியான இடத்தில் இருப்பதற்கு தேவன் நம்மை நடத்துவார்.

ஒவ்வொரு ஸ்திரீயும் நம்மைப்போலவே சூழ்நிலைகளை எதிர் நோக்கினார்கள். மார்த்தாள் ஏமாற்றமடைந்தாள், மரியாள் துக்கப்பட்டாள், லீதியாள் தொடர்ந்து வணிகத்திலும், வீட்டு வேலைகளினாலும் அழுத்தப்பட்டாள்.

லாசரு மரித்தபோது, மார்த்தாள், மரியாளோடு துக்கம் விசாரிக்க வந்த அநேக நண்பர்கள் உறவினரோடும் வீட்டில் இருந்தாள். ஆனால் இயேசு வருவதை அவள் கேள்விப்பட்டபோது, அவள் அனைவரையும் விட்டுவிட்டு உண்மையான ஆறுதல் பெறக்கூடிய இடமாகிய இயேசுவை நோக்கி ஓடினாள். அவர் இதுவரை வராத காரணத்தையும் அறியும்படி விரும்பினாள். மரியாள் என்ன சிந்தித்து கொண்டிருந்தாள் என்பதைக்குறித்து வேதாகமம் மௌனமாக இருக்கிறது. "இயேசு வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப்பட்டபோது, அவருக்கு எதிர் கொண்டுபோனாள்; மரியாளோ வீட்டிலே உட்கார்ந்திருந்தாள்." (யோவான் 11:20) என்று கூறுகிறது. டேவிட் ஸ்டேன், தன்னுடைய யூதர்களின் புதிய ஏற்பாட்டின் விமர்சனத்தில் (பக்கம் 190) மரியாள் யூத முறைமையின்படி வியாதிப்பட்டு மரித்துப் போனவருக்காக ஏழு நாட்கள் அமர்ந்து துக்கம் அனுசரித்தாள் என்று கூறப்படுகிறது. இந்த இரண்டு சகோதரிகளுமே, துக்கம் அனுசரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், இயேசுவின் வருகையைக்குறித்து கேள்விப்பட்ட மார்த்தாள், முன்னோர்களின் பாரம்பரியத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, இயேசுவை சந்திப்பதற்கு

வீட்டைவிட்டு வெளியே ஓடினாள் என்று சொல்லப்படுகிறது (பக்கம் 190).

பழைய பாரம்பரியத்தைக்காட்டிலும் மார்த்தாள் இயேசுவை அதிகமாக நேசிக்கக்கூடிய மனநிலையைப் பெற்றிருந்தாள். லூக்கா 10:41-42 வசனங்களிலுள்ள பாடங்களை அவள் நன்கு கற்றிருந்தாள். தன்னுடைய வீட்டு வேலைகளுக்கு முதலிடம் கொடுத்ததற்காக அவள் பெற்ற அறிவுரைகளை மனதில் கொண்டவராக, இயேசுவோடு தன்னுடைய நேரத்தைச் செலவிடுவதைக்காட்டிலும் வேறெந்தக்காரியமும் மதிப்புப்பெறாது என்று அவள் அறிந்துகொண்டாள்.

இப்பொழுது அவளுடைய பாரம்பரியத்தை ஒதுக்கிவிட்டு, மற்றவர்களின் விமர்சனங்களைக்குறித்து கவலைப்படாமல், தன்னுடைய இருதயத்தில் இயேசுவைப் பின்பற்றினாள். இயேசு அவளுடைய எதிர்பார்ப்புகளை ஏமாற்றினார். இப்போது அவள் இயேசுவை நேரடியாக சந்தித்து, அவர் வராததற்குக் காரணம் என்னவென்று கேட்டாள். மேலும், இயேசு பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவருக்கு நிச்சயமாகக் கொடுப்பார் என்றும் அவள் உறுதியாக நம்பினாள். இது ஆச்சரியமும் அல்ல, "இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்" (யோவான் 11:5) என்று வசனம் கூறுகிறது. இயேசு மார்த்தாளின் எதிர்பார்ப்புகளை ஏமாற்றினாலும் அவளுடைய வழியைக் காட்டிலும் அவருடைய வழி மிகச் சிறந்ததாய் இருந்தது. லாசருவுக்கு ஒரு புதிதான ஜீவனைக் கொடுத்து, ஆவிக்குரிய வாழ்க்கையில் ஜெநிப்பிக்கப்படுவதற்கும் ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டது. நாமும் சில ஏமாற்றங்களைச் சந்திக்கிறோம்.

நம்முடைய எதிர்ப்புகளுக்கு எதிராக தேவனுடைய வழிகள் இருக்கும்பட்சத்தில் நாமும் ஏமாற்றமடைகிறோம். நம்முடைய ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலுள்ள, தேவனுடைய தனிப்பட்ட திட்டங்களை நாம் அறிந்துகொள்ள முடியாது. நம்முடைய அனுபவங்கள் அனைத்துமே நம்முடைய நித்தியமான நன்மைக்காக தேவன் அனுமதிக்கிறார் என்று வேதாகமம் தெளிவாகக் குறிப்பிடுகிறது (ரோமர் 8:28). மார்த்தாளைப் போல, நம்முடைய எதிர்பார்ப்புகளை தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றவாறு சரி செய்துகொள்ள வேண்டும். நாம் தேவனுடைய சித்தத்திற்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும். அப்போது மார்த்தாளைப்போல நாமும் தேவனுடைய நாமம் மகிமைப்படுவதற்காகப் பயன்படுத்தப்படுவோம்.

**பிரிஸ்கில்லாள் மற்றும் ஆக்கில்லா**

தேவனிடத்திலிருந்து வரும் நம்முடைய எதிர்பார்ப்புகளைக்காட்டிலும் நம்முடைய இருதயத்தை தாழ்மையிலும், நம்முடைய விசுவாசத்தை தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மேலும் உறுதியாகவும், நம்பிக்கைக்குரிய மனநிலையிலும் காத்துக்கொள்ளும் பட்சத்தில், சாதகமற்ற சூழ்நிலைகளும் நமக்கு நன்மையான முடிவுகளை ஏற்படுத்தும்.

ஏமாற்றத்தின் எடுத்துகாட்டு - அப்போஸ்தலர் 18-ஆம் அதிகாரத்தில் ஆசீர்வாதமாக மாறியது. கிபி. 52-ஆம் வருஷம் கிலவுதிராயன் யூதர்களை ரோமாபுரியிலிருந்து வெளியேற்றினபோது ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் அகதிகளானார்கள். இந்தக் கடுமையான அனுபவங்களில் அவர்கள் தேவனுடைய கரத்தைக் கண்டு உணர்ந்தார்கள் என்று கூறுவது சந்தேகமான ஒரு காரியம் தான். அவர்கள் ரோமாபுரியை விட்டு கொரிந்து பட்டணத்திற்குச் சென்றார்கள். தங்களுடைய வீட்டையும், குடும்பத்தினர்களையும், பழக்க வழக்கங்களையும் விட்டு வந்தது எவ்வளவு ஏமாற்றத்திற்குரிய காரியமாகும். அவர்களின் இருதயத்தின் நோக்கம் மிகச் சரியானதாக இருந்ததினால், தேவன் பயன்படுத்தக்கூடிய ஏற்ற இடத்திற்கு அவர்களைக்கொண்டு வந்தார். அவர்கள் கொரிந்து பட்டணத்திற்குச் சென்றபோது, தேவனால் சிறந்த முறையில் அவர்கள் பயன்படுவதற்கான இடத்தை நோக்கிப் போகிறார்கள் என்பதை அவர்கள் அறியாதிருந்தார்கள். இவர்கள் கூடாரத்தொழில் செய்பவர்களாக இருந்தார்கள். ஆகவே, அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களோடு தங்கி வேலை செய்தார். அவர்கள் பவுலிடம் 18 மாதங்கள் தனித்துப் பயிற்சி பெற்றார்கள் (அப்போஸ்தலர் 18:11).

இவர்கள் ரோமானிய பெயர்களையும், ரோமானிய வாழ்க்கையையும் வாழ்ந்தவர்கள். அரசாங்கத்தின் ஒழுங்கினிமித்தம் இவர்கள் வெளியேற்றப்பட்டனர். இப்படியாக, ரோமாபுரியை விட்டுவந்தபோது அவர்கள் அதிகமாக இழந்தாலும், பவுலினிடத்தில் கற்றுக்கொள்வதற்கு சூழ்நிலை சாதகமாக அமைந்தது. பவுல் எபேசு பட்டணத்திற்குச் சென்றபோது ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவரோடு சென்றார்கள். புவுல் எருசலேமுக்குச் சென்றபோது அவர்களைச் சபையை நடத்தும்படி எபேசு பட்டணத்தில் அவர்களை விட்டுச் சென்றார். இந்த விநோதமான வழியில், தேவன் அவர்களைச் சரியான இடமாகிய எபேசுவுக்குக் கொண்டு வந்தார். ஏற்ற நேரத்தில் தேவன் அப்பொல்லோ என்ற மனுஷனை அவர்களிடம்

அனுப்பினார். "அவன் நல்லவனும் பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தான்" (அப்போஸ்தலர் 18:24). அங்கு, அவர்கள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி, தேவனுடைய வழிகளை இன்னும் ஆழமாக அவனுக்கு ஞானமாகப் போதித்தார்கள் (அப்போஸ்தலர் 18:26). ஆக்கில்லா பிரிஸ்கில்லாளைப் போல அப்பொல்லோவும் தேவனுடைய சத்தியங்களைக் கற்றுக்கொண்டு அதைத் தைரியமாக அறிவிப்பதற்கு ஏற்ற தாழ்மையை அவருடைய இருதயத்தில் கொண்டிருந்தார்.

ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாள் அடைந்த ஏமாற்றத்தை, தேவனுடைய சத்தியத்தைக் கற்றுக்கொள்ளுவதற்கான ஒரு வாய்ப்பாக மாற்றிக் கொண்டனர். அவர்களின் தாழ்மையான உள்ளங்களில் காணப்பட்ட அர்ப்பணிப்பு ஏற்ற நேரத்தில் சரியான இடத்திற்கு தேவன் அவர்களை நடத்துவதற்கு வழி வகுத்தது. இவர்கள் பவுலின் ஜீவனுக்காக தங்களுடைய கழுத்தையும் கொடுக்க துணிந்தார்கள். தேவன் கொடுத்த வேலைகளை அவர்கள் முழுமையாக நிறைவேற்றின பின் அவர்கள் ரோமாபுரிக்குத் திரும்பினார்கள் (ரோமர் 16:3-4). அதற்குப் பின் அவர்கள் தொடர்ந்து தேவனுடைய பணியை உற்சாகமாக செய்து, தங்களுடைய வீட்டில் ஜெபக்கூட்டங்களை நடத்தினார்கள். இவர்கள் தேவனிடம் தங்களை முழுமையாக அர்ப்பணித்தார்கள். அதற்காக தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.

**மகதலேனா மரியாள்**

எல்லா கனவுகளும் திடீரென்று முடிவடையும்போது தேவனைப் பிரியப்படுத்தக்கூடிய மனநிலையை மரியாளின் வாழ்க்கையில் நாம் காணலாம். அவளுக்கு அளவுக்கதிகமாக நன்மையைச் செய்து அந்த மனுஷனுக்கு தன்னுடைய அன்பை வெளிப்படுத்துவதற்கும் திருப்தியான சூழ்நிலை அவளுக்கு வாய்க்கவில்லை. அவளுடைய சிந்தையையும், மனநிலையையும் அவர் திரும்பக்கொடுத்தார். அது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் என்று நம்மில் எத்தனை பேர் புரிந்துகொள்ள முடிகிறது?

மரியாள் தோட்டத்தில் நின்று அழுது கொண்டிருந்தாள். இயேசு மரித்த அந்த இரவிலும் அவள் அவரோடிருந்தாள். முதல் காரியமாக ஞாயிறு அதிகாலையில் அவள் கல்லறைக்கு வந்தாள். ஆனால் கல்லறையோ காலியாக இருந்தது. அப்போஸ்தலர்களும் அதைக் கண்டு வீடு திரும்பினார்கள். அவள் துக்கத்தோடு தனிமையில் நின்றாள். இயேசு அவளை சொஸ்தப்படுத்துவதற்கு முன் அநேக பிசாசுகளினால் பட்ட உபத்திரவங்களை நன்கு அறிந்திருந்தார். மன அழுத்தமும், அவமானமும் முற்காலத்தில் அவளுடைய தோழர்களாக இருந்தது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவளுக்கு ஆறுதல் அளித்தவருக்காக அவள் எவ்வளவு ஏங்கியிருக்க வேண்டும்.

இங்கு இயேசு அவளைக் கண்டுபிடித்தார். அமைதியாக அதிகாலை வேளையில் அந்தத் தோட்டத்தில் துக்கத்தால் அமிழ்ந்தவளாக, அந்தக் காலியான கல்லறையைக் கண்டாள். இயேசுவுக்கு என்ன நடந்தது என்று அவளுக்கு இன்னும் புரியவில்லை. தோட்டக்காரனைப் போல ஒரு மனுஷனை அவள் கண்டாள் . அவள் அதிகமாக நேசித்த இயேசு தான் அந்த மனுஷன் என்று உணராதிருந்தாள். "மரியாள்!" என்று இயேசு அவளை அழைத்த ஒரு வார்த்தையில் அவள் அவருடைய கனிவையும், அதிகாரத்தையும் புரிந்து கொண்டாள். அப்போஸ்தலர்களுக்கு முன் உயிர்த்தெழுந்த ஆண்டவரை மரியாள் காணக்கூடிய கனத்தைப் பெற்றாள். சில நேரங்களில் நம்முடைய அன்பானவர்களை இழக்கும்போது நம்முடைய வாழ்க்கையும்கூட சோகத்திலும் துக்கத்திலும் தொலைந்து போனதுபோல தோன்றலாம். ஆயினும், எல்லாவற்றையும் மேற்கொள்ளக்கூடிய தேவனுடைய பிரசன்னத்தை நாம் நன்கு உணரலாம். யோவான் சுவிசேஷத்தில் வாக்களித்தபடி இயேசு நமக்கு அவருடைய சமாதானத்தை விட்டுச் சென்றிருக்கிறார் (யோவான் 14:27).

இயேசு தன்னை வெளிப்படுத்துவதற்கு, மரியாள் சரியான நேரத்தில், சரியான இடத்தில், சரியான மனநிலையில் இருந்தாள். அதுபோல, நம்முடைய துக்கங்களில் அவரே நம்முடைய நித்திய ஆறுதல் என்று அவர்மேல் சார்ந்து இருக்கக்கூடியவர்களின் மத்தியில் அவரே தம்மை வெளிப்படுத்துவார். மரியாளைப்போல நாமும் அவருடைய பிரசன்னத்தை உணரலாம். நாம் புரிந்துகொள்வதற்கும் அதிகமான அவருடைய சமாதானத்தையும் நாம் உணரலாம்.

**சரியான இடத்தைக் கண்டுபிடித்தல்**

சில நேரங்களில், தேவனால் பயன்படுத்துவதற்குரிய இடத்தில் நாம் இல்லையோ என்ற பயம் நமக்கு ஏற்படலாம். சில சகோதரர்கள் தனிமையான சூழ்நிலையில் விடப்படுவதை உணருகிறார்கள். லீதியாளும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாள். சிறிய ஆசியாவிலுள்ள தியத்தீராவில் வணிகம் செய்து வந்த லீதியாள் இப்பொழுது பிலிப்பு பட்டணத்திலும் அதிகமாக

வளர்ச்சியடைந்தாள். ஆயினும், ஓய்வுநாள் தோறும் பட்டணத்திற்கு வெளியில் ஜெபிக்கக்கூடிய இடத்தில் மற்ற ஸ்திரீகளோடு அவளும் கூடிவந்தாள் (அப்போஸ்தலர் 16:13).

சிறிய ஆசியாவில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க பவுலுக்கும் சீலாவுக்கும் தடை விதிக்கப்பட்டது. அதற்குப்பதிலாக, மக்கெதோனியாவிலிருந்து ஒரு மனுஷன் உதவி கேட்பதுபோல ஒரு தரிசனத்தை பவுல் கண்டதினால் மக்கெதோனியாவிலுள்ள முக்கிய நகரமாகிய பிலிப்பு பட்டணத்திற்கு அவர்கள் நேரடியாகச் சென்றார்கள். பிலிப்பு பட்டணம் முழுமையாக ரோமானியர்களின் கட்டுப்பாட்டில் இருந்ததினால், பிலிப்பு பட்டணத்தில் எந்த ஒரு தேவாலயமும் இருக்கவில்லை. ஆகவே, ஓய்வு நாட்களில் பட்டணத்திற்கு வெளியே ஜெபிப்பதற்காக கூட்டங்கூடியவர்களோடு பவுலும், சீலாவும் சென்றனர் (அப்போஸ்தலர் 16:13). மக்கெதோனியாவிலிருந்து ஒரு மனுஷன் கூப்பிடுவதைப்போல தரிசனம் கண்டிருந்தபோதிலும், அங்கு ஸ்திரீகள் மட்டுமே ஜெபத்திற்காகக் கூடியிருப்பதைக் கண்டார்கள். அவர்கள் அமர்ந்து, அங்கு கூடியிருந்த ஸ்திரீகளோடு பேசினார்கள். தேவனை ஆராதித்து ஜெபிப்பதற்கு லீதியாள் ஓய்வுநாளை தேர்வு செய்திருந்ததினால், பவுல் பேச துவங்கும்போது, அவள் சரியான இடத்தில் இருந்தாள். தேவன் அவளுடைய இருதயத்தைத் திறந்தார். அவள் பவுலின் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டாள். அவளும் அவள் வீட்டாரும், ஞானஸ்நானம் பெற்றார்கள். மேலும், "அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டில் வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்" (அப்போஸ்தலர் 16:15) லீதியாள் அவர்களை வேண்டிக்கொண்டாள். பவுல் மற்றும் சீலாவை உபசரித்ததுப்போலவே அவர்களோடு வந்த மற்ற சகோதரர்களையும் லீதியாள் உபசரித்தாள் என்று அப்போஸ்தலர் 16:40-ஆம் வசனம் கூறுகிறது.

இங்கு நம்முடைய சகோதிரி லீதியாளின் குணத்தை நாம் காணலாம். சூழ்நிலைகள் தன்னுடைய வீட்டிலிருந்து வெகு தூரம் அவளை அழைத்து வந்தாலும், ஓய்வுநாள் தோறும் தேவனை ஆராதித்து, ஜெபிப்பதற்கு அவள் தவறவில்லை. அவளுடைய இருதயத்தின் நோக்கங்கள் மிகச் சரியானதாக இருந்ததினால், தேவன் தியத்தீராவிலுள்ள லீதியாளின் வீட்டிற்கு பவுலை அனுப்பாமல், பிலிப்பு பட்டணத்திற்கு அனுப்பினார். எப்படிப்பட்ட ஒரு பாடம் நம்முடைய இருதயங்கள் சரியான நோக்கத்தையுடையதாக இருந்தால், நாம் சரியான இடத்தில் ஏற்றநேரத்தில் இருக்கும்படி அற்புதமாக தேவன் நம்மை வழி நடத்துவார்.

புதிய ஏற்பாட்டின் காலங்களிலுள்ள நம்முடைய சகோதரிகளிடமிருந்து நாம் அதிகமான பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். இவர்கள் நம்மைப் போலல்ல. வெவ்வேறு காலத்தில், வெவ்வேறு பாரம்பரியத்தில் வாழ்ந்தவர்கள். ஆயினும், ஏமாற்றங்கள், துக்கங்கள், அன்றாட வேலைகள், அலுவல்கள் பொறுப்புகள் போன்ற ஒரேவிதமான கடுமையான அனுபவங்களைப் பெற்றார்கள். ஆண்டவரோடு நெருங்கியிருப்பதற்கு மார்த்தாள், மகதலேனா மரியாள், லீதியாள் அனைவரும் தங்களுடைய சூழ்நிலைகளை மேற்கொண்டனர். இவர்கள் தேவனுடைய அங்கீகாரத்தையும், ஆசீர்வாதங்களையும் பெற்றார்கள்.

### நமக்குண்டான பாடங்கள்

நம்முடைய வாழ்க்கையிலும் நாம் அடிக்கடி இப்படிப்பட்ட இதே பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியதாக இருக்கிறது. நமக்கு முன் வாழ்ந்த இந்த பெண்மணிகளை தேவன் எவ்வாறு நடத்தினார் என்பதைக் கண்டு, நாமும் சில விலையுயர்ந்த பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்.

**விமர்சனம்** - ஆண்டவர் மார்த்தாளை மேன்மையாகக் கடிந்து கொண்டபோது, அவள் மிகவும் வேதனையோடு அவமானப்பட்டிருப்பாள். இயேசுவுக்குக் கீழ்ப்படிவதற்காக அவள் அந்த கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொண்டு தன்னுடைய ஜீவியத்தை மாற்றிக் கொண்டாள். அவருடைய வார்த்தைகள் நமக்கு மிக நேர்த்தியான வழியைக் காண்பிக்கும்போது, நாம் நம்முடைய வாழ்க்கையை மாற்றிக்கொள்வதைத் தவிர, தேவனுக்கு நாம் எப்படியாக நம்முடைய பக்தியையும், கனத்தையும் வெளிப்படுத்த முடியும்? (நீதிமொழிகள் 3:11-12). மார்த்தாளும் இயேசுவுக்கு அருகில் இருப்பதற்குக் கற்றுக்கொண்டாள்.

**ஏமாற்றம்** சில நேரங்களில் தேவன் நம்மை ஏமாற்றி விடுகிறார். குறிப்பாக, சில நேரங்களில் தேவனிடமிருந்து **நாம் எதிர்பார்க்கும் காரியங்களை** நாம் பெறுவதில்லை. தாவீதைப்போல "ஏன்?" என்று நாம் கேட்கலாம் (சங்கீதம் 10:13, 22, 88). மார்த்தாள் உணர்ந்ததை இயேசு முன்னதாக அறிந்திருந்ததுபோல, நாம் எப்படிப்பட்ட உணர்வுகளைப் பெற்றிருப்போம் என்று தேவன் நன்கு அறிந்திருக்கிறார். இயேசுவிடம் மார்த்தாள் தன்னுடைய கேள்வியைக் கேட்ட பின் அவள் தொடர்ந்து இயேசுவின்மேல் நம்பிக்கை வைத்திருந்ததை வெளிப்படுத்தினாள். நம்முடைய ஏமாற்றங்களை நாம் அறிக்கையிட்டாலும்,

நம்முடைய வழிகளைக் காட்டிலும் மேலாகவுள்ள தேவனுடைய வழிகளின்மேல் நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்தி அவருடைய வாக்குத்தத்தங்கள் உண்மையானது என்று விசுவாசிக்க வேண்டும் (ஏசாயா 55:9; யோசுவா 23:14).

**வேதனை** - நம்முடைய ஆழ்ந்த துக்கத்தில் தேவனே நம்முடைய உறுதியான ஆறுதல் (சங்கீதம் 56:8). அவரே மன சோர்வுள்ளவர்களின் ஆறுதல் (2 கொரிந்தியர் 7:6). ஆழ்ந்த துக்கத்திலிருந்த மரியாள் இயேசுவினிடம் கூடுமானளவுக்கு நெருங்கி ஆறுதலைப் பெற்றுக் கொண்டாள். தேவன்மேலும், குமாரன்மேலும் வைக்கக்கூடிய நம்பிக்கைக்கு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய மரியாள், ஆண்டவரில் வளர்ச்சியடையக்கூடிய ஊழியத்திற்கு ஒரு தூணாக இருக்கிறாள்.

**தனிமை** - நம்முடைய சூழ்நிலையானது நாம் நேசிப்பவர்களை விட்டு வெகு தூரம் நம்மை எடுத்துச்சென்று, துன்மார்க்கமான உலகத்தில் தனிமையை அனுபவித்தாலும், விலையேறப்பெற்ற விசுவாசத்தைப்பெற்றிருந்த கூடுகைக்கு லீதியாளைப்போல ஐக்கியப்படுங்கள் (எபிரெயர் 10:25).

**நம்முடைய வாழ்க்கையில் நித்தமும் காணப்படும் அழுத்தங்களும் பொறுப்புகளும்** - நம்முடைய வாழ்க்கை நித்தமும் வெகு துரிதமாகக் கடந்துச் சென்றுக்கொண்டிருப்பதினால், தேவனிடத்தில் அருகில் சேர்வதற்கு நாம் அவசியமாக "ஓய்வெடுக்க" வேண்டும். தேவனை துதிக்கவும், ஆராதிக்கவும் லீதியாள் நேரங்களை ஒதுக்கினாள். நம்முடைய அன்றாட வாழ்க்கையில், முதலில் தேவனுடைய இராஜ்யத்தையும், நீதியையும் தேடுவதற்கு நேரத்தை ஒதுக்க வேண்டும்.

நாம் ஒருவேளை சரியான இடத்தில், சரியான நேரத்தில் இராவிட்டாலும் நம்முடைய இருதயத்தின் சிந்தனைகள் சரியாக இருந்தால், நாம் ஆசீவதிக்கப்படுவதற்கான ஏற்ற சூழ்நிலைகளை தேவன் நமக்கு அமைத்துக்கொடுப்பார்.

புதிய ஏற்பாட்டில் காணப்பட்ட இந்த அருமையான சகோதரிகளின் இருதயத்தை இயேசு எவ்வளவு மேன்மையாகத் தூண்டியதை நாம் காணலாம். இதன் வழியாக பரலோக பிதா நம்மிடம் எதிர்பார்க்கக்கூடிய காரியங்களைக்குறித்தும், நாம் பெற வேண்டிய ஆசீர்வாதங்களையும் கூடுமானளவு உற்சாகத்தைக்குறித்தும் நாம் தெளிவாக அறிந்துகொள்கிறோம். இவர்கள் அனுபவங்களில் வெவ்வேறுவிதமான விசவாசத்தின் மாதிரிகளைக் காணலாம். அவரைக் காணாதபோதும் அவர்மேல் அவர்கள்கொண்ட நம்பிக்கையையும் காணலாம். நாமும் நம்மைச் சரியான இடத்தில், சரியான நேரத்தில், சரியான மனநிலையில் இருந்தால், இயேசு அவருடைய ஊழியத்திலும் நம்மைப் பயன்படுத்துவார்.

**முழுதத்தம்**

பரிபூரண சிந்தையிலே பரிசுத்த ஐக்கியம்கொண்டே,
வானளாவ எல்லை கடந்தே உவகையுடனே உயர்ந்து எழுவாய்,
உன்னால் மட்டுமே இதை நிறைவேற்ற முடியுமே,
இதைத்கண்டெடுத்த விலையுயர் முத்துக்கள் எத்துணை ஆசீர்வாதமானவை?
பூமிக்கு மரித்து உம்மில் வாழக் கற்றனரே,
மனித நம்பிக்கைகளுக்கு இறந்து உனக்கு நீயே காணாமற்போனாய்,
என் ஆத்துமாவே, நீ மரிப்பதற்குக் கற்றால்,மகிழ்வாய் வாழலாம்,
உந்தன் முடிவற்ற வாழ்வினிலே புது வாழ்வு ஒன்றைக்கண்டடைந்தோம், சிலுவையின்
பாடம்தன்னை மகிழ்வுடனே கற்றுக்கொண்டோம்,
இயேசு சென்ற பாதையிலே கடும் பிரயாசங்கள் எடுப்பதற்கே கற்றுக்கொண்டோம்,
இம்மை வாழ்வில் நாம் இழந்ததனைக் கணக்கிட்டால்
நாம் மாம்சத்தின் இறப்பினிலே தேவனுக்குள் வாழ்வதனைக் கண்டடைவோம்.

யோவான் ஸ்நானன்

# தீர்மானிக்கப்பட்ட ஒரு பிறப்பு



Robert Brand

"ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப்பார்க்கிலும் பெரியதீர்க்கதரிசி ஒருவனுமில்லை; ஆகிலும், தேவனுடைய ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக்கா 7:28).

யோவான் ஸ்நானனுடைய வாழ்க்கையும், அவரை அழைத்த அழைப்பும் சுவிசேஷ யுக தீர்க்கதரிசகள் அனைவருக்கும் ஒரு சிறந்த மாதிரியாக இருக்கிறார். யூத ஜாதிக்கு மேசியாவை அறிவிக்க யோவான் ஸ்நானன் பிறந்தார். இந்த அழைப்பை அவர் முழு மனதோடு ஏற்றுக்கொண்டு, அந்தப் பொறுப்பை நிறைவேற்ற தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். சுமார் 2000 வருடங்களுக்குப் பின் அதுபோல ஒரு அர்பணிப்பை நாமும் செய்வதற்கு அவர் ஒரு சிறந்த மாதிரியாக விளங்குகிறார். அவருடைய நோக்கத்தைக் கண்டு, நம்முடைய உணர்ச்சிகள் தூண்டப்படுகிறது. வந்திருக்கும் மேசியாவை உலகத்திற்கு அறிவிக்கக்கூடிய பொறுப்பை நிறைவேற்ற நாம் வாஞ்சையுள்ளவர்களாக இருக்கிறோம். நாம் இயேசு கிறிஸ்துவின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு, குணத்திலும் நம்பிக்கையிலும் உறுதியான வளர்ச்சியடைய வேண்டும். யோவானைப் பொருத்தவரையில், இவைகள் சமுதாய புறக்கணிப்போடும் அவமதிப்புகளோடும் நிறைவேறியது.

யோவான் ஸ்நானன் இயேசுவுக்கு உறவினராக இருந்தார். யோவானின் தந்தை ஆலயத்தில் ஒரு முக்கிய பொறுப்பைப் பெற்றிருந்தார். யோவானின் பிறப்பு அற்புதமானது. இதைக்குறித்து காபிரியேல் தூதன் மரியாளிடம் அறிவித்தார். யோவான் ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் பரிசுத்தமுள்ள வாழ்க்கையை வாழ்ந்தார். இவர் தேவனுடைய குமாரனை இந்த உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்கு ஒரு சிறப்புரிமையைப் பெற்றிருந்தார். அவர் கரடுமுரடான வாழ்க்கையை ஒரு துறவியைப்போல வாழ்ந்த அவருடைய வாழ்க்கைமுறை அவருடைய நோக்கத்திற்கு ஏற்றதாக இருந்தது. அவர் சிந்தித்ததைப் பேசினார். எல்லா தீர்க்கதரிசிகளைக்காட்டிலும் இவரை மேலானவர் என்று இயேசு விமர்சித்தார்

தமக்கு முன் வாழ்ந்த அனைத்து பரிசுத்தமுள்ள தீர்க்கதரிசிகளின் கனவுகளையும் யோவான் ஸ்நானன் வாழ்ந்தார். யோவான் மேசியாவைக் கண்டு, அறிவித்து சாட்சி கொடுத்தார் (மத்தேயு 13:16-17). ஆயினும், அவரைப்பற்றி முன் தீர்மானிக்கப்பட்டவைகளை அவர் எப்படி கண்டுபிடித்தார்? பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளால் பேசப்பட்டவர்களில் இவரும் ஒருவர் என்பதை யோவான் எப்படி உணர்ந்துகொண்டார். அவர் அதை எவ்வாறு நிச்சயத்தார்? அந்த இலக்கை நிறைவேற்ற தன்னுடைய வாழ்க்கையில் என்னென்ன முயற்சிகளை ஏறெடுத்தார்?

### அவர் கண்டடைந்த இலக்கு

ஏற்றகால சத்தியத்தைப் படித்த யோவான் தன்னைப்பற்றி முன்னறிவிக்கப்பட்ட காரியங்களைக் கண்டுபிடித்தார். 70 வார தீர்க்கதரிசனம், அவருடைய சிந்தையை திறந்திருக்கக்கூடுமா? அவருடைய பக்தியுள்ள பெற்றோர்களின் மாதிரியும், அவருடைய போதனைகளும் அனுபவங்களும் இதற்குக் காரணமாக இருந்திருக்கக்கூடுமா? அவருடைய தந்தையாகிய சகரியாவின் தீர்க்கதரிசனத்தினாலோ? (லூக்கா 1:76-79) தம்முடைய நாட்களில் இயேசுவை கூர்ந்து கவனித்ததாலோ?

மேல் கூறப்பட்டுள்ள ஏதோ ஒரு வழியிலோ, யாரைக் கொண்டோ தேவன் யோவானை ஆயத்தப்படுதியிருக்க வேண்டும். யோவான் தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டதினால் தேவனுடைய வழிநடத்துதலின் கீழ் ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்ந்தார். நம்மை அழைத்த அழைப்பையும் நோக்கத்தையும்குறித்த செய்திகளை நமக்கு அறிவிக்க இப்படிப்பட்ட வழிகளை தேவன் பயன்படுத்துகிறார். தேவனிடத்தில் நாம் பெற்ற வாஞ்சையும், ஏற்றகால சத்தியத்தை அறிந்துகொள்ளக்கூடிய ஆராய்ச்சியுமே, நம்முடைய வேலைகள் இன்னதென்று நமக்கு வெளிப்படுத்தும் கால தீர்க்கதரிசனங்கள். அதன் துரதிர்ஷ்டத்தை நமக்குக் காண்பித்து, நம்முடைய கிரியைகளை ஊக்குவிக்கும் நம்மை ஆதரித்து வழி நடத்த தேவன் அவருடைய பரிசுத்த தூதர்களை அனுப்புகிறார். தேவனுடைய வேலைகளைச் செய்ய நாமும் தேவ பெலனைப் பெற்றுள்ளோம். நாமும் அழைக்கப்பட்ட இலக்கைக் கண்டுபிடிப்போம்.

நம்மை ஊக்கவிக்கும்படி யோவான் ஸ்நானனின் வாழ்க்கையிலும், அவர் பெற்ற அழைப்பிலும் மறைக்கப்பட்ட பல பொக்கிஷங்கள் உண்டு. இயேசுவின் பிரசன்னத்தை அறிவிப்பதற்கு

யோவான் ஸ்நானனுடைய வாழ்க்கையில் இரண்டு செயல் பூர்வமான அனுபவங்கள் ஒரு புத்தகத்தின் முடிவுபோல காணப்படுகிறது. யோவான் ஸ்நானன் தன்னுடைய தாயாகிய எலிசபெத் வயிற்றில் இருக்கும் போதே முதல் அனுபவத்தைப் பெற்றார். இயேசுவை சுமந்த மரியாள், எலிசபெத்தை சந்தித்து வாழ்த்துதல் கூறினபோது, அவள் வயிற்றிலிருந்த குழந்தை துள்ளிற்று. இதுபோல நாமும் ஆவியினால் கருத்தரிக்கப்பட்ட நிலையில், இயேசு கிறிஸ்துவின் புலப்படாத பிரசன்னத்தை அறிவிக்கக் கூடியவர்களாக இருக்கிறோம் என்பதை இந்த காட்சி நமக்குச் சித்தரிக்கிறது. இரண்டாவதாக, யோவான் ஸ்நானனுடைய வாழ்க்கையின் இறுதியில் அவர் தன்னுடைய சீஷர்களை இயேசுவிடம் அனுப்பி, "வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா?" என்ற கேள்வியை எழுப்பினார்.

யோவான் ஸ்நானனுடைய வாழ்க்கையில் இயேசுவை அறிவிக்கக்கூடிய இந்த அனுபவங்களை நாம் காணும்போது, சுவிசேஷ யுக முடிவில் நம்முடைய வேலைகளின் உள்நோக்கம் நமக்குக் காண்பிக்கப்படுகிறது. முதலாம் அனுபவத்தில் யோவான் ஸ்நானன் இயேசுவைக்குறித்து அவருடைய தாய்க்கும், மரியாளுக்கும் அறிவிப்பதைக் காட்டுகிறது. இரண்டாவது அனுபவம், அவர் மேசியாவைப்பற்றி ஆவிக்குரிய பிள்ளைகளுக்கு அறிவிப்பதைக் காட்டுகிறது. இரண்டு சம்பவங்களிலும், ஆவிக்குரிய பசிதாகமுள்ளவர்களுக்கே இயேசுவின் வருகை அறிவிக்கப்பட்டது. எலிசபெத்தும் மரியாளும் உண்மையில் ஒரு அற்புதமான நிலையில் பல கேள்விகளோடு மனமகிழ்ச்சியான சூழ்நிலையில் இருந்திருப்பார்கள். எலிசபெத்தின் வயிற்றில் யோவான் துள்ளிய காரியம், அந்த இரண்டு ஸ்திரீகளையும் நிச்சயமாக ஊக்குவித்திருக்கும். கூடுதலாக, இயேசுவினிடம், யோவான் அனுப்பிய சீஷர்களின் சந்தேகங்கள் நிச்சயமாக நீக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், இயேசு பல அடையாளங்கள் அற்புதங்களின் வழியாக அவர்களை இரட்சித்தார்.

இந்த இரண்டு சம்பவங்களும், அடையாளமான யோவான் ஸ்நானன் வகுப்பினர் (சபை), சுவிசேஷ யுகத்தின் அறுவடையின் முடிவில் செய்யக்கூடிய அழகான வேலையைச் சித்தரிக்கிறது. "தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள். மனம் பதறுகிறவர்களைப் பார்த்து: நீங்கள் பயப்படாதிருங்கள், திடன்கொள்ளுங்கள்; இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள்" (ஏசாயா 35:3-4) என்று ஏசாயா தீர்க்கதரிசி இந்த வேலையைக்குறித்து பேசுகிறார். யோவான் ஸ்நானன் யூத யுக அறுவடையின்போது செய்த வேலைகளைச் சுவிசேஷ யுகத்தின் அறுவடையின் காலத்தில் சபை வேலை செய்வதற்கான சிறப்புரிமையைப் பெற்றுள்ளது.

யோவான் ஸ்நானனுடைய வாழ்க்கையின் இறுதியில், அவருடைய சிந்தையில் எழும்பின சந்தேகத்தினிமித்தமாகவே, அவருடைய சீஷர்களை இயேசுவிடம் முக்கியமான கேள்விகளுடன் அனுப்பினார் என்று சிலர் நம்புகிறார்கள். இந்தக் கூற்று நிச்சயமாக சாத்தியமல்ல. ஏனெனில், யோவான் தான் பெற்றிருந்த பணியில் மற்ற காரியங்களிலும் உண்மையாக இருந்தார். யோர்தான் நதியில் இயேசுவுக்கு ஞானஸ்நானங்கொடுத்த அந்த நாள் துவங்கி அவருடைய மரணபரியந்தம், யோவான் ஸ்நானன் ஏற்றகால சத்தியத்தை மிகத் தெளிவாக சத்தியத்தை தம்முடைய சீஷர்களுக்குப் போதிப்பதில் மிகவும் விசுவாசமுள்ளவராகவும், அசையா உறுதியுடனும் இருந்தார் - முதலில் மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானம், அடுத்து இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் என்ற போதனையை நித்தமும் போதித்தார். தம்முடைய சீஷர்களிடம் பொருத்தமான கேள்விகளை எழுப்பி, அதன் வழியாகப் போதிக்கக்கூடிய யோவானின் முறைகள் இயேசுவால் ஆசீர்வதிக்கப்பட்டது. மேலும், இத்தகையான போதனைகள் புதிய ஏற்பாட்டில், மிக ஞாபகார்த்தமான போதனைகளாக நினைவுகூரப்படுகிறது. நம்முடைய ஆவிக்குரிய பிள்ளைகளின் கேள்விகளுக்கு இயேசு கிறிஸ்து பதிலளிப்பார் என்ற நம்பிக்கையை நாம் பெற்றிருந்தால் நாம் என்ன செய்வோம்? நாமும் அவர்களை இயேசுவிடம் அனுப்ப வேண்டும்.

### யோவானைப்பார்க்கிலும் பெரியவர்

"ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப்பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்" (மத்தேயு 11:11) என்று இயேசு கூறினார்.

இதுவரைக்குமுள்ள தீர்க்கதரிசிகளில் யோவான் மிகச் சிறந்தவர் என்று இயேசு அறிக்கையிடுவதாக பலர் நம்புகின்றனர். தேவனுடைய சித்தத்தை தனித்து நின்று

செயலாற்றி, தேவனுடைய குமாரனை அறிமுகப்படுத்தக்கூடிய தனித்துவமான சிறப்புரிமையை யோவான் ஸ்நானன் பெற்றிருந்தார் என்பதை இதற்கான காரணமாகக் கூறுகின்றனர். யோவான் ஸ்நானன் தன்னுடைய வாழ்க்கையில் நிறைவேற்ற வேண்டிய பணியை நன்கு அறிந்திருந்தார். அவர் ஒரு நோக்கத்திற்காக தேவனால் தனித்து அனுப்பப்பட்டார் என்பதை அறிந்திருந்தார். எந்தவொரு தேவ ஊழியக்காரரும் இப்படிப்பட்ட ஒரு முரட்டுத்தனமாக திட உறுதியை செயலாற்றவில்லை. அவருடைய வாலிப வயதின் எல்லா பகுதிகளையும் அது பயன்படுத்தித் தீர்த்தது.

எப்படிப்பட்ட சவாலான எதிர்ப்புகள் வந்தாலும், தேவனுடைய சித்தம் செய்வதற்கான முழுமையான அர்ப்பணிப்பை - தேவன் தம்முடைய ஊழியக்காரர்களிடம் பாராட்டக்கூடிய வல்லமையுள்ள குணலட்சணமாகும். தேவன் தனக்கென்று ஒரு பணியை நியமித்திருக்கிறார் என்பதை யோவான் நன்கு புரிந்துகொண்டார். அதுபோல, தேவன் நம்முடைய வாழ்க்கையிலும், குறுக்கிடுவதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். தேவனால் அழைக்கப்பட்டவர்கள் ஒரு நோக்கத்திற்காக அழைக்கப்படிருக்கிறார்கள். அனைவருக்கும் தனித்துவமான வரங்களும் தாலந்துகளும் கொடுக்கப்பட்டுள்ளது. இவைகளை நாம் தேவனை சேவிப்பதற்காகப் பயன்படுத்தும்போது அவைகளை, மேலும் பெருக்கமாகக்கொடுப்பதாக இயேசு நமக்கு வாக்களித்திருக்கிறார். இதன் வழியாக நம்முடைய இலக்கைத் தேடி கண்டுபிடித்து அதை நிறைவேற்றலாம்.

**பரிசுத்தமுள்ள ஒரு கரடுமுரடான துறவியின் வாழ்க்கை**

"அவர்கள் போனபின்பு, இயேசு யோவானைக்குறித்து ஜனங்களுக்குச் சொன்னது என்னவென்றால்: எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ? அல்லவென்றால், எதைப் பார்க்கப்போனீர்கள்? மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ? மெல்லிய வஸ்திரந்தரித்திருக்கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கிறார்கள்" (மத்தேயு 11:7-8).

ஒரு தீர்க்கதரிசியைப்பற்றிய, ஜனங்களின் எதிர்பார்ப்பு எவ்விதத்தில் இருக்க வேண்டும் என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ளும்விதத்தில், இயேசு ஒரு எதிரிடையான கேள்வியை ஜனங்களுக்கு முன் வைத்தார். தேவனுடைய ஊழியக்காரர்கள் பொதுவாக உறுதியாக இருப்பார்கள். இவர்கள், "காற்றுகளினால் எளிதாக அசைக்கப்படுவதில்லை. " மேலும், பெரும்பாலும் இவர்கள் சௌகரியமான வாழ்க்கையையோ, டாம்பீகமான வாழ்க்கையையோ வாழ்வதில்லை. தேவனுடைய ஜனங்கள் சொத்துகளுக்காகவோ, சூழ்நிலைகளுக்காகவோ பக்தியுள்ளவர்களாக இராமல் தேவனுடைய சித்தத்திற்குத் தங்களுடைய எல்லையற்ற பக்தியை வெளிப்படுத்த வேண்டும் என்று யோவான் நமக்குக் காட்டுகிறார். நம்மில் ஆவிக்குரிய காரியங்களில் பலவீனமாக இருக்கக்கூடியவர்கள், ஆவிக்குரிய காரியங்களில் பலவான்களாக மாறுவதற்குரிய பொறுப்பையும் பெற்றிருக்கிறோம்.

யோவானின் கரடுமுரடான வாழ்க்கைமுறையைக்குறித்து ஆர்வமூட்டும் விவரத்தை மத்தேயு பதிவு செய்திருக்கிறார். "இந்த யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான்; வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும் அவனுக்கு ஆகாரமாயிருந்தது" (மத்தேயு 3:4). அக்காலத்தில் தாராளமான யூதர்கள் மற்றும் ஐசுவரியவான்களின் உணவை ஒப்பிட்டுப் பார்க்கும்போது வெட்டுக்கிளியும், தேனும் ஏழைகளின் உணவாகக்கருதப்பட்டது. பார்வைக்கு இப்படிப்பட்ட ஒளிவுமறைவற்ற விறைப்பான ஒரு நபரை இஸ்ரயேலர்கள் விசேஷமாக, தங்களுடைய மதத்தின் தலைவராக தேர்வு செய்வது மிகக் கடினமாக இருந்தது.

இயல்புக்கு மாறாக யோவானின் நடத்தையே, அவர் தம்முடைய வாழ்க்கையை தேர்வு செய்ததின் பலனாக இருந்தது. அனைவரையும் ஈர்க்கும்படியாக அவருடைய பக்தியுள்ள ஆன்மீகத்தின் விளைவாக இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையை தேர்வு செய்தாரா? அவர் தம்முடைய ஊழியத்தில் முழுமையாக ஈடுபட்டதினால் வருமான குறைச்சலினால் இது நடந்ததா? எதுவானாலும், அவர் இயேசுவின் அங்கீகாரத்தையும், நற்சான்றையும் பெற்றதை நாம் கவனிக்க வேண்டும். முதலில் நாம் நம்முடைய பொருளாதார வெற்றியை, தேவனுடைய அங்கீகாரத்துடன் குழப்பிக்கொள்ளக்கூடாது. யோவானைப்போல, நாமும் நம்முடைய வேலைகளில் முழு கவனம் செலுத்தி, அவருடைய வேலைகளைச் செய்யும்போது நமக்குத் தேவையான சகலத்தையும் கொடுத்து அவருடைய வேலைகளை நம் வழியாகச் செய்கிறார்.

கூடுதலாக, "அப்பொழுது பேதுரு பேசத்தொடங்கி: தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய்

அறிந்திருக்கிறேன்" (அப்போஸ்தலர் 10:34-35) என்று அப்போஸ்தலர் கூறுகிறபடி நாம் ஒரு புஸ்தகத்தை அதன் மேல் அட்டையைக்கொண்டு நியாயத்தீர்க்கக்கூடாது, வெளிப்புறமான தோற்றத்தை மிகைப்படுத்திக்கொண்டதால் நம்முடைய வேலைகளில் தளர்ச்சியடைந்து எவ்வளவு ஆசீர்வாதங்களை நாம் இழந்திருப்போம்? அதுபோல, சிலருடைய தோற்றத்தினிமித்தம் எத்தனைமுறைகள் அவர்களைப் புறக்கணித்திருப்போம். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு உதவியாக சில குறிப்பிட்ட உணவுகள் அல்லது கிரியைகள் தவிர்க்கப்படுமேயானால், தேவனுக்காக நாம் வாழக்கூடிய நம்முடைய வாழ்க்கையின் ஆன்மீகக் காரியங்களில் ஊக்குவித்து நாம் சோதனைகளினால் பின்வாங்கிப் போகாமல், நம்முடைய வாழ்க்கைமுறை நம்மைக் காத்துக்கொள்ளும். இதுவே யோவானுடைய வாழ்க்கையைச் சுத்திகரிப்பதற்கு அவருடைய பங்காக இருந்தது.

ஏரோது தன் பாவங்களைக்குறித்து மனம்வருந்த வேண்டும் என்று யோவான் குறிப்பிட்டார். காரியத்தில் அவருடைய அசாதாரணமான தைரியம் வெளிப்பட்டது (லூக்கா 3:19-20). ஏரோது தன்னுடைய ஒன்றுவிட்ட சகோதரனுடைய மனைவியோடு தவறான உறவைக் கொண்டிருந்தான். யோவான் ஒரு விசித்திரமானப் போதகராகக் காணப்பட்டார். ஏரோது ஒரு உயர்ந்த ஆட்சியாளராக இருந்தான். ஏரோதின் வாழ்க்கைமுறையிலுள்ள ஏதோ ஒரு காரியத்தைச் சுட்டிக்காண்பித்தாலும், அவனுடைய வல்லமைக்குப் பங்கம் ஏற்படும். ஆனால், தேவனுடைய தீர்க்கதரிசிக்கு அப்படியல்ல என்று நாம் எண்ணுகிறோம். தேவனுடைய ஜனங்கள் தேவ செய்திகளை அறிவிக்கும்போது கோழைத்தனத்தை அல்லது பயத்தை வெளிப்படுத்தக்கூடாது. அநீதிகளை எடுத்துரைக்கும்போது, பூமிக்குரிய அந்த மனிதர்களின் பதவிகள் அந்தஸ்து மற்றும் அவர்கள் பெற்றிருக்கும் நிலையைக்குறித்து நம்முடைய கடிந்துகொள்ளுதலை மாற்றிக்கொள்ளக்கூடாது. தன்னைக் கொலை செய்து விடுவார்கள் என்று யோவான் நன்கு அறிந்திருந்தாலும் அவர் நீதியின் கோட்பாட்டில் அசையாமல் நின்றார்.

ஆவிக்குரிய பலவீனத்தில் உள்ளவர்களைப் பலமுள்ளவர்களாக மாற்றுவதற்கு யோவான் உதவி செய்தார். அவருடைய பூமிக்குரிய இந்த தரித்திர நிலை, தன்னுடைய வேலைக்கான ஒரு மேடை அமைத்தது. யோவான் தம்முடைய சீஷர்களை இயேசுவிடம் அனுப்பினபோது இக்காரித்தைக் குறிப்பாக நினைவுகூர்ந்தார். இவர்களின் ஆவிக்குரிய நன்மைகளுக்கான கனிவான கவலை, அவருடைய வாழ்க்கையின் முடிவு பரியந்தம், தம்முடைய சொந்த சீஷர்கள் மத்தியில் காணப்பட்டது. இயேசுவைக் காணும்படிக்கு அனுப்பப்பட்ட சீஷர்கள், இயேசுவின் மேசியாவுக்குரிய வேலைகளைக் கண்டு விசுவாசித்து, யோவானின் மறைவுக்குப் பின்னால் இயேசுவைப் பின்பற்றுவதற்கு வாய்ப்பளித்திருக்க வேண்டும்.

இந்த ஒரு கிரியைகளுக்கு நம்முடைய ஆண்டவராம் இயேசுவும் ஒரு சிறந்த மாதிரியாவார். இயேசு பெற்ற கொடூரமான மரணத்திற்கு முன் கெத்சமனே தோட்டத்தில், அவர் பிடிப்படுவதற்கு முன், இயேசு தம்முடைய சீஷர்களின் தேவைகளுக்காக ஜெபித்தார். "அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்" (யோவான் 19:26-27). நாமும் இப்படிப்பட்ட சோதனையின் சூழ்நிலைகளில் அகப்படும்போது, மற்றவர்களுடைய ஆவிக்குரிய நன்மைகளைக்குறித்து கவலைப்படும்போது, நிச்சயமாக நம்முடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய வெற்றியைப் பெறலாம்.

அவர் தம்முடைய பணியைக்குறித்து நிச்சயித்திருந்தார். இயேசுவின் ஊழியத்தின் துவக்கத்தில் அவர் ஞானஸ்நானம் பெறும்படி யோவானிடம் சென்றார். முதலில் யோவான் இதற்குத் தடை செய்ததாக மத்தேயு சுவிசேஷம் கூறுகிறது. "யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான்" (மத்தேயு 3:14).

யோவான், இயேசுவை மேசியா என்று அறிந்திருந்தும் அவருடைய முடிவுக்கு தடைசெய்தது எவ்விதத்தில் நியாயமாகும்? யோவான் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் யாரை அறிமுகப்படுத்தக்காத்திருந்தார்? அதுபோல, இயேசு தம்முடைய பாதங்களைக் கழுவுவதற்குத் பேதுரு தடை செய்தது விநோதமாகத் தோன்றவில்லையா? (யோவான் 13:8). இதுபோன்று யோவான் மற்றும் பேதுருவின் செயல்பாடுகள், இயேசுவைப் பற்றிய நிச்சயமான உறுதியையும், அவர்களின் பணியைப்பற்றி ஆழமான புரிந்துகொள்ளுதலையும் பெற்றிருந்ததாகக் காட்டுகிறது. அவர்களின் முழுமையான இணங்குதல், இயேசுவோடுக்கூட ஒரு

நெருங்கிய ஐக்கியத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

இந்த அனுபவங்கள் அனைத்தும் நமக்கு ஐசுவரியமுள்ள அர்த்தங்களைக்கொண்டுள்ளது. இயேசு எதற்காக ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்ற காரணத்தை அவர் குறிப்பட்டபோது, யோவான் அவருக்குக் கீழ்ப்படிந்தார். கால்களைக் கழுவக்கூடிய முக்கியத்துவத்தைப்பற்றி இயேசு பேதுருவிடம் கூறினபோது, அவர் தன்னை முழுமையாக கழுவும்படி வேண்டிக் கொண்டார். அதுபோல, நம்முடைய வாழ்க்கையிலும், இயேசு தலையிடும் சில காரியங்கள் எதிர்மாறானவைகளைப்போல தோன்றலாம். அப்போது நாம் இயேசுவோடு முன் கொண்டிருக்கும் அதே ஐக்கியத்தோடு காணப்படுகிறோமா? யோவான் ஸ்நானனைப்போலவும், அப்போஸ்தலனாகிய பேதுருவைப்போலவும் இயேசுவை நம்முடைய வாழ்க்கையை வழிநடத்துகிறார் என்பதை நாம் நம்பினால், முதலில் நாம் அவருடைய சித்தத்திற்கும் அவருடைய நீதியின் கோட்பாடுகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும்.

யோவான் தாழ்மையுள்ளவராக இருந்தார். அவர் சுய மகிமையைத் தேடவில்லை. மேசியாவுக்காக தங்களை ஆயத்தம் பண்ணும்படிக்கு, "பாவத்திற்காக மனந்திரும்ப வேண்டும்" என்ற செய்தியே அவருடைய பிரதான பிரசங்கமாக இருந்தது. இதற்கிசைவாக, அவர் சொன்ன காரியங்களிலும், செய்த காரியங்களிலும் இயேசுவையே முன்னிலைப்படுத்தினார். நம்முடைய ஊழியங்களிலும் இந்த மாதிரியை நாமும் பின்பற்ற வேண்டும். ஏனெனில், நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து முடித்த வேலைகளினிமித்தமே நாம் நம்முடைய ஊழியங்களைச்செய்ய முடிகிறது. ஆகவே, நாம் செல்லும் நெருக்கமான வழியிலே, சுயமகிமை தேடுதல், சொந்த விஷயங்களுக்கு முக்கியத்துவத்தைத் தேடுதல், ஒரு சாராருக்கு வெற்றியைத் தேடுதல் போன்ற காரியங்கள் காணப்படக்கூடாது. நாம் நம்முடைய ஊழியத்தில் நிச்சயத்திருக்கிறோமா? நம்முடைய சுத்திகரிப்புக்காக நாம் இதுவரையில் எடுத்திருக்கும் பயிற்சிகள் என்ன? யோவானின் வாழ்க்கை மற்றும் அவருடைய வேலைகளிலிருந்து விலையேறபெற்ற ஆழமான சத்தியத்தை நாம் பெற முடியுமா?

**எலியா, யோவான் மற்றும் நாம்**

ஏதோ ஒரு வழியில், மரித்தோரிலிருந்து எலியா யோவானாக எழும்பி வந்துவிட்டார் என்று எண்ணியவர்கள், குழப்பமடைவதற்கு எல்லா உரிமையும் இருந்தது. "இந்த யோவான் தான் எலியாவா" என்ற கேள்வி இயேசுவிடம் கேட்கப்பட்டபோது, "நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன்தான்" (மத்தேயு 11:14) என்று இயேசு கூறினார். ஆயினும், "அப்பொழுது அவர்கள்: பின்னை யார்? நீர் எலியாவா என்று கேட்டார்கள். அதற்கு: நான் அவன் அல்ல என்றான். நீர் தீர்க்கதரிசியானவரா என்று கேட்டார்கள், அதற்கும்: அல்ல" (யோவான் 1:21) என்று யோவானுடைய வார்த்தைகளை நாம் வாசிக்கின்றோம். ஆகவே, ஆம் அல்லது இல்லை - பதில் என்ன? நியாயமான காரணங்களுக்காக இதற்கான பதில் ஆம் மற்றும் இல்லை என்பதே.

எலியா மற்றும் யோவான் வாழ்க்கைமுறையில் ஒரேவிதமான தீர்க்கதரிசிகளாக இருந்தனர். 2 இராஜாக்கள் 1:8 மற்றும் மத்தேயு 3:4 வசனங்களை தயவுசெய்து ஒப்பிட்டுப்பார்க்கவும். துன்மார்க்கமான ஆட்சியாளர்களை எதிர்ப்பதிலும் (1 இராஜாக்கள் 18:17, 19; மத்தேயு 14:3), இஸ்ரயேலை மனந்திரும்ப அழைத்ததிலும் (1 இராஜாக்கள் 18:39; மத்தேயு 3:5) மற்றும் இருவரும் தீமையான ஸ்திரீகளினால் பாதிக்கப்பட்டார்கள். எலியாவை யேசபேலும், யோவானை ஏரோதியாளும் துன்பப்படுத்தினார்கள்.

"பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான்" (லூக்கா 1:17) என்று வசனங்கள் கூறுகிறது. புதிய ஏற்பாட்டில் யோவான் ஆண்டவருக்கு வழியை ஆயத்தப்படுத்தினதுபோல. பழைய ஏற்பாட்டில் எலியா அதே இடத்தை நிரப்பினார். எலியாவுக்கும் யோவானுக்குமுள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ளுவதற்கான நோக்கம், இயேசுவின் வார்த்தைகளைக் கவனித்த அநேகரிடம் காணப்படவில்லை. ஆகவே, "நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன்தான்" (மத்தேயு 11:14) என்று இயேசு பேச துவங்கினார். நிழலாகிய எலியாவுக்கு யோவான் ஒரு நிறைவேற்றமாகக் காணப்பட்டார். மேலோட்டமாக மட்டுமல்ல, அதையும் தாண்டி, ஆண்டவருடைய ஆழமான ஏற்பாடுகளைத் தேடுபவர்களோடு நாம் இருக்க வேண்டும்.

யோவானுடைய குறுகிய கால வாழ்க்கையில் காணப்படும் அற்புதமான காரியங்கள் மத்தியில், "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப்பார்க்கிலும் பெரியவன்

ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்" (மத்தேயு 11:11) என்று இயேசு கூறினதைப்பற்றி நாம் ஆச்சரியப்படலாம். தேவனுடைய எவ்விதமான ஏற்பாட்டிலும், பரலோக இராஜ்யத்தில் சிறியவன் என்று எண்ணப்படுகிறவன், யோவானைக்காட்டிலும் பெரியவனாக எவ்வாறு எண்ணப்படுவார்? இதற்கான பதில் காலங்களில் காணப்படுகிறது. அதற்குரிய தகுதியைப்பற்றி இங்குக் குறிப்பிடவில்லை. பரலோக அழைப்பு கொடுக்கப்படுவதற்கு சற்று முன்னும் கிறிஸ்துவோடு வாழ்ந்து அவரோடுகூட ஆட்சி செய்து தெய்வீக சுபாவத்தை பங்கடைவதற்கான வாய்ப்புகள் கொடுக்கப்படும் முன்னும் யோவான் மரித்துபோனார். ஆகவே, யோவான் பரலோகத்திலல்ல பூமியில் காணப்படுவார். நாம் பிறந்த இடம் மற்றும் நாம் வளர்ந்த சூழ்நிலையின் வரலாற்றைப் பொறுத்தே இப்போது நாம் வாழக்கூடிய வாழ்க்கையும் செய்யக்கூய காரியங்களும் இருப்பதைப்போல, தேவனுடைய ஒவ்வொரு தெய்வீக திட்டத்தின் யுகங்களிலும் கீழ்ப்படிதலுக்கான பரிசுகள் வேறுபடலாம். பரலோக பிதாவை சேவிக்கக்கூடிய ஒவ்வொருவரும், கற்பனை செய்யும் திறனுக்கு அப்பாற்பட்ட, ஐசுவரியமுள்ள பரிசுகளைப் பெறுவார்கள் என்று நாம் முழுமையாக உறுதி கூறலாம். அனைவரும் பெறக்கூடிய பரிசுகள் "அவரவருக்கு நீதியாகவே" இருக்கும்.

இயேசுவின் முதலாம் வருகையில் யோவான் இயேசுவுக்கு முன்னோடியாக இருந்ததுபோல, இயேசுவின் இரண்டாம் வருகையில் நாம் அனைவரும் இயேசுவுக்கு முன்னோடிகளாக இருக்கிறோம். நம்மைக்காட்டிலும் யோவான் ஸ்நானனுடைய வாழ்க்கைமுறை முற்றிலும் வித்தியாசமானதாக இருந்தாலும், முக்கியமான கோட்பாடுகளாகிய தலைச்சிறந்த அர்ப்பணிப்பு, நேரம், இடம் மற்றும் வாழ்க்கைமுறைகளைப் பார்க்கும்போது, நம்மில் வெகு சிலரே இப்படிப்பட்ட வாழ்க்கையை வாழக்கூடியவராக இருக்கிறோம். ஆனால், நாம் நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கான யோவானுடைய அர்ப்பணிப்பையும், உறுதியையும் பின்பற்றலாமே.


தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு மனப்பூர்வமாக நீங்கள் எவைகளை விட்டுக்கொடுப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறீர்கள்?

**பஸ்காவின் நிரூபணம்**

பிதா எனக்குக்கொடுத்த பாத்திரத்திலே நான் பானம் பண்ணாமலிப்பேனோ?
மதிப்புமிக்க புனிதசிந்தை என் மனதில் எண்ணாதிருப்பேனோ?
அவரன்பு எனக்கு மகிழ்ச்சியைக்காட்டிலும் வலிகளை அதிகம் தந்திட்டாலும்,
என்னைவிட்டு எல்லா நண்பர்களும் பிரிந்து சென்றாலும், நான்
குறைபட்டுக் கொள்வேனோ?
எதிரிகள் என்மீது தவறுதலாய் குறிவைத்து எனக்கெதிராய் தீங்கு பல செய்திட்டாலும்,
எனது தந்தை இதனை அறிந்திருக்கிறார் என்றெண்ணி அமைதியாகவே
இளைப்பாறுவேனே,
என்னுடன் நெருங்கிப் பழகிய நண்பன் ஒருவன் யூதாஸ் என்றே அறியப்பட்டாலும்,
இப்போதும் என் கரத்தை இயேசு பற்றிக்கொண்டுள்ளாரே, அவரன்பு என்னை சூழ்ந்து
பற்றிக்கொண்டுள்ளதே,
அன்பு செய்யும், அன்பு செய்ய மறுக்கும் விசுவாசமில்லா நண்பரைப்பற்றியும் அறிவாரே,
நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் அதன் முடிவையும்கூட அறிந்துள்ளாரே,
அவரன்பு என்னை முழுவதுமாகவே நான் தவறி விழாவண்ணமே கட்டியணைத்துக்
கொள்கிறதே,
எனவேதான் பிதா எனக்குக் கொடுத்தப் பாத்திரத்தில் முற்றும் பானம் பண்ணுவேனே,
இரட்சிப்பின் பாத்திரத்தை கைகளில் எடுத்துக்கொண்டே கர்த்தருடைய நாமத்தைத்
தொழுது கொள்வேனே. -- சங், 116:13

பேதுரு மற்றும் பவுல்

# விசுவாசத்தின் இரண்டு பக்கங்கள்



"இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்" (2 கொரிந்தியர் 4:6).

Todd Alexander

சுவிசேஷத்திற்குச் செவிகொடுக்கும்படியாக, இயேசு பேதுருவின் இருதயத்தை திறப்பதற்கு தந்த ஆழ்ந்த உணர்வுள்ள அனுபவங்களினால் பேதுருவின் உலகம் ஸ்தம்பித்தது. இயேசு பேசின வார்த்தைகள், பேதுருவுக்கு நம்பிக்கையையும், அன்பையும், நோக்கத்தையும் தந்தது. இயேசுவின் அடிச்சுவடுகளில் நடந்த, பலியின் ஐசுவரியமுள்ள பரிசாகிய ஜீவனைப் பெறுவதற்கு இயேசுவுக்காக பேதுருகொண்டிருந்த இருதயபூர்வமான பக்தியை, தான்பெற்றிருந்த உணர்வுகளோடு செயலாற்றும் வழியை பேதுரு நன்கு அறிந்திருந்தார். முதலில் பேதுரு இயேசுவை மேசியாவாக தன்னுடைய இருதயத்திலிருந்து நோக்கினார். பேதுரு இயேசுவைக்குறித்து எவ்வாறாக உணர்ந்தாரோ, அதுவே பேதுருவின் விசுவாசத்தின் துவக்கமாக இருந்தது.

அதற்கு எதிரிடையாக, சில உண்மையான ஆதாரங்களைக்கொண்டு, அவர் தான் மேசியா என்று சுவிசேஷத்தை அறிவித்ததின் மூலமாக தரிசு பட்டணத்தின் சவுலின் சிந்தையை இயேசு திறந்தார். அவருடைய நாட்களில் சவுல் ஆன்மீகத்தில் வல்லவராகவும், நியாயப்பிரமாணத்திலும், யூதர்களின் முறைமைகளிலும் அவர் பெற்றிருந்த தேர்ச்சியான அறிவு சவுலின் விசுவாசத்தைக்குறைத்து, தேவனிடம் சவுல் பெற்றிருந்த உணர்வுள்ள அன்பை உண்மையில் சிறைப்படுத்தியிருந்தது. அவர் தமஸ்குவுக்குப் போகும் வழியில், கண்ட உயிர்த்தெழுந்த இயேசுவின் காட்சி அவருடைய வாழ்க்கையைத் தடுத்து வழி மாற்றியது. இயேசு தான் மேசியா என்று சவுல் தன் இருதயத்தில் நிரூபித்துக்கொள்வதற்கு இந்தக் காட்சி அவசியம் தேவைப்பட்டது. எதிர்பாராதவிதத்தில் நடந்த இந்த சந்திப்பில், பவுல் முதன் முதலில் அற்புதமாக தன்னுடைய மனக்கண்களில் இயேசுவைக் கண்டார். சவுல் இயேசுவைக்குறித்து எப்படியாக சிந்தித்தாரோ, அதுவே சவுலின் விசுவாசத்தின் துவக்கமாக இருந்தது.

சுவிசேஷ யுக சபையின் அழைப்புக்கான, இரண்டு பிரதான மாதிரிகளை அப்போஸ்தலனாகிய பேதுரு மற்றும் அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையிலும் காணலாம். இயேசுவின் அறுவடை வேலைக்காக அழைக்கப்பட்டு, வளர்ச்சியடையச்செய்து, சுத்திகரிக்கப்படுவதற்கு இரண்டுவிதமான ஜனங்களை இவர்கள் இருவரும் அடையாளப்படுத்துகிறார்கள். இயேசுவின்மேல் விசுவாசத்தைத் துவங்குவதற்கான இரண்டு வித்தியாசமான வழிகளை இவர்களின் அழைப்பு சித்தரிக்கிறது. தேவனுடைய இந்த இரண்டு மிகப் பெரிய மனிதர்கள் பெற்ற அழைப்பிலும், உணர்வுகளிலும், அவர்களின் வாழ்நாட்களும் இந்த இரண்டு பாதைகளுக்கு ஆள்தத்துவம் கொடுக்கப்பட்டது. இது விசுவாசத்தின் இரண்டு பக்கங்கள்.

உங்கள் விசுவாசம் உத்தமுமாய் இருக்கிறதா என்று எப்போதாவது நீங்கள் யோசிப்பதுண்டா? உங்கள் சகோதரரின் வேறுபட்ட அழைப்புகளின் வாழ்க்கை அனுபவங்களையும் உங்களுடைய அழைப்பையும் ஒப்பிட்டுப் பார்த்ததுண்டா? பவுல் மற்றும் பேதுரு பெற்ற வித்தியாசமான வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் அழைப்புகளைப்பற்றிய புரிந்துகொள்ளுதல், நம்முடைய வீணான கவலைகளிலிருந்து நிச்சயமாக நம்மைக் காத்துக்கொள்ளும். "தரிசு பட்டணத்து சவுலை பேதுரு தேர்வு செய்திருப்பாரா?" அல்லது "பேதுருவை, அப்போஸ்தலனாகிய பவுல் தேர்வு செய்திருப்பாரா?" என்ற கேள்விகளை நம்மை நாமே கேட்டுக்கொள்ளலாம். தேவன் அவர்களை அழைத்து, இரண்டு மிகப் பெரிய மனிதர்களாக அவர்களின் விசுவாசத்தை வளர்த்ததுப்போல, தேவன் தனிப்பட்ட நோக்கங்களுக்காக தனித்துவமானவருடைய திட்டத்திற்கு நம்மையும் அழைத்து விசுவாசத்தை நமக்குள் வளர்ச்சியடையச் செய்கிறார்.

உணர்வுகள் மற்றும் காரணங்களாகிய இந்த இரண்டு குணங்களே பூமிக்குரிய சிருஷ்டிப்பின் தேவனுடைய உச்சநிலை சிருஷ்டிப்பாகிய மனித இனத்தை தன் உணர்வுள்ளவனாக ஆக்குகிறது. ஆயினும், வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ள ஆதாரங்களின்படி தேவனுக்காக நாம் கொண்டுள்ள உணர்வுகள் மற்றும் தேவனைப்பற்றிய நம்முடைய யோசனைகள் இசைவாக இருப்பதில்லை. இவ்விரண்டும் விசுவாசத்தின் வளர்ச்சிக்குத் தேவைப்படுகிறது (யோவான் 15:7-10). நாம் மற்றவர்கள்மேல் அதிகமான பாரத்தோடு சாய்ந்திருப்பதை தேவன் கண்டால், விசுவாசத்தில்

வளர்ச்சியடைந்து நாம் அதிக சமச்சீராக நிற்பதற்கேற்ற அனுபவங்களைத் தேவன் நமக்குக் கொடுப்பார். ஒருவேளை, அசுத்த ஆவி பீடிக்கப்பட்ட மகன் குணம் பெற்ற பின் அவருடைய தந்தை இயேசுவை நோக்கி, இந்த ஊக்கமிக்க வார்த்தைகளைக் கூறியிருக்க வேண்டும். "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்" (மாற்கு 9:24). நம்பிக்கைக்கு எதிராக இயேசு தம்முடைய குமாரனைக் குணமாக்கிவிடுவார் என்பதை நம்பினார். ஆனாலும், அவருடைய வார்த்தைகளை நாம் கவனிக்கும்போது, அவருடைய இருதயத்தில் அல்லது அவருடைய சிந்தையில் இன்னும் சில இடங்களில் விசுவாசம் வளர்சியடைய வேண்டியதாக இருப்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

**அப்போஸ்தலனாகிய பேதுரு**

மீன்பிடிப்பதற்காக பேதுரு தம்முடைய வலையை கலிலேயா கடலில் வீசுவதை இயேசு கண்டார். பேதுருவை கிரியைகளுள்ள ஒரு மனுஷனாகவும் மற்றும் தன்னுடைய சொந்த நிருபத்தை தானே எழுதி, தன்னுடைய சொந்த சாட்சியை தானே வெளிப்படுத்தக்கூடிய ஒரு மனுஷனாக இயேசு பேதுருவைக் கண்டார். பேதுரு அழைக்கப்பட வேண்டும் என்று தேவன் ஏதோ ஒரு வழியில் இயேசுவுக்கு உணர்த்தினார். நம் ஒவ்வொருவரையும் தேவன் தாமே அழைத்து, அவர்களை ஊழியத்திற்காக இயேசுவிடம் கொடுத்திருக்கிறார் என்பதை நாம் எப்போதும் நினைவில்கொள்ள வேண்டும் (யோவான் 17:6). இந்நாளிலும் நம்மில் ஏதோ பயனுள்ள காரியத்தை தேவன் காண்பதுபோல அண்டசராசரத்தை சிருஷ்டித்த சிருஷ்டிகர், ஏதோ பயனுள்ள காரியத்தை பேதுருவினிடமும் கண்டிருக்க வேண்டும்.

தரிசு பட்டணத்தானாகிய சவுலைப்போல தீர்க்கதரிசனம் வார்த்தைகளில் மூழ்கியிருக்கும் வாய்ப்பை, மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த பேதுருவுக்குக் கிடைக்கவில்லை. ஆனால், அந்தத் தொழிலில் பேதுருகொண்டிருந்த திறமை மற்றும் உணர்வுள்ள அர்ப்பணிப்பானது, சுவிசேஷத்தின் விதைக்கு ஏற்ற நல்ல நிலமாக பேதுரு இருப்பார் என்று இயேசுவுக்கு நிரூபணமானது. ஆகவே, "என்பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" (மாற்கு 1:17) என்று இயேசு கூறினார். இயேசுவின் சத்தத்தின் தொனி என்ன? மனுஷரைப் பிடிக்கக்கூடியவர்களாக மாறும் நம்பிக்கையுடையதாக இருக்கிறதா? தேவன் பேதுருவின் இருதயத்தை இயேசுவுக்கு திறந்தாரா? மீன் பிடிக்கும் தொழிலை விட்டுவிடுவதற்கு இயேசுவின் பிரசன்னம் பேதுருவைக் கட்டாயப்படுத்தியதா? இயேசுவோடு துவக்கத்தில் நடக்கக்கூடிய நாம் அனைவரும் அடிப்படையாக, தூண்டுதலின் கண்ணாடியின் வழியாக தேவனை நோக்கக்கூடிய யாவருக்கும், மேற்கூறப்பட்ட பேதுருவின் அனைத்து காரியங்களும் நிச்சயமாக ஒரு சிறந்த மாதிரியாக இருக்கிறது.

ஆண்டவராம் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பின், தீர்க்கதரிசன வார்த்தைகளின்மேல் அஸ்திபாரம் போடப்பட்ட விசுவாசத்தின் மதிப்பை அப்போஸ்தலனாகிய பேதுரு கற்றுக்கொண்டார். பெந்தெகொஸ்தே நாளில் உலகமெங்குமுள்ள பக்தியுள்ள யூத விசுவாசிகள் மத்தியில் பேதுரு பிரசங்கித்த அந்த அற்புதமான பிரசங்கமே இதற்கு ஆதாரமாக உள்ளது. சமீபமாக நடந்த சம்பவங்களை விவரிப்பதற்கு மிகக் கருகலான தீர்க்கதரிசனங்களை இணைத்து விளக்கமளித்தார். இயேசுவை மறுதலித்த 50-வது நாளிலே, இரட்சகர் பேதுருவை பரிசுத்த ஆவியினால் நிறைத்து, அவருக்குத் தேவையான அறிவைப் புகட்டி, அவருடைய அவநம்பிக்கையை போக்கி, விசுவாசத்தைப் பூரணப்படுத்தினார். நம்முடைய சொந்த வளர்ச்சிக்கும் இது ஒரு அற்புதமான மாதிரியாக உள்ளது. இப்படிப்பட்ட நிலையில் நாம் காணப்பட்டால், இப்படிப்பட்ட அனுபவங்களைப் பெறுவதற்கு நாம் தேவனிடத்தில் ஜெபிக்கலாம். பேதுரு இயேசுவைப் பின்பற்ற துவங்கினபோது, அவருடைய இருதயத்தின் சிந்தையை அவர் பின்பற்றினார். அவர் இயேசுவின்மேல் கொண்டிருந்த அன்பு, அறிவினால் இப்பொழுது அஸ்திபாரம் போடப்பட்டது, இதுவே விசுவாசத்தின் இரண்டு பக்கங்களாம். அன்பினாலோ, அறிவினாலோ நாம் இயேசுவின்மேல் விசுவாசமுள்ளவர்களாக இருந்தால் தேவன் நம்முடைய விசுவாசத்தின் மற்றொரு பக்கத்தை முழுமையாக வளர்ச்சியடையச் செய்வார்.

அவருடைய வாழ்க்கையின் இறுதியில், "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" (2 பேதுரு 1:19) என்று கூறி, அப்போஸ்தலனாகிய பேதுரு தன்னுடைய சொந்த விசுவாசம் முழுமைப் பெற்றிருப்பதின் ஆழத்தை நமக்குக் காண்பிக்கிறார். இங்கு அப்போஸ்தலனாகிய பேதுரு, மலையின்மேல் நடந்த மறுரூப காட்சியில் இயேசுவை தரிசித்த உணர்ச்சியுள்ள அனுபவங்களின் மதிப்பை தீர்க்கதரிசனம் வார்த்தைகளோடு ஒப்பிட்டும்,

வேறுபடுத்தியும் காட்டினார். பேதுரு முதலில் அழைக்கப்பட்டபோது, அவருடைய இருதயம் ஆழமாகத் தொடப்பட்டது. ஆனால், அவருடைய ஊழியத்தின் இறுதி காலத்தில், இயேசுவைக்குறித்த தீர்க்கதரிசனங்களைப் புரிந்துகொண்டதினால் மட்டுமே, அவருடைய விசுவாசம் அளவினால் முழுமைபெற்றது என்று பேதுரு தெளிவாக விவரித்தார்.

பேதுரு உணர்ச்சியினால் தூண்டப்பட்டார். அந்த உணர்வுகளே இயேசுவோடு தன்னுடைய வாழ்க்கையை நடத்த ஒரு திறவுக்கோலாக இருந்தது. பேதுருவின் உணர்வுகளே தைரியமாக இருப்பதற்கான திறனையும், நோக்கத்தையும் தந்தது. எடுத்துகாட்டாக, இயேசுவே கிறிஸ்து என்று முதலில் அறிக்கையிட்டவர் பேதுரு. இயேசுவோடு கடலின்மேல் நடப்பதற்கு படகிலிருந்து முதலில் இறங்கியவர் பேதுரு. நாமும் இவ்வாறாக தூண்டப்பட்டால் நாம் என்ன செய்வோம்? பேதுருவின் உணர்வுள்ள தூண்டுதல் இயேசுவோடு தனிமையில் நடக்க வல்லமை தந்தது. பேதுரு தடுமாறியபோது இயேசு அவரோடு கடற்கரைக்குச்சென்று, அவருடைய உணர்ச்சியுள்ள வாக்குறுதியைப் பாதுகாத்தார். நாமும் தடுமாறும்போதெல்லாம் இயேசு நிச்சயமாக நம்மை இதுபோலவே காப்பார்.

**அப்போஸ்தலனாகிய பவுல்**

பேதுருவைப் போலிராமல், தர்சு பட்டணத்தானாகிய சவுல், தேவனோடு கொண்டிருந்த உணர்ச்சியுள்ள உறவுக்கு அவர் குருடனாக இருந்தார். சவுல் தன்னுடைய இருதயத்தின் சிந்தைக்குச் செவி கொடாததினால், அற்புதமாக இயேசு தமஸ்குவுக்குச்சென்ற சவுலுக்குத் தரிசனமாகி, சவுலின் இருதயத்தில் அவைகளை நம்புவதற்கு அனுமதித்து, இப்படியாக, அவருடைய விசுவாசத்தை முழுமைப்படுத்தினார். நம்முடைய விசுவாசத்தில் தேவனை அறியக்கூடிய நம்முடைய அறிவை வலியுறுத்தக்கூடிய நம் அனைவருக்கும் சவுலின் சம்பாஷணைகள் ஒரு எச்சரிப்புள்ள கதையாக இருக்க வேண்டும். நம்மில் அநேகர், விசேஷமாக, ஒரு குறிக்கோளை எதிர்நோக்கக்கூடியவர்களுடைய அறிவு, மிக எளிதில் அவர்களுடைய இருதயத்தை வரம்பு மீறச்செய்கிறது. வலிமையுள்ள நட்புகள் மற்றும் பிரிவுகள் ஆவிக்குரிய பெருமைக்கு வழிநடத்தும். தர்சு பட்டணத்தானாகிய சவுல் கடந்த கால வாழ்க்கையில் காணப்பட்ட இந்த சமநிலையற்ற பாதிப்புகளை, தன்னுடைய மீதியுள்ள வாழ்க்கையில் சீர்ப்படுத்திக்கொண்டார். "இதனால் நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்" (அப்போஸ்தலர் 24:16). ஒருவேளை அவர் தன்னுடைய சொந்த பாவத்தை உணர்ந்ததினிமித்தம், அவருக்குள்ளிருந்து இந்த அறிவுரைகள் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். "உங்கள் காரியங்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது" (1 கொரிந்தியர் 16:14).

ஊழியத்திற்குப் பயன்படக்கூடிய ஒரு முரட்டுத்தனமான தனித்துவத்தை தேவன் சவுலிடம் கண்டார். சந்தேகத்திற்குக் காரணமின்றி சவுல் தன்னுயை வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தார். கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தின அதே முரட்டாட்டமான உறுதி இப்பொழுது, தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவின் நோக்கத்திற்குப் பணி செய்வதற்கு பயிற்சி அளித்தது. சவுல் பெற்ற அழைப்பை சகோதர்கள் எதிர்பார்த்திராததினால், "அதற்கு கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்" (அப்போஸ்தலர் 9:15) என்று உயிர்த்தெழுந்த இயேசு தர்சு பட்டணத்து சவுலைக்குறித்து கூறியதைக் கேட்ட அனனியா மிகவும் ஆச்சரியப்பட்டார். ஊழியத்திற்காக தேவன் நம்மை அழைத்த அழைப்பைக்குறித்து ஆச்சரியப்படாமல், நம்முடைய விசுவாசம் பூரணப்படுவதற்கு தேவனையும், இயேசுவையும் நம்முடைய வாழ்க்கையில் அனுமதிப்பதற்கு நாம் கடுமையாக முயற்சிக்க வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியத்தில் இரண்டு முக்கியமான எடுத்துகாட்டுகள் அவருடைய தனித்துவமான மனப்பாங்கை மிகச்சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. இயேசுவைப் பின்பற்றுவதற்கு பேதுருவின் தைரியத்தை நாம் காண்பதுபோல, அப்போஸ்தலனாகிய பவுலின் தைரியத்தை, அவர் எதிர்நோக்கின எதிர்ப்புகளில் அவருடைய உறுதியைக் காண்பிக்கிறது. சவுல், கல்லெறியப்பட்டு மரித்தவரைப்போல பட்டணத்துக்கு வெளியே கிடந்தாலும், அவரை கல்லெறிந்தவர்கள் மத்தியில் மீண்டும் அப்போஸ்தலனாகிய பவுலை துணிச்சலாக நிற்கச்செய்தது எது? (அப்போஸ்தலர் 14:20). அப்போஸ்தலனாகிய பவுலின் இரண்டாவது ஊழிய பிரயாணத்தில், "பவுலோ: அவன் பம்பிலியா நாட்டிலே நம்மை விட்டுப் பிரிந்து நம்மோடேகூட ஊழியத்துக்கு வராததினாலே, அவனை அழைத்துக்கொண்டு போகக்கூடாது என்றான்" (அப்போஸ்தலர் 15:38). அவர் சரி என்று நம்பின காரியங்களைச் செய்வதற்கு அவர் பெற்றிருந்த தைரியமே காரணமாக இருந்தது. இந்த

அனுபவங்கள் அனைத்தும் அவருடைய இயல்பான கடுமையான உறுதியோடு இணைந்து, "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை" (2 கொரிந்தியர் 4:8) என்று முடிவைக் கூறும்படி அவருக்கு உதவிசெய்திருக்க வேண்டும்.

ஒருவேளை, ஊழியத்தில் சவுல் கொண்டிருந்த தைரியத்தைச் செயல்படுத்துவதற்குள்ளான ஆற்றலை தேவன் கண்டு, வசனங்களைச் சரியாக உணர்ந்துகொள்ளும்படி சவுலின் புரிந்துகொள்ளுதலை திருத்தி விசுவாசத்தில் வளர்ச்சியடைய செய்திருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவே மேசியா என்ற அறிவே பவுலின் விசுவாசத்தை முழுமையடையச் செய்து, கிறிஸ்துவின் ஊழிய பணிக்கென்று ஒரு வல்லமையான மேடையையும் தந்தது. இப்போது அப்போஸ்தலனாகிய பவுல், உண்மையோடு ஜீவித்து, முழுமையாக தேவனுடைய பணியில் ஈடுபட்டு, இளைஞனான தீமோத்தேயுவுக்கு "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (2 தீமோத்தேயு 1:7) என்று அவரால் அறிவுரைக் கூற முடிந்தது.

அப்போஸ்தலனாகிய பவுலின் அழைப்பு, சம்பாஷணை மற்றும் அவருடைய ஊழியங்கள் அனைத்துமே நமக்கு வழிகாட்டும் ஒளியாக உள்ளது. கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய சொந்த வாழ்க்கையில் அற்புதமான, ஆழமான பார்வையை அவர் கொடுத்திருக்கிறார். எச்சரிப்புக்காவது அல்லது மாதிரிக்காவது கொடுக்கப்பட்ட யூத வசனங்களிலுள்ள விசுவாசத்தின் மாதிரிகளை பவுல் பிரதிபலித்தார். "அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது" (1 கொரிந்தியர் 10:6) என்று அவர் கூறினார். நமக்குப் பயனுள்ள நிழல்களை அதிகாரப்பூர்வமாக, நாம் இஸ்ரயேலர்கள் பெற்ற அனுபவங்களை வசனங்களில் கவனிக்கிறோம். (தீர்க்கதரிசனத்தின் மாதிரியின் வழியாக தீர்க்கதரிசன போதனை) சிவந்த கடலின் வழியாக இஸ்ரயேலர்கள் கடந்து சென்றது, அவர்களின் பஸ்காவைக்குறித்த விபரங்கள் அவர்களின் கீழ்ப்படியாமை மற்றும் தண்டனைகள், நாம் நம்புவதற்கு ஏதுவான மாதிரிகளைக்கொடுக்கிறது. பல காரியங்களில் சமநிலையை அடைய ஜனங்களின் அனுபவங்கள் நமக்குத் தனிப்பட்டமுறையிலும் கிறிஸ்துவின் சரீரத்திற்கும் சம்பந்தம் உள்ளது.

தேவனுக்குப் பணி செய்ய ஏற்ற பாத்திரங்களைக்குறிப்பான மாதிரிகளாக அப்போஸ்தலனாகிய பவுல் நமக்குக்கொடுத்திருக்கிறார். இந்த சுவிசேஷ யுகத்தில் நம்முடைய மாதிரிகளாக நாம் கவனிக்க வேண்டிய சில தனிப்பட்ட நபர்களை (எபிரெயர் 11:1; 12:1) வசனங்களில் பவுல் குறிப்பிடுகிறார். மேலும், இந்த சுவிசேஷ யுக முழுவதிலும் சபைக்குரிய மாதிரியாக அப்போஸ்தனாகிய பவுல் தாமே ஒரு மாதிரியாக முன் வைக்கப்பட்டிருக்கிறார். பவுல் தம்முடைய வாழ்க்கையிலிருந்தும், பழைய ஏற்பாட்டின் விசுவாசிகளின் வாழ்க்கையிலிருந்தும் அனுபவமிக்கப் பாடங்களைக் கற்றுக்கொள்ளும் படிக்கு நமக்குக் கட்டளையிடுகிறார்.

**முடிவுரை**

அப்போஸ்தலனாகிய பவுல் மற்றும் அப்போஸ்தலனாகிய பேதுருவின் வேறுப்பட்ட அனுபவங்களையும் வாழ்க்கைகளையும் ஒப்பிட்டும், வேறுப்படுத்தியும் நாம் பார்க்கும்போது, தேவனுடைய அழைப்பில் இரண்டுவிதமான ஜனங்கள் அழைக்கப்படுகிறார்கள் என்றும், அதில் தேவனுடைய பல்வேறான ஆழமான கண்ணோட்டத்தைப் பெறுகிறோம். நாம் எந்தவகை? முதலில் நாம் தேவனுக்காகப் பெற்றிருக்கும் நம்முடைய அன்பின் வழியாக அவரை கண்டோமா? அல்லது நம்முடைய அறிவின் வழியாக அவரைக் கண்டோமா? நம்முடைய சகோதரர்களில் அதிக பக்தியுள்ளவர்களை அல்லது அதிக அறிவுள்ளவர்களை நாம் பார்த்து தடுமாற்றம் அடைந்திருக்கிறோமா? ஒருவேளை, எருசலேமிலுள்ள சகோதரர்களைக் காண்பதற்கு முன், அரபு வனாந்தரத்தில், அப்போஸ்தலனாகிய பவுல் பெற்ற விசுவாசத்தின் வெற்றியாக இருந்திருக்கலாம். ஒருவேளை, இந்த ஒரு அடையாளம், அவருடைய விசுவாசத்தை முழுமைப்படுத்தக்கூடிய பெலத்தைத் தந்திருக்க வேண்டும். இந்த ஒரு காரியம் கொரிந்து பட்டணத்து சகோதரர்களுக்கு ஒரு எச்சரிப்பாக இருந்திருக்க வேண்டும். " மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும், அடிகளிலும், காவல்களிலும், கலகங்களிலும், பிரயாசங்களிலும், கண்விழிப்புகளிலும், உபவாசங்களிலும், கற்பிலும், அறிவிலும், நீடிய சாந்தத்திலும், தயவிலும், பரிசுத்தஆவியிலும், மாயமற்ற அன்பிலும், சத்தியவசனத்திலும், திவ்விய பலத்திலும்; நீதியாகிய வலதிடதுபக்கத்து ஆயதங்களைத் தரித்திருக்கிறதிலும், கனத்திலும், கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும்;

எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராகவும், அறியப்படாதவர்களென்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும், துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும், சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்" (2 கொரிந்தியர் 6:4-10).

சுவிசேஷ யுக துவக்கத்தில் அறுவடை களத்தில் மிக முக்கியமான வேலைகளை நிறைவேற்றும்படி பவுலையும் பேதுருவையும் தேவன் தெரிந்து கொண்டார். வரக்கூடிய நூற்றாண்டுகளில், இயேசுவின் சீஷர்கள் பின் பற்றுவதற்கான மாதிரியாக, இவ் வேலைகள் உள்ளது. தூண்டுதலாகிய கண்ணாடியின் வழியாக தேவனைப் பார்ப்பவர்களுக்குப் பேதுரு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறார். அறிவின் கண்களின் வழியாக தேவனைப் பார்ப்பவர்களுக்கு பவுல் ஒரு மாதிரியாக இருக்கிறார். ஆனால், ஒரே நபருக்குள் முழுமையான சித்திரங்கள் காணப்படுவது அரிது. நம்முடைய குறிப்பட்ட பல தற்காலிகமான வாழ்க்கையின் அனுபவங்கள் அனைத்தும் இயல்பாக பல வேதாகமம் கதா பாத்திரங்களின் கலவையாகக் காணப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பேதுரு மற்றும் அப்போஸ்தலனாகிய பவுலைப் பற்றிய ஆய்வுகள், நம்மை நாம் அறிந்துகொள்வதற்கு அற்புதமான கண்ணோக்கங்களைத் தருகிறது. நம்முடைய விசுவாசம், நம்முடைய நம்பிக்கை, நம்முடைய நோக்கம் மற்றும் தேவன் பேரிலும் அவரை அறியும் அறிவின் பேரிலுமுள்ள அன்பு.

இவ்விருவரும், உத்தமமான விசுவாசத்தை அடையக்கூடிய இரண்டு வேறுப்பட்ட தெளிவான பாதைளைக் காட்டுகிறது. தேவன் இருவரையும் குறிப்பான நோக்கத்திற்காக தேர்வு செய்து, கிறிஸ்துவின் சரீரத்தில் பொருத்தினார். விசுவாசமானது முதலில் தங்களுடைய இருதயத்திலோ சிந்தையிலோ வளர்ச்சியடைய துவங்கினாலும், அது உத்தமத்தை நிரூபிக்கக் கூடியது என்று சுவிசேஷ யுக சபை இந்த ஒரு காரியமானது உறுதி அளிக்கிறது. தேவனுடைய தேவைக்கு ஏற்றபடியாகவும், அவர்களின் தனித்துவமான குணங்களுக்கு இசைவாகவும், இந்த இரண்டு அப்போஸ்தலர்களையும் தேவன் எவ்வளவு மென்மையாக வளர்ச்சிக்குள் நடத்தினார் என்பதை நாம் காணலாம்.

பேதுருவின் விசுவாசத்தின் துவக்கம், அவர் கொண்டிருந்த அன்பே. ஆனாலும், இயேசுவின் சிலுவை மரணத்திற்குப் பின், பேதுரு ஊழியத்தை விட்டுப்போனபோது அவர் சிந்தையில் அதிருப்தியுள்ளவராக இருந்தார். அவருடைய விசுவாசம் முதலில் அன்பினால் அஸ்திபாரம் போடப்பட்ட பின் தேவன் அவருடைய விசுவாசத்தை அறிவினால் முழுமையாக்கினார். பவுலின் விசுவாசம் அறிவில் துவங்கியது. ஆனாலும், அவர் இருதயத்தில் அதிருப்தியுள்ளவராக இருந்தார். முதலில் அவருடைய விசுவாசம், அறிவில் அஸ்திபாரம் போடப்பட்ட பின், தேவன் அவருடைய விசுவாசத்தை அன்பினால் நிறைவு செய்தார். இந்த இரண்டு மனுஷரிடத்திலும் நேர்மை என்ற குணம் பொதுவாகக் காணப்பட்டது. அவர்கள் தங்களுடைய விசுவாசத்தில் முழுமைப் பெறுவதற்கு இயேசு அவருக்கு ஒரு பாதையை வழி வகுத்தார், அவர்கள் அதில் நடந்து தங்களுடைய விசுவாசத்தை முடித்தார்கள். அதுபோல நாமும் செல்லலாம் ,

மேலும், முழுமைப் பெறக்கூடிய ஐசுவரியமுள்ள விசுவாசத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நமக்குள் நம்பிக்கைக் காணப்படுகிறதா? அதாவது, நாம் எட்டிப்பிடிக்க முடியாமல் விட்டுவிட்ட அந்த நிறைவுள்ள விசுவாசத்தைப் பெற வேண்டும் என்ற கனவுகள் நமக்கு உண்டா? அப்படியானால், அப்போஸ்தலனாகிய பவுலுக்கும், பேதுருவுக்கும் மற்றும் நமக்கும் தேவையான மாதிரிகளைக் கண்டுபிடிக்கலாம். தேவன் கொடுத்த மிகச் சிறந்த, இந்த மாதிரிகளைப் போல, நாமும் நம்முடைய நம்பிக்கைகளையும், கனவுகளையும் நம்பிக்கையோடு செயலாற்றி, தேவன் அவர்களை ஊழியத்திற்கு அழைத்து அவர்களின் விசுவாசத்தைப் பூரணப்படுத்தியதுப்போல, நம்மையும் அழைத்து நம்முடைய விசுவாசத்தையும் பூரணப்படுத்துவார் என்று நம்பலாம். இயேசுவின் அடிச்சுவடுகளில் நடந்து, ஐசுவரியமுள்ள பலியின் ஜீவிய பணிக்கான பரிசைப் பெறுவோம் என்று நம்பிக்கையோடும் இருக்கலாம்.

நம்முடைய கனவுகளும் நம்பிக்கைகளும் உண்மையாக நடந்திட, நாம் எவைகளை மனப்பூர்வமாக விட்டுக் கொடுப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறோம்?

### தீர்க்கதரிசனத்தில் இன்று

# எபோலா தொற்றுநோய்

"இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்" (மல்கியா **4:1-2**).

சமீபத்தில் சர்வதேச அளவிலான மருத்துவர்கள் மேற்கு ஆப்பிரிக்காவில் நடக்கும் எபோலாவிற்கான சிகிச்சையைப்பற்றிக் கூறும்போது, "அந்த சிகிக்கைக்குரிய இடம் மனிதர்கள் மரிப்பதற்காக உருவாக்கப்பட்ட இடம்" என்ற எச்சரிக்கை விடுத்துள்ளனர். உலக நல சங்கத்தின் (WHO) இயக்குநரான டாக்டர் மார்கிரேட் கூறும்பொழுது, "இந்த நோய் அனைவரையும் முழுவதுமாக மூழ்கடித்துவிட்டது." குரியா, லிபிரியா, சீரியா, லீனோ மற்றும் நைஜீரியா போன்ற இடங்களில் **1500-**க்கும் மேற்பட்ட ஜனங்கள் இந்த வைரஸ் கிருமியால் மரித்திருக்கக் கூடும் என்று மதிப்பீடு செய்யப்படுகிறது. வரலாற்றிலேயே மிக மோசமான எபோலா தொற்று நோய் இதுதான் என்றும், பூமியின் ஜனங்கள் இந்த யுத்தத்தில் தோல்வியடைந்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் மிக எரிச்சலுடனும் கூறுகிறார். டாக்டர் மார்கிரேட், இந்த நோய் **1976-**ஆம் ஆண்டு காங்கோ குடியரசில் முதன்முதலில் வந்தது என்று கூறுகிறார். அந்த நோயைப்பற்றின சில உண்மையான முக்கிய குறிப்புகள் கீழே கூறப்பட்டுள்ளன.

* மனிதனுக்கு ஏற்படும் நோயிலேயே மிகக் கடுமையான மற்றும் சாவுக்குரிய நோய்தான் இந்த எபோலா வைரஸ் நோய். இது முதலில் எபோலா இரத்த இழப்பு காய்ச்சல் என்று கூறப்பட்டது.

* இந்த நோய் தோன்றி, பரவுதலின் காரணமாக, ஏறக்குறைய **90**% விழுக்காடு ஜனங்கள் மரணத்திற்கு உள்ளாகிறார்கள்.

* மத்திய மற்றும் மேற்கு ஆப்பிரிக்கா நாடுகளில் இருக்கும் வெப்ப மண்டல மழைக் காடுகளில் இருக்கும் ஒதுக்குப்புறமான கிராமங்களில் தான் இந்த நோய் முதன்முதலாகப் பரவியது.

* இந்த நோய் காட்டு விலங்குகளிலிருந்து மனிதனுக்குப் பரவி, பின்பு மனிதனிடமிருந்து வேறொரு மனிதனுக்குப் பரவ ஆரம்பித்தது.

* பழ வௌவால் தான் இந்த வைரஸ்-ஐ பரப்புவதில் மூலக் காரணமாய் இருக்கிறது.

* இந்த நோயினால் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்ட நோயாளிகளுக்கு தீவிர சிகிச்சைத் தேவைப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட சிகிச்சை முறையோ, தடுப்பூசி, மருந்துகளோ இந்த நோயை குணமாக்க இதுவரை இல்லை.

மிகச் சமீபத்தில் உருவான இந்த எபோலா நோய், AIDS என்ற நோய் ஆப்பிரிக்காவில் உருவானதுபோல, SARS என்ற நோய் ஆசியாவில் உருவானதுபோல, ஒரு வளரும் நாட்டிலேயே உருவானது. ஏழை நாடுகளில் பொது ஜனங்கள் நல நிலையங்கள் நல்ல நிலையில் இயங்காமல் இருப்பதால்தான் இவ்வாறு நிகழ்கிறது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். அமெரிக்காவிலோ, ஆஸ்திரேலியாவிலோ மற்றும் ஐரோப்பாவிலோ இந்த நோய் தோன்றியிருந்தால், அதை மிக விரைவில் உள்ளடக்கி இருப்பார்கள். ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா போன்று வளரும் நாடுகளில் நோய்கள் தோன்றி பரவினால் அது மிக விரைவில் தொற்று நோயாக வளரும் வாய்ப்புள்ளது. அது மிக வேகமாக மனிதர்கள் மூலம் பல கண்டங்களுக்கு ஏன் உலகம் முழுவதுமே பரவும் தன்மைக்கொண்டது.

### வரலாற்றில் காணும் தொற்று நோய்கள்

ஆறாம் நூற்றாண்டில்தான் முதன் முதலில் ஜஸ்ட்டீனியன் என்ற தொற்று நோய் பதிவு செய்யப்பட்டது. அதன் பின் **14-**ஆம் நூற்றாண்டில் கறுப்பு மரணம் என்னும் தொற்றுநோய் அதைத் தொடர்ந்தது. எலிகளினால் நோய் தாக்கிய பூச்சிகள் மூலம் இந்த நோய் பரவியிருக்கக்கூடும் என்று பலர் கருதுகிறார்கள். மூன்று நூற்றாண்டுகள்வரை அந்தக் கறுப்பு மரணம் என்ற கொள்ளை நோய் மனிதர்களைத் தாக்கி ஏறக்குறைய **50** முதல் **70** மில்லியன்வரை இதனால் இறந்திருக்கக்கூடும்.

ஐரோப்பாவில் கறுப்பு மரணம் பரவிக்கொண்டிருந்த சமயங்களில், போப் மற்றும் பேரரசர்களுக்கு ஆலோசகராய் இருந்தவர்கள், கோள்களின் ஒழுங்கின்மையினாலோ அல்லது ஏதோ ஒரு வால் நட்சத்திரம் கடந்து வருவதாலோ இந்த நோய் வந்தது என்று கருதினர். இன சிறுபான்மையினர்களை ஆதியிலும், யூதர்களைப் பலியாடு ஆக்கி, மத்திய ஐரோப்பிய நாடுகளிலுள்ள கிணறுகளில் விஷம் கலந்துவிட்டதாகப் பொய்யாகக் குற்றம் சுமத்தப்பட்டதால், பல படுகொலைகள் நிகழ்ந்தது.

**19-**ஆம் நூற்றாண்டில்தான், சின்ன அம்மை, காலரா மற்றும் பிளேக் போன்ற கொள்ளை நோய்கள் உலகம் முழுவதும் பரவியது. **19-**ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் இந்த நோய்கள் எவ்வாறு விருத்தியடைகிறது என்ற உண்மையான காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. காலரா என்னும் நோய் மாசுப்படுத்தப்பட்ட நீரினால் பரவுகிறது என்பதை ஊகித்தார்கள். லண்டனைச் சேர்ந்த ஜான் ஸ்நோ என்பவர் அதன் பின் பாதிக்கப்பட்ட இல்லங்களையெல்லாம் உருமாற்றி இந்தக் காலரா நோய்க்கு லண்டனில் ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்.

ஒருமுறை இந்த நோய்கள் எவ்வாறு உருவாகிறது, எவ்வாறு பரவுகிறது என்ற உண்மையை அறிந்த பின் நாகரிக மருத்துவத்தின் வளர்ச்சியினால் உடனடியாக அதைத் தடுத்து நிறுத்த முடிந்தது. **20-**ஆம் நூற்றாண்டின் முன் பகுதியில் குளிர்காய்ச்சல் என்ற தொற்று நோய் பரவியது. முதலாம் உலகப் போர் முடிவடைவதற்கு அதுவே ஒரு குறிப்பிடத்தக்க காரணமாய்த் திகழ்ந்தது. **20-**ஆம் நூற்றாண்டின் மத்தியில் பல நோய்கள், அச்சுறுத்தும் நோய்களாகக் கருதப்படவில்லை. எட்வர்டு என்பவர்

சின்ன அம்மைக்கான தடுப்பூசியைக் கண்டுபிடித்தார். எலிகள் மற்றும் கொசுக்கள் கட்டுப்படுத்தப்பட்டது. பொது ஜனங்களின் சுகாதாரநிலை சீர்திருத்தப்பட்டது. பென்சிலின் என்னும் மருந்தின் வருகைக்குப் பிறகு பல தொற்று நோய்கள் நலிவடைந்தன. பல முக்கியமான தொற்று நோய்கள் அகற்றப்பட்டதால், இந்த உலகம் மகிழ்ந்ததாக மின்னிஸோபா பல்கலை கழகத்தின் உலகளாவிய படிப்பு நிறுவனத்தில் இருக்கும் பேராசிரியர் சூசான் கிராடோக் கூறுகிறார். இவர் "Diseases: Emerging Infections in the Global City" போன்ற புத்தகங்களை எழுதியவர்.

### இனி எந்த நோயும் இல்லை

வேதாகமத்தில், எல்லா மனிதர்களின் நோய்களையும் குணமாக்கும் ஒரு பெரிய மருத்துவராக தேவன் குறிப்பிடப்படுகிறார். "அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி" (சங்கீதம் **103:3**). ஏசாயா தீர்க்கதரிசி கூறும்பொழுது - "வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை; அதில்வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்" (ஏசாயா **33:24**). மேலும், "அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்; வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும்" (ஏசாயா **35:5-6**) என்றும் கூறுகிறார்.

சாவு விளைவிக்கும் கொள்ளை நோய்கள், பாவத்தின் பின் விளைவுகள். மேலும் அதுவே மரணம் என்னும் தண்டனை தீர்ப்புவரை கொண்டுச் செல்கிறது. பாவம் ஆதாமின் சந்ததியாரை சிதைத்து, கீழ் நோக்கிக்கொண்டு வந்து, அவருடைய மரபு முழுவதுமாக அதைப் பின் தொடர்ந்து வந்தது. இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்களால் பலர் நோய்களிலிருந்து விடுதலைப் பெற்றனர். ஆனாலும் அவர்கள் மரித்தனர். இந்த அற்புதங்கள் அனைத்தும் நிரந்தர ஆசீர்வாதமாய் அமைய இன்னும் சமயம் வரவில்லை. தேவனுடைய இராஜ்யத்தில் ஜனங்களிடம் காணப்படும் சகல நோய்களும் அற்புதமாக நீக்கப்படுவதை இது பிரதிபலிக்கிறது.

மரணம் என்னும் சாபத்தை மனுகுலத்திற்குத் தேவன் அறிவித்தார். வெளிப்படுத்தல் **22:3**-ஆம் வசனத்தில் அந்தச் சாபத்தை அகற்றவும் வாக்களித்தார். "இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்." இயேசு கிறிஸ்து நமக்குக் கொடுத்த மீட்பின் பரிசின் மூலம் நமக்கு இதற்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சுவிசேஷ யுகத்தில் யாரெல்லாம் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கேற்க அழைக்கப்பட்டுள்ளார்களோ, அவர்களின் சார்பாக இந்த மீட்பு உபயோகப்படுத்தப்படுகிறது. ஆனால் சபை தேர்வு முடிந்தபின், இந்தத் தீமை நிறைந்த பூமியும், அதில் இருக்கும் நோய்களோ, வலிகளோ மரணமோ யாருக்கும் தேவைப்படாது. தேவனுடைய இராஜ்யத்தில் அவர் அனைத்தையும் மாற்றி அமைத்து விடுவார். "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது" (வெளிப்படுத்தல் **21:4**). அப்போஸ்தலர் பவுல் கூறும்போது - "எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகைசெய்யவேண்டியது. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்" (**1** கொரிந்தியர் **15:25-26**). மரணம் அழிந்தது என்றால் மரணத்திற்கு வழிநடத்திச் செல்லும் நோய்களும் அழிந்துவிடும்.

கல்லறையிலிருந்து மனுக்குலத்தை அழைத்து, அவனுக்கு மீண்டும் நல்ல சுகத்தையும், புது வாழ்வையும் கொடுக்கும் சமயம் அருகில் உள்ளது " இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்" (மல்கியா **4:1-2**) என்று தீர்க்கதரிசியாகிய மல்கியா கூறுகிறார்.

இந்தத் தேவனின் நாள் அல்லது இந்த உபத்திரவத்தின் நேரம்தான், இந்த யுகத்தை முடிக்கும் காலம் என்கிறார் இயேசு கிறிஸ்து (மத்தேயு **24:3, 21**). இந்த உலகில் நடக்கும் நிகழ்வுகளைக் காணும்பொழுது, முன்னர் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்ட உபத்திரவத்தின் காலம் அல்லது யுகத்தின் முடிவு இதுவே என்று தெளிவாகப் புலப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் அந்த குணமாக்கும் இராஜ்யத்தின் நேரம் நம் அருகில் உள்ளது. கிறிஸ்துவின் மகிமையான இராஜ்யம் இந்தப் பூமியில் நிறுவப்பட்ட பின் கல்லறையில் இருக்கும் அனைவரும் எழுந்து வருவர் (யோவான் **5:28, 29**). பின்பு பரலோக பிதாவின் பரிசாகிய உண்மையான நீரூற்றிற்கு மனுக்குலம் முழுவதற்கும் இலவசமாக அனுமதி வழங்கப்படும். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக, அந்த உண்மையான நீரூற்றுக்கு முழு மனுக்குலமும் செல்ல, நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவும் அவரது மணவாட்டியும் அன்புடனும், பொறுமையுடனும் வழி நடத்திச் செல்வார்கள். "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" (வெளிப்படுத்தல் **22:17**).

இந்தப் பூமியின் கிருபை மிகுந்த தேவன், இந்த ஒரு இணையற்ற உறுதியை தனது தனிப்பட்ட முத்திரையில் இட்டு மறைத்து வைத்துள்ளார்." சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார்" (வெளிப்படுத்தல் **21:5**).